...நகர சபை, யாழ்ப்பாண...


# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 30 வியாழக்கிழமை (13.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 168


# யுத்தக் குற்ற சுயாதீன விசாரணைக்குப் பிரசாரம்

## முன்னாள் ஐ.நா. மனித உரிமை அதிகாரி முன்னெடுக்கிறார்



கொழும்பு, மே 13

**இலங்கையில் கடந்த வருட மோதல்களின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி பிரசாரம் செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான முன்னாள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் தீர்மானித்திருக்கின்றார்.**

இதன் ஒரு பகுதியாக எதிர்வரும் திங்கட்கிழமை லண்டனில் 'இலங்கையில் யுத்தக் குற்றங்கள்' என்ற மாநாட்டை அவர் ஏற்பாடு செய்துள்ளார்.

தற்போது 'சர்வதேச நெருக்கடிக்குழு' என்ற பிரபல சர்வதேச அரச சார்பற்ற அமைப்பின் தலைவராகவுள்ள லூயிஸ் ஆர்பர் அம்மையார் லண்டனின் பிரபல ஆய்வு நிறுவனமான சத்தாம் ஹவுஸுடன் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளார்.

குறிப்பிட்ட மாநாட்டில் இலங்கையில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆராயப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தன்–பீரிஸ் சந்திப்பு

கொழும்பு,மே13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றதாகக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு நட்பு ரீதியானது என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக அரச தரப்பிலிருந்து இது

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழு 300 குற்றச்சாட்டுக்களை மட்டுமே விசாரிக்கும் என்று அரசாங்கம் அறிவிப்பு

### போரின் போது சரணடைந்தவர்கள் கொல்லப்பட்ட விவகாரம் 'அவுட்'

கொழும்பு, மே13

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் இலங்கை மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழு, ஐந்து விடயங்களின் கீழ் 300 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் - இத்தகவலை ஆணைக் குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரக்கோன் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவுக்கு டி.எஸ்.விஜேசிங்க தலைமை வகிக்கிறார். சி.ஆர்.டி சில்வா, நிஹால் ஜெயமான, மனோ இராமநாதன், ஜெசீமா இஸ்மாயில், அனுர மட்டேகொட ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே

(24ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடந்த தமிழீழ அரசுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை

கொழும்பு, மே13

நாடு கடந்த தமிழீழ அரசை அமைப்பதற்காக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எடுக்கும் முயற்சிக்கு எதிராக இரண்டாம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என இராணுவம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளபோதிலும் சர்வதேச (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சட்டத்தரணிகள் பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்டு இன்று கடமைக்குத் திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம்,மே13

சாவகச்சேரி நீதிவானுக்கு ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தலைக் கண்டித்து கடந்த சில நாள்களாக நீதிமன்ற பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்த சட்டத்தரணிகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் பகிஷ்கரிப்பை கைவிட்டு கடமைக்குத் திரும்புவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேல்நீதிமன்ற சட்டத்

(24ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி முகாம்களில் 35 ஆயிரம் பேரே எஞ்சியுள்ளனர்

### வடமாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவிக்கிறது

வவுனியா,மே13

வவுனியா நிவாரணக் கிராமங்களில் மீள்குடியேற்றத்துக்காக 35 ஆயிரம் பேரே தற்போது எஞ்சியுள்ளனர் என்று வடமாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் 5 பிரதேசங்களில் வவுனியா நிவாரணக் கிராமங்களில், தங்கவைக்கப்பட்டிருந்த 578 குடும்பங்களைச் சேர்ந்த 1,838 பேர் நேற்றுமுன்தினம் மீள்குடியேற்றப்பட்டனர் என கிளிநொச்சி மாவட்டச் செயலகம் கூறியது.

மேலும் இன்று 155 குடும்பங்களைச் சேர்ந்த 479பேர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேற்றப்படவுள்ளனர் என்று முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் கூறினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகிபுரம், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளிலே நேற்று 1,838 பேர் மீள்குடியேற்றப்பட்டனர். இவர்கள் செட்டிக்குளம் நிவாரணக் கிராமத்திலிருந்து விசேட பஸ்கள் மூலம் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 18கிராம சேவகர் பிரிவுகளில் 479 பேர் மீள்குடியேற்றப்பட்டனர். சுமார் 35 ஆயிரம் பேரே தற்பொழுது வவுனியா நிவாரணக் கிராமங்களில் மீள்குடியேற்றத்துக்காக எஞ்சியுள்ளனர் என வடமாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது. சுமார் 35ஆயிரம் பேர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபையின் மறுப்பு விளம்பரம், நீதிமன்றத்துக்கு திருப்தி தரவில்லை

### உயர் அதிகாரிகளை அழைத்து நீதிவான் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,மே13

நீதித்துறையை அவமதிக்கும் வகையில் கடந்த 11ஆம்திகதி செவ்வாயன்று உள்ளூர்ப் பத்திரிகைகளில் யாழ்.மாநகர சபையால் வெளியிடப்பட்ட விளம்பரத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில்-

நேற்று (புதன்) உள்ளூர்ப் பத்திரிகைகளில் சபையினால் மீளவெளியிடப்பட்ட விளம்பரமும் மன்றுக்குத் திருப்திகரமானதாக (24ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய அரசின் நிபந்தனைகளை நிராகரித்துவிட்டு

## பார்வதியம்மா நேற்று வந்தார் யாழ்ப்பாணம்; அவர் வல்வை ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,மே13

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயாரான பார்வதியம்மா, இந்தியாவுக்குள் நுழைய அனுமதிப்பதற்காக இந்திய அரசு விதித்த நிபந்தனைகளை நிராகரித்துவிட்டு கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கத்தின் துணையுடன் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அம்புலன்ஸ் மூலம் அழைத்துவரப்பட்ட அவர் வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அரசின் கோரிக்கைகளை நிராகரித்தமை, கொழும்பிலிருந்து பார்வதியம்மா யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டமை என்பவை தொடர்பாக எம். கே.சிவாஜிலிங்கம் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது -

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பக்கவாத நோயால் பார்வதியம்மா பரித வித்து வருகிறார். எனினும், எவ்வித மனிதாபிமானமும் மற்று இந்திய மத்திய அரசு அவர் சிகிச்சை பெறுவதற்குக் கடும் நிபந்தனைகளை விதித்தது.

#### மனிதாபிமானமற்ற நிபந்தனைகள்

✱அரச வைத்தியசாலையில் மட்டுமே சிகிச்சை பெற வேண்டும். (பார்வதியம்மா இந்தியாவில் இருந்தபோது 2000ஆம் ஆண்டு முதல் முகிழி எனுமிடத்திலுள்ள

(24ஆம் பக்கம் பார்க்க)



நேற்று வல்வெட்டித்துறை வந்து சேர்வதற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவரின் தாயார் பார்வதியம்மா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய மாணவன்

**செல்வன் யே.யதுர்ஷன்**

நல்லூர் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் 11வயதுப் பிரிவில் நீளம் பாய்தல், உயரம்பாய்தல் ஆகிய நிகழ்வுகளில் முதலாம், மூன்றாம் இடங்களையும் யாழ்.வலயமட்டப் போட்டியில் மேற்படி நிகழ்வுகளில் முதலாம், இரண்டாம் இடங்களையும் பெற்று வெற்றி வீரனாகத் தெரிவு செய்யப்பட்டமையை இட்டு பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது. இவரைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், ராஜவீதி,நல்லூர். பாடசாலைச் சமூகம். (98155)

## யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை புனரமைப்புப் பொதுக்கூட்டம்

இடம் :- யாழ்.கல்வி வலயப் பணிமனை
காலம் :- நாளைமறுதினம் (15.05.2010) சனிக்கிழமை
நேரம் :- காலை 9.30மணி
தலைமை :- செல்வி திலகவதி பெரியதம்பி அவர்கள்

இக் கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆ.சி.நடராசா
தற்காலிக செயலர்.
(98099)


## New Medi Care Hospital

NMC+ New Medi Care Hospital
No. 32, Kachchai Road, Chavakachcheri,
T.P : 021 3734505, 021 4920949

15.05.2010 தொடக்கம்
பிரதி சனிக்கிழமைகளில் பி.ப. 3.00 மணிக்கு
வைத்தியநிபுணர்
DR. Mrs. N. நாகேந்திரா அவர்கள்
நோயாளர்களைப் பார்வையிடவுள்ளார்.
முன்பதிவுகள் மூலம் வைத்திய நிபுணரின் ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

4ever
போர் எவர் ஸ்கின் நெச்சுரல்ஸ் (பிறைவேட் நிறுவனத்தின்) நடமாடும் சேவை

யாழ்ப்பாணத்தில் இன்று (13.05.2010) வியாழக்கிழமை லிங்கம் கூல்பாருக்கு முன்னால் நாளை (14.05.2010) வெள்ளிக்கிழமை சுன்னாகத்திலும் இலவசமாக (Free) Facial செய்யப்படும்.

போர் எவர் ஸ்கின் நெச்சுரல்ஸ் பிரைவேட் நிறுவனத்தின் Facial உடல் அழகு சாதனப் பொருள்கள் அதிக பலன் தரும். இயற்கை மூலிகைகளினாலான அழகுசாதன உற்பத்திகளை தற்பொழுது யாழ்ப்பாணத்திலும் எமது நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களினை கொண்டு இன்று (13.05.2010) வியாழக்கிழமை இலவசமாக Facial செய்யப்படும். லிங்கம் கூல்பாருக்கு முன்னால் இவ் இலவச Facial ஆனது நாளை (14.05.2010) வெள்ளிக்கிழமை சுன்னாகத்திலும் நடைபெறும் என்பதனை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

யாழ்.நகரில் அனைத்துக் கடைகளிலும் எமது உற்பத்திப் பொருள்கள் விற்பனையாகின்றன. எமது நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் ஏக விநியோகஸ்தர்.

4 EVER Skin Naturals (pvt) Ltd.
No. 11, Dewala Lane,
(Off Dewala Road)
Pagoda, NUGEGODA.
T.P.: 011 4403283
E.Mail: info@4everskinnaturals.com

சிவலிங்கம் சுதாகரன்
அன்வி கிஃப்ற் மாளிகை அம்மன் றோட், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0777240612
(98165)

## OriFlame (ஓரிபிளேம்)

இளைஞர்களே, யுவதிகளே!!
இதோ உங்கள் வாழ்க்கைக் கனவினை நனவாக்கிக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

1. உங்கள் திறமைக்கு ஓர் வாய்ப்பு
2. படித்துக்கொண்டே பணம் சம்பாதிக்க வேண்டுமா?
3. படித்துவிட்டு வீட்டில் இருப்பவர்களுக்கும் இது ஒரு பொன்னான வாய்ப்பு
4. வேலை செய்துகொண்டு இருப்பவர்களும் மேலதிகமாகப் பணம் சம்பாதிக்க ஆசையா? எங்களுடன் இணையுங்கள் இது ஓர் அரிய வாய்ப்பு.
5. நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதவில்லையா? எங்களுடன் இணை வதன் மூலம் கூடிய வருமானம் பெற்றுக்கொள்ளலாம்.
6. பலர் எம்முடன் இணைந்து எல்லையற்ற அளவு பணம் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். நீங்களும் எம்முடன் இணைந்து அதிக பணம் சம்பாதிக்க ரெடியா?
7. அப்படியாயின் நீங்கள் சுயதொழில் செய்வதற்கு வெறும் 490ரூபா மட்டுமே பதிவுக் கட்டணம்.
8. அப்படியாயின் எதிர்வரும் 14.05.2010 வெள்ளிக்கிழமை அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00மணிக்கு நடைபெறும் நிகழ்வில் கலந்துகொண்டு உங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள்.
9. இவ் அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்.

ஓரிபிளேம்
தொடர்பு:தொ.பே.0789133833, 0789147878


## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

வருடாந்தப் பொதுக்கூட்டம்-2010

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்-
மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27.05.2010ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் தலைவர் திருமதி. செ.சுந்தரேசன் (அதிபர்) தலைமையில் இடம்பெறும்.

தலைவர். செயலாளர்.
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.


## வான் விற்பனைக்குண்டு

கம்பனி உரிமையாளரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள HM தொடர் இல உடைய Townace CR-41 (Original Diesel)
தொடர்பு:0772205951

## விற்பனைக்கு

புதிய சாப்பாட்டு மேசை (தேக்கு) GAS AND ELECTRIC BRANS NEW COOKER RHOYXON ITALY உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:த.பற்றிமாராசா
சில்லாலை, பண்டத்தரிப்பு. T.P 0779000298


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பத்மநாதன்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி பத்மநாதன் நேற்று (12.05.2010)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் தங்கம்மாவின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், சுந்தரலிங்கம், கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறிஸ்கந்தராசா, காலஞ்சென்ற ஸ்ரீகுமார் மற்றும் ஸ்ரீவதனி, ஸ்ரீவாசினி, ஸ்ரீகரன்,நவஜீவன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரபாலன், ஸ்ரீதரன்,குகரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமனாரும், தனோஜன் , கபிலன், லக்கிஷன்,சயந்தன், சயந்தினி, தனுஷியா, வினோத், நிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2010)வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வடக்கு, இருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். தகவல்: குடும்பத்தினர்.

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே 13

ஊழியர் சேமலாப நிதியினைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குபவர்களின் நலன்கருதி இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவும், யாழ். மாவட்ட தொழில் அலுவலகமும் இணைந்து நடமாடும் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



**விஸ்வலிங்கம் அரியநாயகம்**
(முன்னாள் அதிபர்,செங்குந்த இந்துக்கல்லூரி)

விஸ்வலிங்கம் அரியநாயகம் அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
480,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தயா (தயா ஸ்ரோர்ஸ்)
உதயன்(நியூ லக்கி ரெயிலர்)
வஜி (கஜி வீடியோ)
(98094)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி பற்றிமாவதி யோகபாலன் (செல்வம்)



யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி பற்றிமாவதி யோகபாலன் நேற்று (12.05.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செபஸ்ரியாம்பிள்ளை யோகபாலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வரெட்ணம் - பொன்மணி தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை - ராசமணி தம்பதியினரின் மருமகளும், றதி, சுமதி (பிரான்ஸ்), சாந்தி, டனீசியஸ் (பிரான்ஸ்), காமலிற்றா நிஷாந்தினி (முன்னாள் உதவி விரிவுரையாளர், யாழ்/பல்கலைக்கழகம் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், விஜயரெட்ணம் (யா/மாநகரசபை நீர்வேலைப்பகுதி), திவ்விய பாலன் (பிரான்ஸ்), சுரேந்திரன் (பிரான்ஸ்), செல்வராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், திவாகர், சுபாகர், றம்மியா, அஜினி, டெசாணி, சிவாணி, சுகன்யா, சுஜந்தன், சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற ஜேம்ஸ் திரேஸ்மலர், பொன்ராசா, யோகம், ஜோர்ச்ராணி, பபி, றெபேட் மற்றும் ஜீவம், ஜோதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் புஸ்பராணி, ராசன் மற்றும் பொன்ராசா, கிளி, தனையன் ரமேஸ், ராதா, ரமணி, ரங்கேஷ், ரஷன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.05.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்துக்கு எடுத்துச்சென்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (98167) தகவல்: யோகபாலன் (கணவர்).

### சண்முகம் பாலேந்திரன்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பாலேந்திரன் கடந்த (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ஈஸ்வரியின் (கனடா) அன்புக் கணவரும், தர்ஷனி (கனடா), நரேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (இலங்கை) மற்றும் திருநாவுக்கரசு (இலங்கை) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2010) வியாழக்கிழமை கனடா OGDEN FUNERAL HOME இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சண்முக வாசா" சிரணி ச்சந்தி, சண்டிலிப்பாய். (98151) தகவல்: திருநாவுக்கரசு (சகோதரன்).


மீண்டும்..
உரும்பிராயில்
Jaffna PC WORLD
Computer Sales & Service
Palali Road, Urumpirai Junction, Urumpirai
Internet Browsing
வெளிநாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்துக் கதைப்பதற்கு மணித்தியாலத்திற்கு 50/=
Printing Scanning Photocopy Laminating
Mobile Phone Sales & Service
Ms Office, Internet & E-Mail, Hardware
போன்ற கற்கை நெறிகளுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.
Email : jaffnapcworld@Gmail.com Tel : 021753 9015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விழலுக்கிறைத்த நீராகுமா?

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட பகுதியில் புனர்வாழ்வு, மீள்கட்டுமானப் பணிகளுக்காக இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து நிதி உதவி வழங்கும் என்று இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

2009 மே 18இல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்த பின்பு, இலங்கைக்கு இந்தியா - குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதியின் புனர்வாழ்வு, மீள் கட்டுமானப் பணிகளுக்கு - உதவி செய்து வருகிறது. இவற்றுள் கடந்த வருடம் பிரதமர் மன்மோகன் சிங்கினால் அறிவிக்கப்பட்ட 500கோடி ரூபா உதவி, வடபகுதிக்கான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்கவும் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்குமான 41 கோடியே 60 லட்சம் டொலர்கள் உதவி மற்றும் கடந்த வருடம் ஒக்ரோபரில் வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு விநியோகத்துக்காக வழங்கப்பட்ட 10கோடி டொலர்கள் உதவி என்று இலங்கைக்கு இந்திய உதவிகள் தாராளமாகக் கிடைத்து வருகின்றன. அத்துடன் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் இந்திய உதவி கிடைத்துள்ளது.

இந்தியாவின் உதவிகள் வரவேற்கத்தக்கவைதான். ஆனால் இந்த உதவிகள் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எந்த விதத்திலாவது உதவுமா என்பதே இன்றைய கேள்வி ஆகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்தியா முழு அளவில் செயற்பட்டது. இந்தியாவின் உதவி கிடைத்திருக்காவிடில் விடுதலைப் புலிகளை இலங்கையினால் முற்றாக அழித்திருக்க முடியாது. தற்பொழுது போர் முடிவுக்கு வந்து எதிர்வரும் 18ஆம் திகதியுடன் ஒருவருடமாகிறது. இந்தப் போருக்குக் காரணமாக இருந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு உருப்படியான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்பு பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்றார் ஜனாதிபதி. பின்பு பொதுத் தேர்தலுக்குப் பின்பு தெரிவு செய்யப்படும் தமிழ் எம்.பிக்களை அழைத்து பேசித் தீர்வு காண்போம் என்றார். பின்பு சார்க் மாநாட்டுக்குப் பின்பு பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று கூறப்பட்டது. தற்போது சார்க் மாநாடும் முடிவடைந்து விட்டது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்பதற்குப் பதிலாக அதனைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளிலேயே அரசு கவனம் செலுத்தி வருகிறது. மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழு அளவில் அமுல் செய்வது, அதற்கும் மேலாகச் சென்று பிரச்சினைக்குத் தீர்வு காண்பது (13+) எல்லாம் தற்போது அடிபட்டுப் போய்விட்டது.

கடந்த வருடம் யுத்தம் முடிவடைந்த பின்பு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலமான தீர்வு குறித்து இந்தியா தீவிரமாகச் சிந்தித்து வந்தது. அதற்கு மேலாகவும் சென்று தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று இந்தியா கூறிவந்தது.

ஆனால் இந்தியாவின் போக்கு தற்போது மாறி வருகிறது. சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போட்டி போட்டுக்கொண்டு இலங்கைக்கு உதவி செய்வதில் முனைப்புக் காட்டுகிறதே தவிர, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியா நாட்டம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இலங்கை என்ன சொல்கிறதோ அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில்தான் இந்தியா இன்றும் இருக்கிறது.

இலங்கைக்கு உதவிகளை வழங்குவதால் மட்டும் சமாதானத்தைக் கட்டி எழுப்பிவிட முடியாது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு தேவை என்பதை இந்தியா புரிந்துகொண்டு செயற்படுவது அவசியம்.

இந்தியா தற்பொழுது வழங்கிவரும் உதவிகள் தமிழ் மக்கள் மனங்களை வெல்லவோ அல்லது இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவோ உதவப்போவதில்லை. சமாதானம் இல்லாத இடத்தில் ஏற்படுத்தப்படும் அபிவிருத்திகள் விழலுக்கிறைத்த நீராகிவிடும் என்பதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த யதார்த்தத்தை விளங்கிக்கொள்ள மனமில்லாமல் இந்தியா தனது பிராந்திய மேலாதிக்கத்தில் மட்டும் அதீத அக்கறை காட்டுவது ஈழத்தமிழரின் விவகாரத்தில் அதன் அசமந்தப் போக்கையே காட்டுகிறது!

# பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தோருக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க உதவுங்கள்

## அரச சார்பற்ற நிறுவனங்களிடம் அரச அதிபர் வேண்டுகோள்

வடமராட்சி, மே 13

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியோர்களின் பிரச்சினைகள், அபிவிருத்தி குறித்து ஆராய்வதற்காக கூட்டம் ஒன்று அண்மையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் கே. முகுந்தன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபரும் கலந்துகொண்டார்.

இப்பிரதேச செயலர் பிரிவில் புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு, தர்மக்கேணி, பளை நகரம், தம்பகாமம், சோரன்பற்று, மாசார், அரசர்கேணி (முல்லையடி) ஆகிய எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் ஆயிரத்து 393 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 437 பேர் மீளக் குடியேறியுள்ளனர்.

இவ்வாறு குடியேறிய மக்கள் அழிந்துபோன வீடுகளுக்குப் பதிலாகத் தற்காலிகக் குடிசைகளை அமைத்து, வளவுகளைத் துப்புரவு செய்து தமது வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் மீளக்குடியேறிய மக்கள் தமது வாழ்வாதாரத்தை நிலைநாட்ட அவர்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டத்தை ஏற்படுத்த அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என இக்கூட்டத்தில் வைத்து கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச செயலர் பிரிவில் மேலும் சில கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் இன்னமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (50-236)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்களை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே13

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதி மீனவர்களுக்கு விரைவில் கடற்றொழில் உபகரணங்களை வழங்க வடமாகாண ஆளுநர் உறுதியளித்துள்ளார் என வடமாகாண விவசாய அமைச்சின் பணிப்பாளர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த வருடம் திருகோணமலையில் போரினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

15 நாள்களுக்குள் இந்தக் கடற்றொழிலாளர்களுக்கு உபகரணங்களை வழங்கி அவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பிளாஸ்ரிக் படகு, வலை, மீன்பிடி இயந்திரம் உட்படப் பல கடற்றொழில் உபகரணங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-224)

**66ஆயிரம் லீற்றர் கசிப்புடன்**

# சுழிபுரம் பகுதியில் கைதான இருவருக்கு ரூபா 2லட்சத்து 40ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,மே13

சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் 66ஆயிரம் லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டு மல்லாக மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட இருவருக்கு தலா ஒரு லட்சத்து 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் குடாக்கனைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதா கக் கிடைத்த தகவலையடுத்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது ஒரே கிராமத்தில் இருவருரிடம் தலா 33 ஆயிரம் லீற்றம் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட இரண்டு பேரும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் அ.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் சம்பந்தப்பட்ட இரண்டு பேரும் தலா ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகச் செலுத்த வேண்டும் என்றும் -

செலுத்தத் தவறின் இரண்டு பேரும் 33 மாத கால சதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார். (ஓ-9-16)

# நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடும் பணி

யாழ்ப்பாணம்,மே13

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணி முதல் எதிர்வரும் 17ஆம்திகதி திங்கட்கிழமை வரை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே வியாபார நிலையங்களில் நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளைப் பயன்படுத்துவோர் தவறாது சமுகமளித்து முத்திரையிடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-9)

# கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 18ஆம், 19ஆம் திகதிகளில் மீள்குடியமர்வு

கிளிநொச்சி,மே13

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக வெளி மாவட்டங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்துவரும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கும், மறுநாள் 19ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான பதிவுகள் எதிர்வரும் 18ஆம் திகதி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் இடம்பெறும் எனவும், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, உதயநகர் மேற்கு, உதயநகர் கிழக்கு பெரியபரந்தன், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், செல்வாநகர், ஆனந்தபுரம், தொண்டமான்நகர், கிளிநகரம், கனகபுரம், கணேசபுரம், ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான பதிவுகள் எதிர்வரும் 19ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளதாகவும் தற்காலிக பதிவுகள் நீக்கத்துடன் வருபவர்கள் மட்டுமே மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (50-201)

# கைதடி முதியோர் இல்லத்திற்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே13

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி என்பவற்றை நலன்விரும்பிகள் சிலர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் வசதிகருதி இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

# விலை அதிகரிப்பை அடுத்து தம்புள்ளையிலிருந்து மரக்கறி

யாழ்ப்பாணம்,மே13

யாழ்ப்பாணத்திற்கு தம்புள்ளையில் இருந்து பெருந்தொகையான மரக்கறி வகைகள் தினமும் எடுத்து வரப்படுகின்றன.

பிரதான சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. இந்த விலை அதிகரிப்பை அடுத்து தம்புள்ளையில் இருந்து வியாபாரிகள் மரக்கறி வகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருகின்றனர்.

லீக்ஸ், கரட்,கோவா,கத்தரிக்காய், பூசணிக்காய் போன்ற மரக்கறிவகைகள் அதிகளவில் எடுத்து வரப்படுகின்றன. (50-224)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 30 | 13.05.2010 வியாழக்கிழமை |
| திதி | : சதுர்த்தசி மு.ப. 07.34 வரை |
| நட்சத்திரம் | : பரணி பி.இ. 02.47 வரை |
| சுபநேரம் | : 07.24 - 08.54 |
| ராகுகாலம் | : 01.24 - 02.54 |

# கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் உள்ளூர் பஸ் சேவைகள் ஆரம்பம்

வடமராட்சி,மே13

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியேறிய மக்களின் வசதி கருதி உள்ளூர் பஸ் சேவைகளை, கிளிநொச்சி இ.போ.ச. டிப்போவும், தனியார் மினி பஸ் சேவை சங்கமும் ஆரம்பித்துள்ளன.

இதன்பிரகாரம் திருவையாறு, [illegible]க்கச்சி, இராமநாதபுரம், கல்மடு ஆகிய கிராமங்களை உள்ளடக்கித் தினமும் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை கிளிநொச்சி இ.போ.ச. டிப்போ, தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் ஆகியன பஸ்சேவைகளை இணைந்து நடத்தி வருகின்றன.

இதனால் இக்கிராமங்களில் மீள்குடியேறிய மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளரர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (50-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக உத்தியோகத்தர்
இராசையா நாகவேல்ராசா அவர்களின் அன்புத்தந்தை

**அமரர் செல்லையா இராசையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், வலி. வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)

(சி/567588)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மதனதாஸ் ரமப்பிரியா



319, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதனதாஸ் ரமப்பிரியா நேற்று (12.05.2010) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கருப்பையா மகேஸ்வரன் - காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், மதனதாஸின் அன்பு மனைவியும், ரூபதாரணி (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), சிவதர்சினி (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), டிலக்சன் (யா/நாவலர் மகாவித்தியாலயம்), பிரியங்கா (யா/நாவலர் பூஞ்சோலை) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.05.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*319, கே.கே.எஸ். றோட்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல் : க.மகேஸ்வரன் (தகப்பன் - தேவஸ்தானம், நயினாதீவு), பெரியப்பா, சித்தப்பா, மாமி.

(96161)

### திருமதி பாலச்சந்திரன் அருந்ததி



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலச்சந்திரன் அருந்ததி நேற்று (12.05.2010) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் பொன்னம்பலம் - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், பாலச்சந்திரனின் (இராசா) அன்பு மனைவியும், சிறீபிரசாத், ரவிசங்கர் (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயரும் மகேஸ்வரனின் அன்புச் சகோதரியும், உமா, சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற படவரைஞர்-மானிப்பாய்) காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் இராமச்சந்திரன் (கலைவாணி ஆடையகம், யாழ்ப்பாணம்), தனபாலச்சந்திரன் (லண்டன்), விக்னேஸ்வரன் (லண்டன்) தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரிந்தாபனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
[ஞானபண்டித வித்தியாசாலைக்கு அருகில்] (98098)

தகவல்: பொ.பாலச்சந்திரன் (கணவர்).

## மனித உரிமைப் பாதுகாவலர் பயிற்சி நெறியில் மேல்நீதிமன்ற நீதிபதி பிரதம விருந்தினர்

யாழ்ப்பாணம், மே 13

மனித உரிமை பாதுகாவலர் பயிற்சி நெறி-2010 இன் ஆரம்ப நிகழ்வும், 2009 ஆம் ஆண்டில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உள்நாட்டு இடம் பெயர்தோருக்கான விசேட செயற்றிட்டத்தின் பிராந்திய செயற்றிட்ட அதிகாரி கே.கார்த் திகா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.உயர் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா கலந்து கொள்வார். (6-16)

## சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம், மே 13

பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான நட வடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கடைசியாகச் சித்தியெய்திய பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் தவறாது சமுகளிக்குமாறு பிராந்திய மலேரியாத் தடை இயக்க வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (04-10)

## 'யாத்ரா இணையத் தமிழ் மாநாடு' யாழ்.மத்திய கல்லூரியில்

யாழ்.மாணவர்கள், வலைப்பதிவாளர்கள், கல்விமான்கள், துறைசார் வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து நடத்தும் 'யாத்திரா இணையத் தமிழ் மாநாடு' எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்துறை சார்ந்த அறிஞர்களின் அனுபவப்பகிர்வுகளும் கருத்துரைகளும் இடம் பெறும்.

இணையத்தில் தமிழ் வளர்ச்சி, இலக்கியம்,வேலைவாய்ப்பு தொழில் நுட்பம் போன்றவற்றை உள்ளடக்கி நடைபெறும் இந்த மாநாட்டில் 'யாத்ரா 2010' என்ற நூலும் வெளியிடப் படவுள்ளது.

நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ஒ-10)

## முக்கிய அறிவித்தல்

வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டு மணல் ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களின் உரிமையாளர்கள் கவனத்திற்கு;

1) 2010 ஆம் ஆண்டிற்கான
   I. வரி அனுமதிப்பத்திரம்
   II. காப்புறுதிப் பத்திரம்
2) வாகனத்தின் அடி உறுதிப் புத்தகம்
3) உரிமையாளரின் தேசிய அடையாள அட்டை
4) சாரதி அனுமதிப்பத்திரம், சாரதியின் அடையாள அட்டை

மேற்கூறப்பட்ட ஆவணங்கள் ஒவ்வொன்றிலும் தலா மூன்று போட்டோ பிரதிகள் (Photo Copy) எதிர்வரும் 20.05.2010 இற்கு முன் எமது வல்லிபுரம், புலோலியிலுள்ள சங்கக் கரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். ஆவணங்களை ஒப்படைக்கத் தவறும் வாகனங்களின் மணல் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்படும்.

தலைவர்/செயலாளர்
வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் சங்கம்.

(சி/567590)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியநாதன் சாரதாதேவி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியநாதன் சாரதாதேவி நேற்று முன்தினம் (11.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மற்றும் பாக்கியநாதனின் அன்பு மனைவியும், விமல், கோசிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சந் திரன் (அமெரிக்கா), ஆனந்தராசா (கனடா), ரதி (கனடா), பவானி (கனடா), புண்ணியமூர்த்தி (கனடா), சிறிகரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், பரமேஸ்வரி, நடராசா (நடராசா அன் கோ, திருநெல்வேலி) மற்றும் சர்வானந்ததேவி, செல்வரத்தினம் (செல்வம் பல்பொருள் வாணிபம், திருநெல்வேலி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2010) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/9, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி.
T.P. 0212227633,
கனடா : T.P. +9052392485

தகவல் :
மா. செல்வரத்தினம்
(மைத்துனர்).

(98157)

## கண்ணீர் அஞ்சலி




எமது பங்குத் தந்தை அருட்பணி M.M.H.ஞானேந்திரன் அடிகளாரின் அன்புத்தாயார்

**அமரர் றோசம்மா மரியராஜரட்ணம்**

அவர்கள் கனடாவில் இறைபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். பிரிவால் துயருறும் எமது பங்குத்தந்தைக்கும் ஏனைய உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். இவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Note:** Please come and join us in paying the final homage to our mother Mrs.Rosammah Mariarajaratnam. The viewing will be held on Thursday, May 13th & Friday, May 14th at 5pm-9pm at Scott Funeral Home. The funeral ,will be taking place on Saturday, May 15th from 8.30-9.30 am at Scott Funeral Home, and 10am at St. John Fisher Church.

பங்கு மக்கள், புனித கயித்தார் ஆலயம், மாரீசன் கூடல் இளவாலை.

(98096)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்: 27.03.1946**
**மறைவு: 04.04.2009**

*திதி: 13.05.2010*



அமரர்
### கதிர்காமு கந்தசாமி

(ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம்)



அன்புப் பப்பாவே ஆறாத்துயரத்தில்
நீள நினைவுகளை
நெஞ்சில் பதித்துச் சென்றுவிட்டீர்கள்.
ஆண்டொன்று கழிந்தாலும்
ஆறுமோ எங்கள் மனம்.
ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகள் வந்தாலும்
உங்கள் நினைவுதான் வரும்.
நீங்கள் காட்டிய
பாதை எங்களை
வளமுடன் வாழ வைக்கிறது.
உங்கள் கனவு நனவாக
வாழ்ந்து காட்டுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (13.05.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,பிள்ளைகள்.
சூராவத்தை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை கடல்நீரேரியில் விளையும் உப்பை சேகரிக்க உப்புக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை

வடமராட்சி,மே13

வடமராட்சி வல்லை கடல்நீரேரியில் இம்முறை விளையும் உப்பைச் சேகரிக்க தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பாரம்பரியக் கைத்தொழில், சிறுகைத் தொழில்அமைச்சரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வடமராட்சி, வல்லை கடல்நீரேரியில் வருடந்தோறும் விளையும் உப்பை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் சேகரித்து வல்லை கடல்நீரேரியுடன் ஒட்டிய கரணவாய்ப் பகுதியில் பல உப்பு மால்களை கடந்த காலங்களில் போட்டு, உப்பினைப்பெற்று வந்தது.

கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் யுத்தம் உக்கிரம் அடைந்ததைத் தொடர்ந்து தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. இந்நிலையில் இக்கடல் நீரேரியில் விளையும் உப்பை பொதுமக்கள் சேகரித்து அள்ளிச்சென்று வந்திருந்தனர். தற்போது புதிய அமைச்சு இதனைப் பொறுப்பேற்றுள்ளதால் வல்லைக்கடல் நீரேரியில் விளையும் உப்பைச் சேகரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிக விரைவில் ஆனையிறவு உப்பளத்திற்குச் சென்று அதன் செயற்பாடுகள் குறித்து ஆராய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (50-236)

## பாடசாலை அதிபரின் வீட்டில் தங்க நகைகள், பணம் திருட்டு

யாழ்ப்பாணம்,மே13

பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டுக்குள் பட்டப் பகலில் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள், பணம், பெறுமதியான பொருள்கள் என்பனவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டு சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கோப்பாய் பூதர்மடம் வீதிக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை ஒன்றின் அதிபரான வீட்டின் உரிமையாளர் வீட்டைப் பூட்டி விட்டுப் பாடசாலைக்குச் சென்றவேளை வீட்டின் முன்கதவை உடைத்து வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகைகள், ஒரு லட்சம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதிபர் பாடசாலை முடிந்த பின்னர் வீடு வந்தபோதே திருட்டுச் சம்பவம் தெரிய வந்தது.

இது தொடர்பாக அப்பகுதியில் உள்ள இராணுவத்தினருக்கும் தெரியப்படுத்தப் பட்டதாகக் கூறப்பட்டது. (50-224)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 13

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (50-204)

* * *

யாழ்ப்பாணம்,மே 13

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 8ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறுகின்றது.

இன்று வியாழக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை தங்கச் சப்பறத் திருவிழாவும் மறுநாள் சப்பறத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (50 -201)

## நீர்வேலி அத்தியார் இந்துவின் விளையாட்டு மைதானம் விஸ்தரிப்பு

நீர்வேலி,மே13

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

8 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக் கல்லூரி வளாகத்தில் 6 ஏக்கர் நிலப் பரப்பு விளையாட்டு மைதானமாகவுள்ளது.

முன்னர் இருந்த விளையாட்டு மைதானம் இவ்வாண்டு மேலும் சுமார் 65 பரப்பு நிலம் கொள்வனவு செய்யப்பட்டு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலேயே பிரமாண்டமான விளையாட்டு மைதானம் அமைந்த கல்லூரி என்ற பெருமை இக் கல்லூரிக்கு உண்டு.

இந்த நன் முயற்சிக்கு உள்ளூர், வெளியூர்களிலுள்ள பழைய மாணவர்கள் உதவி புரிந்துள்ளனர். இவர்களின் இந் நன்முயற்சியைக் கல்லூரிச் சமூகம் பாராட்டி மகிழ்கின்றது. (50 - 110)

# தாதிய உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்

## தாதியர் தின வைபவத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே13

தாதிய உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு யாழ்.தாதியர் பயிற்சிப் பாடாசலையின் பரிபாலகி திருமதி பி.கருணாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டங்களில் கூட மகத்தான சேவைகளை நாம் வழங்கியிருக்கிறோம். 24 மணி நேரமும் சேவை செய்துவரும் தாதிய உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதி அடிப்படை வசதிகளற்று உள்ளது.

நாம் தற்போது பயன்படுத்தும் விடுதி நூற்றுப்பத்து வருடகாலம் பழமை வாய்ந்ததாகும். எனவே அதனை விஸ்தரித்து புதுப்பித்து தருமாறு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் மலசலகூடம் உள்ளிட்ட வசதி வாய்ப்புகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும். ஏற்கனவே இருந்த தங்குமிட விடுதி இடித்தழிக்கப்பட்டது. எமக்கு புதிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது. எனினும் இதுவரை அவ்வாறு எதுவும் அமைத்து வழங்கப்படவில்லை - என்றார். (50-14)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,மே 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கலைஞர்களிடமிருந்து கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாடு, தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுப்புறவியல் சினிமா, இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை ஆகிய துறைகளில் சிறப்புச் சேவையாற்றிய அறுபது வயதை பூர்த்திசெய்த கலைஞர்களிடமிருந்து மேற்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை மேற்படி பிரதேசசெயலக கலாசாரபிரிவில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு சண்டிலிப் பாய் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (50-201)

## முகாமையாளர் கழகம் நடத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே13

யாழ்ப்பாணம் முகாமையாளர்கள் கழகம் நடத்தும் 'முகாமைத்துவத்தில் நேரிய சிந்தனைகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் மாலை 5.15 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

இலங்கை பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் தலைவர் பி.கே.ஜெகதீஸ கருத்துரை வழங்குவார்.

## வலி.மேற்குப் பிரதேச சபையின் அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே13

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவினையும் உள்ளடக்கியதாக ' நெல்சிப்' திட்டத்தின் கீழ் புதிய முன்மொழிவுகள் திரட்டப்படவுள்ளன.

இத்திட்டங்களைப் பெறுவதற்கான அவசர அபிவிருத்திக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலோசனை சபை பிரதிநிதிகள் என 140 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இவ் அபிவிருத்திக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி கேட்டுள்ளார். (50-302)




## 'குமுதினி' திருத்த வேலை நிறைவு பெற்றது

யாழ்ப்பாணம்,மே13

'குமுதினி' படகின் திருத்தப் பணிகள் நிறைவுபெற்றுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

படகின் திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதையடுத்து அதனைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் இவ்வாரத்தில் குமுதினியின் சேவை ஆரம்பமாகலாம் எனவும் கூறப்பட்டது. (50-224)

## மீளக் குடியமர்ந்துள்ள மாணவருக்கு சைக்கிள்கள்

யாழ்ப்பாணம்,மே.13

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் கற்கும் மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு 'போரூட்' நிறுவனத்தினரால் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் தென்மராட்சி கலை மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம் மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார்.

போரூட் நிறுவனத்தினர் பிரதேசத்தைச் சேர்ந்த 600 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-207)




இலங்கை மின்சாரசபையினால் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் 'ஒன்லைன்' மூலமான மின்பட்டியல் செலுத்தும் நடைமுறை அண்மையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மின்சாரசபையின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் உரையாற்றுவதை முதற் படத்திலும், மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, மின்சாரசபையின் உதவி நிதிமுகாமையாளர் சரச்சந்திரா, ஆர்.முத்துரட்ணானந்தன் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும், சாவகச்சேரி மின் அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் இச்சேவையை ஆரம்பித்து வைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஸ்ரீ அம்மா பகவான் சரணம்**
**சத் சங்கம்**

ஸ்ரீ அம்மா பகவான் (ஸ்ரீ கல்கி பகவான்) சத் சங்கம் 15.05.2010 சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**ஏகத்துவ அமைப்பு,**
கொழும்பு, யாழ்ப்பாணம். தொ.பே: 0112361769

## வீடு காணி விற்பனைக்கு

யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாகவும், திருநெல்வேலி சிவன், அம்மன் கோயில் அருகில் வீடுகளும் 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் 3 பரப்புக் காணியும் நியாய விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0778449739 (98080)

## பருத்தித்துறையிலிருந்து பளைக்கு பஸ் சேவை

வடமராட்சி,மே 13

பருத்தித்துறையிலிருந்து பளைக்கு பஸ் சேவை ஒன்று காலையும் மாலையும் பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் அண்மைக் காலம் தொடக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

பளைப்பகுதியில் உள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பச்சிலைப் பள்ளி (பளை) பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியோர்களின் வசதி கருதி இச்சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

பளைப்பகுதிக்கென தனியான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அரச ஊழியர்களை விட மீள்குடியேறிய மக்களே அதிக நன்மைகளைப் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(50-236)

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வலிங்கம் அரியநாயகம்

(ஓய்வுபெற்ற அதிபர்)



சுன்னாகம், வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நீராவியடியை வசிப்பிடமாகவும் தற்பொழுது அவுஸ்திரேலியாவில் (பேர்த்) இல் வசித்தவருமாகிய விஸ்வலிங்கம் அரியநாயகம் நேற்றுமுன்தினம் (11.05.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - லட்சுமிபிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் பூரணப்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற லிங்கநாயகம் மற்றும் கௌரி, தர்மினி, லிங்கேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுசீலா, ரவீந்திரன், குகானந்தன், காயத்ரி ஆகியோரின் அன்பு மாமனாரும் வெங்கடேஸ், குமரன், குருகுகன், சாம்பவி, சாதனா, கிருஷ்ணா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
திருமதி பூரணப்பிள்ளை செல்லப்பா,
திருமதி சின்னம்மா இராசா (சகோதரிகள்).
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வரியப்புலம்,
சுன்னாகம். (98083)

## அமரர் கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை (மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற அதிபர்)



மன்னம்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பூபாலபிள்ளை (மாஸ்ரர்) 11.05.2010 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலம்சென்றவர்களான தம்பிமுத்து- தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலாவின் அன்புக் கணவரும், அமரர் ஸ்ரீதர் மற்றும் ஸ்ரீநிவாசன், ஸ்ரீஸ்காந்தன், ஜெயஸ்ரீ, ஸ்ரீரங்கதாசன், அமரர் ஸ்ரீகானமுரளிதரன் மற்றும் ஸ்ரீகான முகுந்தன் ஆகியோரின் அருமைத்தந்தையும், தர்ஷினி, ஷோபனா, தற்குணராசா, சுமதி, ஜெயஸ்ரீ, ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டினோசா, மதுஷா, விஷ்ணு, ஆகாஷ், ஜனுஷா, மதுஷன், (சென். ஜோன்ஸ் கல்லூரி), சிந்துஜன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), மயூரிகா, திரிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா, குஞ்சுப்பிள்ளை, நாகலிங்கம், அழகுதங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வேலுப்பிள்ளை, பேரின்பராசா, ரட்ணசிங்கம், ரஞ்சிதம், அருமைத்துரை, பரிமளா, மாலினி, சரோஜா, அமரர் தர்மராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2010) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**துர்க்கையம்மன் கோயில் வீதி,**
**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**
**தொ.பே: 0773719650**

**தகவல்:**
**மனைவி,**
**பிள்ளைகள்.**

(98087)

## தவறிவிட்டன

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை என்னும் முகவரியுடைய திருநாவுக்கரசு தயாபரன் என்பவரது லான்ட் மாஸ்ரர் புத்தகம் (72ஸ்ரீ7849), TVS மோட்டார் சைக்கிள் புத்தகம் (JA 1754), மோட்டார் சைக்கிள் அடையாள அட்டை என்பன ஊர்காவற்றுறைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பண்ணை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். **தொ.பே: 0779590541, 0777070421.**


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
**May 2010 to Oct 2010**
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844 / 071 803 48 48**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010**


## வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சிற்கு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (போசாக்கு – Nutrition, உளவியல் - Psychology), பேச்சுப் பயிற்றுவிப்பாளர்களை (Speech Therapist) ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளல் -2010

வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அலுவலகங்களுக்கு, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவதற்காக கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. வடக்கு மாகாண சபையை நிரந்தரவதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது ஆகக்குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்தில் வசித்திருப்பதுடன் இவ் விண்ணப்ப முடிவு திகதியிலிருந்து 6 வருடங்களுக்குள் இது உள்ளடங்குதல் வேண்டும்.
3. விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது 18 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
4. வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

பதவி மற்றும் கல்வித் தகைமைகள்:

1. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - (போசாக்கு – **Nutrition**) - 23
   ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் சுகாதாரம் அல்லது போசாக்கு சம்பந்தமான பட்டம் பெற்றிருத்தல்.
2. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - (உளவியல் - **Psychology**) - 23
   சமூகவியல் அல்லது உளவியல் சம்பந்தமான ஏதாவது பாடத்துடன் கூடிய பட்டம் பெற்றிருத்தல்.
3. பேச்சுப் பயிற்றுவிப்பாளர் - (**Speech Therapist**) - 4
   இலங்கை மருத்துவக் கல்லூரி, அல்லது ஏதாவது பல்கலைக் கழகத்தில் பேச்சுப்பயிற்சி சம்பந்தமான டிப்ளோமா கற்கை நெறியினை பூர்த்திசெய்திருத்தல்.
   அத்துடன்
   க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்/சிங்கள மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக 4 பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பதவியின் தன்மை:- இப் பதவி ஒப்பந்த அடிப்படையிலானது ஆகும். மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை:-** விண்ணப்பப் படிவங்கள் ஊரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டு 31.05.2010 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர்,சுகாதார சுதேச **வைத்தியத்துறை அமைச்சு,விவசாயக் கட்டிடத் தொகுதி, கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

**இ.இரவீந்திரன்,**
செயலாளர,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட முன்னாள் நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜீ.ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் -
மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு சிறுவர் மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செல்வி சந்திரசேகரம் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு தொகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் தபால் பொதிகளைப் பரிசோதிக்க சுங்க அதிகாரிகள்

## விரைவில் நியமிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே 13

வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்படும் தபால் பொதிகளை இங்கு வைத்துப் பரிசோதிப்பதற்காகச் சுங்க அதிகாரிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வெளிநாடுகளில் இருந்து அனுப்பி வைக்கப்படும் தபால் பொதிகளை யாழ்ப்பாணத்தில் வைத்துப் பரிசோதித்துத் தீர்வைக்குட்படுத்துவதற்கான சுங்க அதிகாரிகள் இங்கு இல்லை. இதனால் யாழ்ப்பாணத்துக்கான வெளிநாட்டுத் தபால் பொதிகள் திருகோணமலை பிரதம தபாலகத்தில் வைத்தே பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான தபால் பொதிகள் அனைத்தும் தற்போது திருகோணமலையில் வைத்து சுங்க அதிகாரிகளால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக அவை அந்தந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக வெளிநாட்டுத் தபால் பொதிகள் சேவை தாமதமின்றி உடனுக்குடன் இடம் பெற்று வருவதாக பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெறுவதைப் போன்று யாழ்ப்பாணத்துக்கான வெளிநாட்டுத் தபால் பொதிகளை இங்கு வைத்தே பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இதற்கென விரைவில் சுங்க அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (50-224)

# கைதடி வடக்கு -யாழ்ப்பாணம் பாடசாலை பஸ்சேவை வழமைக்கு

நாவற்குழி, மே13

கைதடி வடக்கு -யாழ்ப்பாணம் பாடசாலை பஸ்சேவை அண்மைய ஒரு வார காலமாக வழமைக்குத் திரும்பியுள்ளது.

கடந்த 3 வருடங்களாகவே தடைப்பட்டிருந்த இச்சேவை மீளவும் வழமை நிலைக்கு திரும்பியதனையிட்டு பொது மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

முன்னைய காலத்தில் பாடசாலை சேவையை விட பொதுமக்களுக்கு மேலதிகமாக 3 சேவைகள் நடைபெற்று வந்தன. அச் சேவைகளையும் மீள ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் மூலம் கைதடிச் சந்தியிலிருந்து கைதடி வடக்கு, நவபுரம் வரையிலான 4 கிலோமீற்றர் தூரத்திற்கு நடந்து செல்லும் வறிய மக்கள் பயன்பெற முடியுமெனவும் கூறப்படுகின்றது. (50-121)

# இளவாலை, சுன்னாகம் பொலிஸாரின் நடமாடும் சேவைகள் சனியன்று

பண்டத்தரிப்பு, மே13

இளவாலை பொலிஸ் நிலையத்தின் நடமாடும் சேவை ஒன்று பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் இந்தச் சேவையில் காங்கேசன் துறைப் பொலிஸ் அத்தியட்சகரும் கலந்து கொள்வார்.

இதில் பொலிஸ் பிரிவில் பெறப்படும் அத்தாட்சிப் பத்திரங்கள் உட்படப் பல வேறு சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு.எம்.ஜே.பி.விஜேரட்ண கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை- சுன்னாகம் பொலிசாரும் ஜனாதிபதி யின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடமாடும் சேவையொன்றை நடத்தவுள்ளார்கள்.

நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டைகள், கடவுச்சீட்டுக்கள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றைத் தொலைத்தவர்களுக்கான முறைப்பாடுகளை ஏற்று அதற்கான பிரதிகளை உடன் வழங்கவுள்ளார்கள்.

மத்தியஸ்தர் சபையினால் தீர்க்கப்படாத பிணக்குகளை தீர்த்துவைக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

குற்றச் செயல்கள், தடுப்பு முறைகள், வீதி ஒழுங்கு, மதுபோதைப் பொருள் ஒழிப்பு மற்றும் டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, குப்பிளான், ஈவினை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை கலந்து பயன்பெறுமாறு சுன்னாகம் பொலிஸார் அறிவித்துள்ளனர். (50-86 -130)




# நல்லூர் இராசதானியை உரிய முறையில் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 13

நல்லூர் இராசதானியை உரிய முறையில் பாதுகாக்க எதிர்காலத்தில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

யாழ். நல்லூர் பகுதியில் புதிதாக உல்லாச விடுதி அமைப்பது தொடர்பாக கடந்த 10ஆம் திகதி யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நல்லூர் பகுதியில் உல்லாச விடுதி அமைப்பது தொடர்பாக உடனடியாக முடிவுகள் எதனையும் எட்டமுடியாது. இவ் விடயத்தில் மிக ஆழமாக ஆராய வேண்டியுள்ளது.

காழ்ப்புணர்ச்சியின் அடிப்டையில் முடிவுகள் எட்டப்பட முடியாது என்பதுடன், புதிய விடுதி அமைப்பது தொடர்பில் அதன் சாதக, பாதக நிலை குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1970 ஆம் ஆண்டு நல்லூர் பகுதி புனித பிரதேசமாக்கபட்டது என்ற தகவல் உண்மைக்குப் புறம்பான பிழையான தகவல். இவ்விடயம் தொடர்பாக நாம் பரிசீலிக்க உள்ளோம் - என்றார்.

நல்லூர் இராசதானி இனிவரும் காலங்களில் உரிய முறையில் பாதுகாக்கப்படும் என்பதுடன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். (50)

# வின்சர் சந்தியில் உள்ள கழிவுநீர் வாய்க்காலின் மேல் மூடிகள் சேதம்

கொழும்புத்துறை மே13

யாழ். வின்சர் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் உள்ள கழிவு நீர் வாய்க்காலின் சிமெந்து மூடிகள் உடைந்தும் சிதைந்தும் காணப்படுகின்றன.

இதனால் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்களும் பாதசாரிகளும் பெரும் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர். தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் இந்த வாய்க்காலைக் கடந்து சென்று எரிபொருளை நிரப்ப வேண்டியுள்ளது.

அதேவேளை பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் பவுசர்களும் நிலத்தடி எரிபொருள் தாங்கியில் எரிபொருளை நிரப்புவதற்காக இந்த வாய்க்காலைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் பாவனையாளர்கள் மற்றும் பல தரப்பினரும் வாய்க்காலின் மேல் தள உடைவுகளால் ஆபத்தையும், அசௌகரியத்தையும் சந்திப்பதாகக் கூறப்படுகின்றது. ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியும் சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (50-135)

# சென்.ஜோசப் வீதி புனரமைக்கப்படவில்லை

கொழும்புத்துறை, மே 13

கொழும்புத்துறை சென்.யோசப் வீதி, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

வளன்புரம் பகுதியில் வசிக்கும் மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதையாகவும், புனித சேவியர் குருமடத்திற்குச் செல்லும் பாதைகளில் ஒன்றாகவும் இந்த வீதி பாவிக்கப்பட்டு வருகின்றது.

இவ் வீதியைத் திருத்தி இப்பகுதி மக்களின் போக்குவரத்து இடையூறுகளை சீர் செய்து தருமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அதேவேளை இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்திருந்த பெரும்பாலான குடும்பங்கள் தற்போது மீளக்குடியமர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (50 -135)

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே.13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வியாபார நிலையங்களை நடத்துவோருக்கான சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நகரசபை கேட்போர் மண்டபத்தில் நடைபெறுமென நகரசபை செயலாளர் செல்வி வீ. சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (50-207)

# கலாசார விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி,மே 13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாசார விருதுகளை வழங்குவதற்கு கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கான முடிவுத் திகதி இம் மாதம் 25 ஆம் திகதியாகும். சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகத்தில் பெற்று பூரணப்படுத்தி செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (50-100)

# பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கு

நவாலி,மே 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்கு புதிதாக விண்ணப்பம் செய்தவர்களை அதற்கான கொடுப்பனவுகளைத் தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (50-100)

# விசேட தேவை உள்ளோருக்கு உதவி

நவாலி,மே 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட விசேட தேவைக்குரியவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் சமூக சேவை உத்தியோகத்தர் வி. அருந்தவராசாவுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (50-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை மாணவர்களிடையே கடந்த 2009ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணனி மென்பொருள் ஆக்கப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் தலைமை உரையையும், யாழ்.கல்வி வலய தகவல் தொழில்நுட்ப இணைப்பாளர் எஸ்.வி.மகேந்திரன் உரையாற்றுவதையும் முதலிரு படங்களிலும், மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்ட கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மாணவன் எஸ்.கௌசிகனுக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் விருது வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

*(படங்கள்: கோப்பாய்ச் செய்தியாளர்)*

## இறைவன் அன்பு வடிவானவன் என்பதை நம்புங்கள்

ஆனந்த சொரூபனான நான், என்றைக்கும் ஆனந்தமாகவே இருக்கிறேன். என்னைப் புகழ்பவர்களைப் பார்த்தும் புன்னகை புரிகின்றேன். இகழ்வர்களைப் பார்த்ததும் புன்னகை புரிகின்றேன். என்மேல் அபவாதமாக ஏதாவது சொல்லுவதன் மூலம் சிலர் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்களுடைய ஆனந்தத்தைப் பார்த்து நீங்களும் ஆனந்தப்பட வேண்டும். ஆனந்தம் தருவதே என் நோக்கம். இந்தத் தீமையிலும் ஒரு நன்மை இருக்கிறது. தானியத்தைச் சுளகில் இட்டுப் புடைக்கும்போது பதரும், உமியும் நீங்கி நல்ல தானியங்கள் தனித்து நிற்பது போல, இந்த மனிதர்கள் பொய்மையெனும் சுளகால் தூற்றும்போது வேரற்ற செடிகள் மென்மையான தென்றலுக்கு வீழ்ந்து விடுவது போன்று, நம்பிக்கை என்னும் அடித்தளம் அற்றவர்கள் சிதறிப்போய்விடுவார்கள். உண்மையான பக்தியும், திடமான நம்பிக்கையும் உடையவர்கள் நிலைத்து நிற்பார்கள்.

''கடவுள் கடின இதயம் படைத்தவர். பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கவில்லை. தமது படங்களில் அவருடைய அனுக்கிரகத்தைக் காட்டும் அடையாளங்களைத் தோற்றுவிக்கவில்லை. ஆறுதல்தர, உறுதிகூற அசரீரியாகம் பேசவில்லை என்றெல்லாம் குறை கூறுகிறீர்கள். நான் சொல்லுவதைக் கேளுங்கள். கடவுள் அன்புருவானவர், அன்பே இறைவன். இறைவன் உங்கள் பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கவில்லையென்றால் உங்கள் பிரார்த்தனை இதய ஆழத்திலிருந்து வரவில்லை, அந்தப் பிரார்த்தனை வெறும் நடிப்பு, கபடம் நிறைந்தது என்றே கொள்ளவேண்டும். கடவுள் உனக்கு மிகவும் நெருங்கிய மிகுந்த அன்பு கொண்ட உறவினர்''.



**சாயி சிந்தனை**


மஹஜன ஸம்பத
மஹாஜன சம்பத
Mahajana Sampatha

11.05.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2239

வெற்றி எழுத்து: P  வெற்றி எண்கள்: 4 0 1 1 1 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P 4 0 1 1 1 5 | ரூபா 11,213,780/= | பரிசு | - |
| 1 பரிசுகள் | ■ 4 0 1 1 1 5 | ரூபா 2,000,000/= | பரிசுகள் | 02 |
| 2 பரிசுகள் | ■ ■ 0 1 1 1 5 | ரூபா 100,000/= | பரிசுகள் | 12 |
| 3 பரிசுகள் | ■ ■ ■ 1 1 1 5 | ரூபா 10,000/= | பரிசுகள் | 144 |
| 4 பரிசுகள் | ■ ■ ■ ■ 1 1 5 | ரூபா 1,000/= | பரிசுகள் | 1216 |
| 5 பரிசுகள் | ■ ■ ■ ■ ■ 1 5 | ரூபா 100/= | பரிசுகள் | 12195 |
| 6 பரிசுகள் | ■ ■ ■ ■ ■ ■ 5 | ரூபா 20/= | பரிசுகள் | 120879 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | ■ 4 0 1 1 1 ■ | ரூபா 10,000/= | பரிசுகள் | 13 |
| 8 பரிசுகள் | ■ 4 0 1 1 ■ ■ | ரூபா 1,000/= | பரிசுகள் | 121 |
| 9 பரிசுகள் | ■ 4 0 1 ■ ■ ■ | ரூபா 100/= | பரிசுகள் | 1193 |
| 10 பரிசுகள் | ■ 4 0 ■ ■ ■ ■ | ரூபா 50/= | பரிசுகள் | 12152 |
| 11 பரிசுகள் | P ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/= | பரிசுகள் | 48391 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 13,138,900.00

அடுத்த சீட்டிழுப்பிற்கான சுப்பர் பரிசு
Rs. 11,291,474.00

தேசிய லொத்தர் சபை







## கூறுவிலை கோரல்

1. சுற்றுலா விடுதி
2. பொறியியலாளர் விடுதி

இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சாரசபை பிரதிப்பொது முகாமையாளர் வட மாகாண அலுவலகத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் வசதிகளுடைய ஒரு சுற்றுலா விடுதியும், பொறியியலாளர் விடுதியும் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

1. I) சுற்றுலா விடுதி - ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   II) பொறியியலாளர் விடுதி - ஆகக் குறைந்தது நான்கு அறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்டதாகவோ அல்லது அதற்கு அண்மித்ததாகவோ இருத்தல் வேண்டும்.
3. நீர் வசதி உள்ளதாகவும் மற்றும் மலசலகூட வசதியுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
4. வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடியதான இடவசதி உள்ளதாக இருத்தல் விரும்பத்தக்கது.
5. குறைந்தது 3 வருடங்கள் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளை உடைய கட்டட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளைப் பதிவுசெய்யப்பட்ட காணி உறுதிப் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 20.05.2010 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு),
பிரதிப் பொது முகாமையாளர் (வ) அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
இல.500, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும்''
இலங்கை மின்சார சபை.

தொலைபேசி இல: 021 222 2496, 021 222 3233.
தொலை நகல் இல: 021 222 2497.

(சி/567583)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இந்த வாரம்

**மே 07**




நூரம் பேர்க் மற்றும் டோக்கியோ ஆகிய இடங்களில் நடைபெற்றதற்குப் பின்னர் முதலாவது சர்வதேச போர்க் குற்றவிசாரணைகள் 1999 மே 7 ஆம் திகதி ஹேக் நகரில் ஆரம்பமாகின. இதில் பொஸ்னியா வைச் சேர்ந்த சேர்பியரான 'டுஷாந் காடிக்'சிறையில் உள்ள முஸ்லிம்களை கொன்ற குற்றத்துக்காக விசாரிக்கப்பட்டார்.

**மே 08**

1945 மே 8 ஆம் திகதி இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்தது. இது வெகு விமரிசையாக 'VE'என்று கொண்டாடப் பட்டது. ஐரோப்பாவை வெற்றி கொண்ட நாள் என்பது அதன் கருத்து.



**மே 09**




195 மே 09 ஆம் திகதி நேட்டோ அமைப்பில் (வட அத்லாந் திக் ஒப்பந்த ஸ்தாபனம்) இணைவதற்கு மேற்கு ஜெர்மனி அனுமதிக் கப்பட்டது.

**மே 10**

தென்னா பிரிக்காவின் ஜனாதிபதியாக விடுதலைப் போராளியான நெல்சன் மண்டேலா பிரகடனப்ப டுத்தப்பட்ட தினம் 1994 மே 10 ஆகும்.



**மே 11**



'சயாம்' என்று அழைக்கப்பட்டு வந்த நாடு 1949 மே 11 ஆம் திகதி முதல் தன்பெயரைத் தாய்லாந்து என்று மாற்றிக் கொண்டது.

**மே 12**

கவுன்ரி கிரிக்கெட் சாம்பியன் போட்டியின் முதலாவது அதிகாரப் பூர்வ போட்டி 1890 மே 12 ஆம் திகதி நடத்தப்பட்டது. இதில் யோர்க்ஷயர் அணி கிளெவ் செஸ்ரர் ஷயர் அணியை எட்டு விக்கட்டுகளால் வீழ்த்தியது.




**மே 13**



1981 மே 13 ஆம் திகதி பாப்பரசரை (2 ஆவது ஜோன்போல்), சென். பீட்டர்ஸ் சதுக்கத்தில் வைத்து கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப் பட்டது.

# இளவல்கள் வட்டம்

YOUTH

### கேள்விக்கென்ன பதில்?- 70இன் சரியான விடை

சவுதி அரேபியா.

### கேள்விக்கென்ன பதில்?- 70 இல் பரிசு பெறுவோர்

1. செல்வநாயகம் ரவிசாந், குறிஞ்சிக் குமரன் வீதி, வீரமனை, குப்பிளான்.
2. போகநாதன் யசோதா, மணியம் பாடசாலை வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
3. ஜெ.மனோறஞ்சிதம், 82/29, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.

### கேள்விக்கு என்ன பதில்?-72

உலகிலேயே மிகப்பெரிய நாடக நூல் எது?
(சரியான விடையை 20.05.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

# அனாதை



அன்னையின் அன்பை உணராது
அவள் முகம் தெரியாது...
உறவுகள் இருந்தாலும் - அதன்
உருவம் தெரியாது....
கால்போன போக்கில்
வளர்ந்த நீயும் அனாதைதான்

எனக்காக எல்லாம் இருந்தும்
எல்லையற்ற உறவுகள் இருந்தும்
அன்பு என்ற சொல்லிற்கு
அகராதியில் பொருள் தேடினேன்
அன்பான உறவுகளை...
வரும்வழியில் தொலைத்துவிட்டேன்

தொலைந்த போது தெரியவில்லை...
தொலைந்து போனது...
பாசத்தின் இருப்பிடங்கள்
வாழ்க்கையின் வசந்தங்கள் என்று
என்றோ தொலைத்த உறவை
இன்றுவரை தேடும் - நானும்
உன் ஜாதிதான்.

த.தர்சினி,
[illegible]

### இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக ளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................
முகவரி:-......................................
:-......................................
........................ ..............................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# நாகரிக மோகம்



மின்னி மின்னி
எங்கிருந்தோ வருகின்றது
வெளிச்சம்
வெஃகியே வெகுத்தது
வெளியெங்கும்....
மின்மினிப் பூச்சிகளாய்.
மின்னி மின்னியே
தன் வனப்பிற்கு
வலுச் சேர்த்தது ....
வனப்பினால் ஈர்க்கப்பட்டே
ஈர்ப்பினால் எல்லாம்
மாற விரும்புகின்றதே
மின்மினிகளாய்....
இருட்டில் இருந்து
பார்ப்பதனாலே தான் மின்மினிகளும்
அழகாய்த் தெரிகின்றன
விடிந்து விட்டால்
இதன் வனப்பு மறைந்திடுமே!

பொன். சுகந்தினி.

# வாழ்வின் மகிழ்விற்கு.....!



"துன்பம் வரும்போது சிரிப்பவனே மனஉறுதி உள்ளவன்" "நிறைகுடம் தளம்பாது" என முதுமொழியாகப் பேசப்பட்டதை நிறைவு, திருப்தி உள்ள மனங்களுக்கு ஒப்பிடலாம். குறைகாணும் உணர்வும், குறை கூறும் மனமும் பிறர் நிறைவை ஏற்றுக்கொள்ள முடியாது திண்டாடுவதையும் கலங்கித் தவிப்பதையும் பல சமயங்களில் நம் வாழ்வில் காணமுடிகிறது.

'என் கதியற்ற நிலையைக் கூட ஏற்றுக் கொள்வேன் இன்னொருவரின் நம்பிக்கை ஒளியை என்னால் சகிக்க முடியாது' என்றார் வில்லியம் வார்ஷ். இதுவே தன் நிறைவையும் அனுபவிக்க முடியாது ஏங்கித் தவிப்பதுடன் மற்றவர் மகிழ்ச்சிகளையும் ஏற்க முடியாது சிலருக்கு துன்பமாகிவிடுதலும், தன் முயற்சியில் திருப்தி அடையாது இருத்தலும் ஆகும். நேற்றைய பொழுதை தொலைத்து அனுபவிக்க முடியாது, திருப்தி அடையாது வாழ்வோரா வாழ முற்படும்போது சந்தோஷம்- திருப்தி என்பது வாழ்வில் கேள்விக் குறிகளாகவே மாறிவிடுகிறது.

நான் என்னில் திருப்தி கொள்ளல் ஒரு பொழுதோடு மறைய வேண்டிய காட்சியல்ல. குறைகள் என எண்ணிக் கொள்பவர் அதிலிருந்து விடுபட முனையாது நிறைவு அலைகளில் தம்மை குறைத்து மதிப்பிடுவதால் அவரது வாழ்வு எதிலும் சந்தோஷமும்- திருப்தியும் தொலைந்து போன ஒன்றாகிவிடுவதற்கு சில காரணங்கள் உண்டு. அவரது வாழ்வின் வளர்ச்சி படிகளில் ஏற்பட்ட மனவடுக்கள் ஆழமான மனப்பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும். அவற்றைக் கூட கடந்த நிறைவான வாழ்வில் திருப்தி முனைதலுக்கு வாழவேண்டும்.

சில சமயுங்களில் சிலரது நடவடிக்கைகள், வார்த்தைப் பிரயோகங்கள், அதிகாரத்தனங்கள், அலட்சியப் போக்குக்கள், சினம் கொள்ளல், மதுபபாவனை, போதைப் பொருள் பாவனை தொடராக எதிர்கொள்பவர்க்கு தாக்கத்தை ஏற்படுத்துவதை எண்ணியே வருத்தப்பட்டுக் கொள்பவராகவும் இருக்கலாம். இவை உடல்ரீதியான தாக்கத்தைவிட உள ரீதியாக துன்புறுத்தம் செயல்களே! இவை அதிக உள வடுக்கதை ஏற்படுத்தி விடும். அந்த நிகழ்வு, அந்த வார்த்தை, அந்தக் காட்சி மனதில் ஏற்படும் போதெல்லாம் மனச்சோர்வு, தலை விறைப்பு, உடல்நோய், விரக்தி, கோபம், தவறான பழக்கவழக்கம், குடித்தல், புகைத்தல், போதைப் பொருள் பாவித்தல் முதலிய நெருக்கீடுகளை ஏற்படுத்தி மகிழ்வான வாழ்வை சிதைத்து விடுகிறது.

துன்புறுத்துபவர்கள் பற்றியே மீண்டும் மீண்டும் சிந்தித்தும்,எம் உள,உடல் நலத்தை சீரழக்கும் போது எமது சுகங்கள், மகிழ்ச்சிகளே அதிகம் [illegible] இதனால் [illegible] தம்மை செயலிழக்க திட்டமிடுகிறார்க்ள் என்பதனை உணர்ந்து [illegible] எம்மைப் பலமுள்ளவராக்க முனைபவரே சந்தோஷமான வாழ்வை அனுபவிக்க முடியும். ★


சு.டர்சிகா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு.

# சிந்தனைக்கு விருந்து

- தவறு செய்வது இயல்பு, திருத்திக்கொள்வது உயர்வு.
- ரசிக்கத் தெரிந்தவர்கள் கற்பனை வளம் உடையவர்கள். அவர்கள் நெகிழும் தன்மை கொண்டவர்கள்.
- உங்களை யார் எந்நேரமும் கண்டித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் உங்கள் மீது அக்கறை உடையவர்கள் ஆவர்.
- இனிய உள்ளத்தின் அடையாளம் மலர்ந்தமுகம்.
- தீய நண்பர்களுடன் உறவாடுவதைவிட நண்பர்கள் இன்றி இருப்பதே மேல்.
- உன் நண்பன் மீது சந்தேகம் கொள்ளாதே, அவன் உன் மீது சந்தேகம் கொண்டால் அதைப் பெரிதுபடுத்தாதே.
- கண்ணீர் துயரத்தின் மௌன பாஷை.
- அவசரத்தில் திருமணம் செய்யின் ஓய்வு நேரத்தில் வருந்த வேண்டும்.
- கவலையைவிட மிகக் கொடியது ஒருவரிடமுள்ள சந்தேகம்.
- நல்லவர்கள் எல்லோரும் நண்பர்கள் இல்லை. அதேபோல் நண்பர்கள் எல்லோரும் நல்லவர்கள் இல்லை.
- சோகம் ஒரு பனிக்காடு சுகம் வருமுன் மறைந்துவிடும்.
- மற்றவனைப் பற்றி ஒருவர் குறை கூறினால் அவற்றை செவிமடுக்காதே.
- ஒரு தலைக்காதலும் உயிரற்ற குழந்தையை வயிற்றில் சுமப்பதும் ஒன்றே.
- திறமை மட்டும் ஒருவனை எழுத்தாளன் ஆக்காது. எழுத்துக்குப் பின்னால் இதயம் வேண்டும்.
- [illegible]னால் காயம் ஏற்படும். வார்த்தை தவறினால் வாழ்வே தவறிவிடும்.
- விரும்புவதைப் பெறமுடியாது. ஆகையால் பெறமுடிவதை விரும்பு.

சா.[illegible],
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 51 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய அங்கத்தவர்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நிலைய முன்றலில் அண்மையில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் நிலைய அங்கத்தவர் இரத்தம் வழங்குவதற்காக பரிசோதனை மேற்கொள்ளப்படுவதையும் இரு இளைஞர்கள் மற்றும் யுவதி ஆகியோர் இரத்தம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (288)

# பெருமை மிக்க புராதன குடியிருப்புப் பிரதேசத்தில் ஹோட்டல்கள் அமைவது வரலாற்றுச் சூழலைப் பாதிக்கும்

## முன்னாள் ஆணையாளர் சிவஞானம் காட்டம்



யாழ்ப்பாணம், மே13

பெருமைமிக்க ஒரு குடியிருப்புப் பிரதேசமாகவும் புராதன நகரமாகவும் விளங்கும் நல்லூர் பகுதியில் ஆடம்பர ஹோட்டல் அமைத்தல் வரலாற்றுச் சூழலைக் குழப்பிவிடும்.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் நல்லூரில் வசிப்பவருமான சி.வீ.கே.சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் ஹோட்டல் அமைப்பது தொடர்பாக இடம்பெற்ற கருத்தறிவதற்கான கலந்துரையாடலுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இப்படிக் கூறியுள்ளார்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பிறிதொரு தனிப்பட்ட நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால் தங்களால் அழைக்கப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொள்ளமுடியவில்லை.

எவ்வாறாயினும்; இலக்கம் 844, 852 பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எண்பது அறைகள் கொண்ட மூன்று நட்சத்திர ஹோட்டல் சம்பந்தமாக ஒரு முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் என்ற வகையிலும், நகரத்தின் சிரேஷ்ட பிரஜை என்ற வகையிலும் உத்தேச அமைவிடத்திற்கு 250 மீற்றருக்குள் வசிப்பவன் என்ற வகையிலும், இத்திட்டத்திற்கு எமது பலமான ஆட்சேபயினை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலை மையமாகக் கொண்டதும் கைலாசபிள்ளையார் கோயில், வீரமாகாளி கோயில், சட்டநாதர் சிவன் கோயில், தலங்காவற் பிள்ளையார் கோயில் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களை உள்ளடக்கிய கந்தர்மடம், ஆனைப்பந்தி, நல்லூர், நாயன்மார்கட்டு, கல்வியங்காடு பகுதிகள் சைவத் தமிழ் மக்களது கலாசார பண்பாட்டு மையமான நல்லூர் பெரும் (Greater Nallur)பிரதேசமாகும். இங்கேதான் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் ஆட்சிப்பீடம் அமைந்திருந்தது. போர்த்துக்கீசர் ஆக்கிரமிக்கும் வரை நல்லூர்தான் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் தலைநகராக இருந்திருக்கிறது என்பது யாவரும் ஒப்புக்கொள்வர்.

இந்தநிலையில் இதுவரை, எமது கலை, கலாசார,மொழி மற்றும் பண்பாட்டு விழுமியங்களை, நினைவுபடுத்தும் வகையில் சங்கிலியன் தோப்பு, பண்டார மாளிகை, யமுனா ஏரி, இராசாவின் தோட்டம் என்ற பெயர்கள் இன்னும் புழக்கத்தில் உள்ளன. இதனாலேயே தான் இப்பிரதேசம் பெருமைமிக்க ஒரு குடியிருப்புப் பிரதேசமாக இன்னும் இருந்து வருகின்றது. இது ஒரு புராதன நகரமாகும். எனவே இந்தப் பகுதியில் ஓர் ஆடம்பர ஹோட்டல் அமைதல் இந்த வரலாற்றுச் சூழலை குழப்பிவிடும் என்பது திண்ணம். மேலும் இந்த அமைவிடம், தமிழர் ஆட்சியோடு நேரடியாகத் தொடர்புடைய நிலமாகும்.

எண்பது அறைகள் கொண்ட மூன்று நட்சத்திர ஹோட்டல் என்பது கேளிக்கைகள், களியாட்டம், மதுபானப் பாவனை போன்றவற்றைக் கொண்டுள்ள ஒன்றாகும். இது இந்த சுற்றாடலின் வாழ்வியல் அமைதியையும், கலாசார பேணுகைகளையும் பாரியளவில் பாதிக்கும். மேலும் வருடத்தின் பன்னிரண்டு மாதங்களில் சுமார் ஒருமாதம் வரை நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழா நாள்களில், வீதித் தடை முத்திரைச்சந்தியில் அமைவதால், மிகவும் அதிகரித்த பயணிகள் போக்குவரத்து இந்த இடத்திலிருந்து பதினைந்து அல்லது இருபது மீற்றர் தூரத் துக்குள்ளேயே அமைகிறது என்பதால், ஆலய வழிபாட்டுக்கு வருவோருக்கு இது பாரிய இடைஞ்சலாகவே இருக்கும்.

✱ உயர்மாடி கட்டடமாடிகளின்பாவனையாளரின் கண்பார்வைக்கு எட்டிய தூரத்துக்குள் வசிக்கும் மக்களது (குறிப்பாக பெண்களது) தனிமையை (Privacy) நிச்சயம் பாதிக்கும்.

✱ இந்தப் பாரிய கட்டமைப்பின் கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருள் கையாள்கை பற்றி எவ்விதம் கூறினாலும் இவை இப்பகுதியின் நிலத்தடி நீர் வளத்தை நிச்சயம் பாதிக்கும் என்பது திண்ணம். எனவே இது சுற்றுச் சூழலுக்கு முரணான திட்டமாகும். இதற்கான குடிதண்ணீர் விநியோகம் எவ்வாறு அமையப் போகிறது என்பது தெளிவில்லை. எவ்வாறாயி னும் திருநெல்வேலி மற்றும் கோண் டாவில் நீர் விநியோகத் திட்டத்திலிருந்து குடிதண்ணீர் வழங்கப்படுமானால் அது யாழ்.நகர மக்களை கடுமையாகப் பாதிக்கும் என்பதும் திண்ணம்.

✱ இந்தக் கலந்துரையாடல் எந்த அளவில் மக்கள் கருத்தை உள்வாங்கி முடிவெடுக்க உதவும் என்பது சந்தேகத்துக்குரியதாகவே தென்படுகிறது. ஏனெனில் கடந்த 9ஆம் திகதி ''உதயன்'' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தின்படி கட்டடவேலை உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே முடிவெடுக்கப்பட்ட ஒரு விடயமாகத் தோற்றமளிக்கும்போது கருத்தறிதல், கலந்துரையாடல் என்பது கண்துடைப்பாகவும், ஒப்பாசாரத்துக்காகவும் நடத்தப்படுவதுமாகவே கொள்ளப்படலாம்.

✱ இது ஹோட்டல் அமைப்புக்கு எதிரான கருத்தல்ல. அது நல்லூரில் அமைவது நிச்சயம் பொருத்தமில்லை என்பது எமது கருத்து.

✱ எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டுள்ள ஆட்சேபனை எனது கருத்து மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையான மக்களின் கருத்து என்பதை கவனத்திற் கொண்டு இதற்கான அனுமதியை வழங்க வேண்டாமென மாநகர சபையையும், நகர அபிவிருத்திச் சபையையும், சூற்றுச்சூழல் அதிகார சபையையும் இத்துடன் தொடர்புடைய ஏனையோரையும் வேண்டுகிறேன். அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் மக்களின் வரலாற்றுத் தொன்மையும், வாழ்விட சூழல், சமய, கலாசார, விழுமியங்களும் சிதைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான மொனிற்றர், பிறிபக்ற் சின்னங்கள், பித்தளை, சில்வர், பிளாஸ்ரிக்கில் நீண்டகாலம் பாவிக்கக் கூடிய எச்சிங், எங்கிறேவிங் முறைகளில் செய்து கொள்ள...
S.S.யசோதரன் ஆட்ஸ்
381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன்கோயில் அருகாமையில்) தொ.பே:0217903020

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 05 ✱ 07 ✱ 1980 — இறப்பு 13 ✱ 05 ✱ 2009

செல்வச்சந்திரன் கானப்பிரியா



பிறப்பு 04 ✱ 10 ✱ 1991 — இறப்பு 14 ✱ 04 ✱ 2009

ராஜ்குமார் மதிசாயினி

காற்றலைகளில் கவிக்குயிலாய் கவிபாடிச் செல்லும் கானப்பிரியாவே!
வானொலிகளில் வண்ண வண்ண முத்துச் சொற்களால் முழங்கிடும்
முதுமைப் புலவனாகினாய் எம் மனங்களில்
கவி மழையில் எம்மை நனைய வைத்திடும்கவிச் சக்கரவர்த்தியே
கானம்உன் மக்கள் மனங்களில் உரமாக ஊறிவிட்ட உன்னத தோழியே கானம் - உன்
சோதரி பாவரசியுடன் பாசமுடன் பறந்து சென்றதேனோ?
உன் கவி வரிகளை தோழர் நாம் பார்ப்பதெப்போது? கானமே
உன் பாசமொழிகளை வானொலியில் கேட்பதெப்போ - செல்வங்களே
பிரிக்க முடியா எம் பாசப்பிணைப்பிலிருந்து பிரிந்து சென்றதேனோ - செல்வமே
எம்மை விட்டு பிரிந்து சென்றாலும் எம்முயிர் உள்ளவரை
உம் உருவம் மறையாது.

42, நமணங்குளம்,
மல்லாவி.
பட்டுப்பூச்சி, பாலிநகர்.

என்றும் உம் நினைவில்
குடும்பத்தினர்.

(98081)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

## பிறேமலோஜினி பிரபாகரன்



தாயின் மடியில் தவழ்ந்தது
30 ★ 08 ★ 1982

தீயின் கையால் அணைந்தது
13 ★ 04 ★ 2010

மாதம் ஒன்று ஆனதம்மா
மாறவில்லை எம் சோகமம்மா
மாசுமறு இல்லாத மாதரசி நீயம்மா
மாயமாய் மறைந்து தான் போனது ஏனம்மா
மறுபிறப்பு உண்டென்றால் பிறேமாவே
மறுபடியும் இங்கே வந்து பிறந்திடம்மா
உங்கள் ஆத்மா சாந்தி பெற்றிட
அனுதினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

18/1, சீனியர்லேன், கலட்டி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
ச.சுப்பிரமணியம் (தந்தை) மற்றும்
குடும்பத்தினர்.

(97913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் தட்டச்சுச் செய்வதை வாசித்துக் காட்டும் மென்பொருள்




ஆங்கிலத்துக்கு ஈடாகக் கணனித் துறையில் தமிழ் தடம் பதித்து ஆழமாக வேரூன்றி விட்டமை நாம் அறிந்த விடயம்.

குறிப்பாக மேல் நாட்டவர்களுடன் சவால் விட்டுப் போட்டி போட்டுச் சாதித்து வருகின்றார்கள் இந்தியத் தமிழர்கள்.

அந்த வகையில் வரிசையாக -ஆங்கில மென்பொருள்களுக்குச் சமானமான மென்பொருள்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

அண்மையில் மைக்ரோசொப்ட் தமிழ் மொழிக்கான மொழித்தொகுப்பு ஒன்றினை வெளியிட்டதன் மூலம் தமிழ் மொழிக்கு உயர் அங்கீகாரம் கொடுத்தமையானது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இப்போது கணனியில் தமிழில் தட்டச்சுச் செய்வதைக் கணனி தமிழிலேயே வாசித்துக் காட்டும் ஒரு மென்பொருளை *(engine)* பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தின் *(Indian Institute of science)* பேராசிரியர்.ஏ.ஜி.ராமகிருஷ்ணன் உருவாக்கியிருக்கிறார்.


இதன் பரீட்சார்த்த வடிவத்தினை தமது இணையத் தளத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்.

*http://mile.ee.iisc.ernet.in:8080/tts_demo* என்ற முகவரியில் அதனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இம்மென்பொருள் ஒன்லைனில் இருந்தவாறே யுனிக்கோட் எழுத்துருவைப் *(Unicode Font)* பயன்படுத்தித் தட்டச்சுச் செய்யும் தமிழ்ச் சொற்கள், வசனங்கள், பந்திகளை அப்படியே ஒலி வடிவமாக மாற்றித் தருகின்றது. தமிழ் தவிர கன்னட மொழியிலும் யுனிக்கோட் வடிவத்தில் தட்டச்சுச் செய்யப்பட்ட எழுத்துக்களையும் இந்த செயலி மிகத் திருத்தமாக அறுத்துறுத்து வாசித்துக் காட்டுகிறது.

இது ஒரு பரீட்சார்த்த நிலை என்பதனால் ஆங்கிலச் சொற்களும் சேர்ந்து காணப்பட்டால் அவற்றைச்சேர்த்து வாசிக்காத தன்மை, எண்களை வாசிப்பதில் சிக்கல் போன்ற ஒரு சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனாலும் இத்தகைய குறைகள் தொடர்பான முறைப்பாடுகளையும், மேம்படுத்தலுக்கான ஆலோசனைகளையும் பேராசிரியர்.ஏ.ஜி.ராமகிருஷ்ணன் பயனர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார்.




இத்தகையதொரு செயலியைப்பயன்படுத்தி குரல் வழிப் பயிற்சியோடு மட்டும், தொலைபேசி எண்களைக் கையாள்வதற்காகக் கணனியைக் கற்றுக் கொண்ட பார்வையிழந்த ஒருவர் இப்போது மின்னஞ்சல் பயன்பாட்டில், உள்வரும் மின்னஞ்சல்களை வாசிப்பதிலும், பதில் அனுப்புவதிலும் புலமை பெற்றிருக்கின்றார்.

அதேபோல விழியிழந்தவர்களை மட்டுமல்ல, மொழி இழந்த ஒரு தலைமுறைக்கும் தமிழைக் கொண்டு செல்ல இந்தச் செயலி உதவும் என்பதால், இன்று அவசியம் தேவைப்படும் ஒரு தொழில்நுட்பமாக இது புகழப்படுகிறது.

இதனை வடிவமைத்த பேராசிரியர்.ஏ.ஜி.ராமகிருஷ்ணன் "உத்தமம்" - தமிழ் இணைய மாநாட்டிலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்குப் பங்களிப்புச் செய்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

"மெல்லத் தமிழ் இனி இணையத்தை ஆளும் என்பதில் ஐயமேதும் இல்லை"

# எல்லாத் தமிழ்ச் செய்தித் தளங்களும் ஒரே தளத்தில்

இணையத்தோடு தமிழ் மொழியின் அசுர வளர்ச்சி காரணமாக நாளுக்கு நாள் புதிது புதிதாய்த் தமிழ்மொழி இணையத்தளங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அத்தனை தளங்களுக்கும் "விசிட்" செய்து அவற்றைப்பார்ப்பதற்கு யாருக்குத் தான் நேரமிருக்கும்?

ஆனாலும் எல்லா இடங்களிலுமிருந்து வருகின்ற தலைப்புச் செய்திகளையாவது படித்து விட வேண்டும் என்ற ஆர்வம் இருக்கின்றதல்லவா?

இந்தத் தாகத்தைத் தணிப்பதற்கென்றே தகவல்.இன்போ *(thakaval.info)* தளம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அனைத்துத் தமிழ்ச்செய்திகளையும் ஒரே இடத்தில், உடனடியாகப்பார்க்கும் வகையில், ஒவ்வொரு தமிழ் செய்தித் தளத்தின் முக்கிய செய்திகளின் தலைப்புக்களை இத் தளத்தில் கொடுத்துள்ளனர்

இதில் நாம் அனைத்துத் தமிழ் இணையத் தளங்களையும், செய்திகளையும் ஒரே இடத்திலிருந்து அந்தந்த இணைப்புக்களில், தலைப்புக்களில் சொடுக்கி அந்தந்த இணையத் தளத்திற்க்குச்சென்றுபார்க்கலாம்.

நம் நேரத்தைச் சேமித்து நமக்குப் பிடித்த செய்திகள் அல்லது நாம் தெரிந்து கொள்ள விரும்பும் செய்திகளை மட்டும் உடனடியாகப் பார்க்க இந்தத் தளம் உதவுகின்றது.


www.thakaval.info என்ற இத் தளத்தின் வலது புறத்தில் காணப்படும் மெனு இதன் மற்றொரு சிறப்பம்சமாகும். இதன் மூலம் வகைப்படுத்தப்




பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதில் தோன்றும் மெனுவிலிருந்து தேவையான வகையைத் தெரிவு செய்து தொடரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

– ஆர்.சுமதி, கைதடி –


தகவல்.INFO



# இணைக்கப்பட்டுள்ள யூ.எஸ்.பி சாதனங்களின் விவரங்கள்

கணனியில் வழக்கமாகப் பல்வேறுபட்ட யூ.எஸ்.பிக் கருவிகளை நாம் பயன்படுத்தி வருகிறோம்.

பிளாஷ் ட்ரைவ், வெப் கமரா, ஸ்கானர், பிரின்டர் எனப் பல்வேறுபட்ட சாதனங்களை இப்போது மிக இலகுவாக யூ.எஸ்.பி மூலம் இணைக்க முடிகின்றது.




இவ்வாறு இணைக்கப்பட்டிருக்கும் சாதனங்கள் எவை?, அவை எந்தெந்த "போர்ட்" ல் இணைக்கப்பட்டிருக்கின்றன போன்ற விடயங்களை உடனடியாக அறிந்துகொள்வதற்கு *USBDeview* என்ற மிகச் சிறியதொரு மென்பொருள் உதவுகின்றது.

*http://www.nirsoft.net* என்ற இணையத்தளத்தில் இலவசமாகக் கிடைக்கும் இம் மென்பொருளின் கொள்ளளவு *64.1 Kb* மட்டுமே. இதனை நிரந்தரமாகக் கணனியில் நிறுவும் தேவை கூட இல்லை.

*usbdeview.exe* என்ற *file* ஐ *double click* செய்து இயக்கினால் போதும் *USB* தொடர்பான சகல விவரங்களையும் தருவதோடு, அந்தக் கருவிகளை இயக்கும் கட்டளைகள் சிலவற்றையும் இம் மென்பொருள் கொண்டிருக்கின்றது.

அத்துடன் சகல விவரங்களையும் *text file* ஆகச் சேமித்துப் பெறவும் முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷம்**



எந்த வேலையையும் மற்றவர்கள் பாராட்டும் வகையில் செய்வீர்கள். தொழில் ரீதியான விடயங்களில் கடும் நெருக்கடிகள், அவதிகளுக்கு ஆளாகலாம். பழைய அனுபவம் ஒன்றை நினைத்து பார்த்து புதிய காரியங்களைச் செய்வீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பெண்கள் வழியில் உதவி கிட்டும்.

**இடபம்**



திட்டமிட்ட வேலைகளைச் செயற்படுத்துவதில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பணவரவு ஒன்று வருவது போல தோன்றினாலும் கைக்குக் கிடைக்காது. பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். நண்பர் ஒருவரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்காமல் அவர் கையை விரிக்கலாம். ஆனைமுகன் வழிபாடு ஆறுதல் தரும்.

**மிதுனம்**



தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் செய்தியை கேட்கலாம். நண்பர்களுக்காகச் சிலரிடம் சண்டை போடுவீர்கள், பரிந்து பேசுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். பிள்ளைகளிடம் அதிக பாசமாக நடந்து கொள்வீர்கள். பிடித்தமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**கடகம்**



காலை முதல் மாலை வரை இடைவெளி இல்லாமல் பல வேலைகளைச் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள், குடும்பத்தினர் அறிந்து கொள்ளாத வகையில் சில காரியங்களை ரகசியமாக செய்வீர்கள். வாக்குக் கொடுத்த ஒருவரிடம் அதை நிறைவேற்றாமல் சமாளிப்பீர்கள்.

**சிங்கம்**



உங்களின் மனக்குறை ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி புலம்புவீர்கள். நீங்கள் அறிந்த விடயம் ஒன்றைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பீர்கள். அண்டை, அயலார் பேச்சை கேட்டு செயற்படுவதன் மூலம் சில விடயங்களில் பிரச்சினை உருவாகலாம். எதிர்பார்ப்பு ஒன்று ஏமாற்றம் தரும் விதத்தில் அமையும்

**கன்னி**



விமர்சனங்களை, கேலிப் பேச்சுக்களைச் சந்திக்கலாம். செய்ய மறந்த வேலைகளால் அவதிகளுக்கு, பண நஷ்டத்திற்கு ஆளாகலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்களை மாற்றி அமைக்கலாம். பிரியமான சிலரே உங்களிடம் கோபமாக நடந்து கொள்ளலாம். மனதில் இனம்புரியாத வெறுப்பு, விரக்தி குடிகொள்ளும்

**துலாம்**



வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். மனைவி வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கலாம். பால்ய நண்பர் ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். உங்களின் கடந்த கால செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்வீர்கள். பிரியமானவர் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்**



சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். வீட்டிற்குச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவரைப் பாதையில் சந்திக்கலாம். இதோ அதோ என இழுத்துக் கொண்டிருந்த பணவரவு ஒன்று கைக்குக் கிடைக்கும். நீண்ட நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவர் வீட்டிற்கு செல்லலாம்

**தனுசு**



நண்பர்கள், அறிமுகமானவர்களுக்காக நீங்கள் செலவு செய்யலாம். நீண்ட நேரம் விழித்திருந்து சில வேலைகளைச் செய்ய நேரிடலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பஸ் பயணங்கள் எரிச்சல், தொந்தரவு கொடுப்பதாக அமையலாம். கடிதங்கள் மூலம் நல்ல செய்திகள் வரலாம்.

**மகரம்**



எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். அண்டை, அயலாரிடம் கடுமையாகப் பேசி அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தொழில் ரீதியாக வர வேண்டிய பணம் ஒன்று கிடைக்கலாம். உறவினர்களின் தொல்லைகளுக்கு ஆளாகலாம்

**கும்பம்**



எந்த வேலையையும் உடனுக்குடன் முடிப்பது என்ற உறுதியோடு செயற்படுவீர்கள். சுய தேவைக்கான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். நண்பர்களுக்காகச் சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். கடும் அலைச்சலை உண்டாக்கும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடியும். அனுகூலமான நாள்.

**மீனம்**



ஜம்பமாகப் பேசி வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். பிள்ளைகள் கேட்டதை மறுக்காமல் வாங்கிக் கொடுப்பீர்கள். வெளியூர்களில் வசிக்கும் உறவின்ர் ஒருவர் உங்களின் வீடு தேடி வரலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். ஆறுதலான அனுபவம் உண்டு.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### சொருபன் சுருதியன்

மண்ணில்
13.03.2005

விண்ணில்
13.05.2009

பொக்கிஷமாய் எமக்குக் கிடைத்தவனே
பாதியிலே எமைப் பரிதவிக்க விட்டு
எங்குதான் சென்றாயடா?
தேற்றவும் முடியவில்லை கண்ணீரும் ஓயவில்லை
உன் மழலைப் பேச்சை உன்
வசீகரச் சிரிப்பினை
எங்கும் தேடுகின்றோம் காண முடியவில்லையடா
இதயத்தைப் பிசைந்து எம் கண்ணீரை
காணிக்கையாக்கித் தூவுகின்றோம்
ஏற்றுக் கொள்வாயடா?

என்றும் உன் நினைவுகளுடன்:
அம்மப்பா, அம்மம்மா, பாட்டி,
பெரியப்பா, பெரியம்மா,
உடன்பிறப்புக்கள்.

இவருடன் அகாலமரணமான விவேகன், நளாயினி,
தமிழவள், சிவசோதி ஆகியோரையும்
நினைவு கூருகின்றோம்.

கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு
03.09.1990

உதிர்வு
13.05.2009

### செல்வன் பாஸ்கரன் றொசாந்தன்

கடந்த 2009.05.13 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புச் சகோதரன் றொசாந்தனின் நினைவுத்திருப்பலி இன்று (2010.05.13) வியாழக்கிழமை புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். மதியம் எமது இல்லத்தில் மதியபோசனம் இடம்பெறும். திருப்பலியிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

துயருறும்:
குடும்பத்தினர்.

(98048)

## போரழித்த பொக்கிசங்களின்

## ஈராறு மாதங்கள்.....





| போரால் | தாயால் | போரால் |
|---|---|---|
| 24 ★ 04 ★ 2009 | 17 ★ 07 ★ 1973 / 07 ★ 01 ★ 2005 | 27 ★ 04 ★ 2009 |

### முருகேசு வசந்தன் வசந்தன் நிவேதிகன்

(உரிமையாளர், நிரு ட்ரவல்ஸ், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

அன்புக் கணவனே!
ஆசை மகனே!
உங்களைப் போரடித்துச் சென்றதனால்
வேரிழந்து நிற்கின்றேன்....
ஆண்டொன்று போன போதும்
அழுத விழி காயவில்லை....
நினைவாலே வாழ்கின்றோம்
நித்தம் உங்களைப் போற்றுகின்றோம்.
மீண்டெழுந்து வாரீரோ... எம்
மீளாத் துயர் போக்கிவிட...

உயிரில் உறைந்த உதிரங்களின் ஓராண்டில் நீங்காத நினைவலைகளுடன்..

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்:
வ.தமிழ்ச்செல்வி (தர்சினி), வ.நிருபமா, வ.நிவேதிகா.

(97991)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவரை வற்றா நீர் நிலையும் நவசைலேஸ்வரமும்




*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நீர்ப்பாசன வேலைத்திட்டம் நிறுத்தப்படும்வரை அதற்குப் பொறுப்பாக இருந்து நீர் விநியோகத்தை மேற்கொண்ட 'பம் ஒப்பரேட்டர்' வே.அருணாசலம் அந்தக்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

''நிலாவரை நீர் நிலையின் பொறுப்புக்கள் அண்மையில் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையிடம் கையளிக்கப்பட்டுவிட்டன. முன்பு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் இருந்தது. நிலாவரையில் ஓய்வுபெறும்வரை நீண்டகாலம் கடமையாற்றினேன்.

நிலாவரை நீர்நிலை தொடர்பாக காலத்துக்குக்காலம் வெளிநாட்டு ஆய்வாளர்கள் என்றவகையில் பிரித்தானியா, ஜேர்மனி, செக்கோசிலோவேக்கிய ஆய்வாளர் குழுக்கள் பல்வேறு வகையான ஆய்வுகளை மேற்கொண்டனர். நான் அறிந்தவரையில் நீர் மட்டத்தில் இருந்து 31 அடி வரையும் உள்ள நீர் மக்களின் பயன்பாட்டிற்கு உட்படுத்தக்கூடியது. 31 அடியில் இருந்து 81 அடிவரையும் உள்ள நீர் வன்நீர் உவர்த்தன்மை கொண்டது. 81 அடிக்கு கீழ் உப்பு நீர் கீழ் நீரோட்டத்துடன் தொடர்பானது.

நீர் தொடர்பான ஆய்வு அந்தக் காலப்பகுதியில் தினசரி இரண்டு தடவைகள் காலையும் மாலையும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட அடி ஆழங்களில் நீர் பெறப்பட்டு அதற்குரிய முறையில் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு அறிக்கைகள் பேணப்பட்டுவந்தன. இராணுவ நடவடிக்கைகளின்போது நீர்ப்பாசன கருவிகளும் வாய்க்கால்களும் சேதமடைந்ததையடுத்து நீர்ப்பாசன செயற்பாடுகளும் நீர் ஆய்வுச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டன. மீண்டும் நிலாவரை நீரை விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தும் நிலை தொடர வேண்டும் எனத் தெரிவித்தார்.

நிலாவரை நீரை யாழ்ப்பாணம் மாநகரசபை குடிதண்ணீர் விநியோகத்துக்குப் பயன்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் நிலத்துக்குக் கீழ் 8 அங்குல விட்டம் கொண்ட குழாய் இணைப்பு இராசவீதியோரமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. குழாய் மூலம் நீர் எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு குடிதண்ணீர் பயன்பாட்டுக்கு விநியோகிக்கும் திட்டம் இடையில் கைவிடப்பட்டது.


வாழைச் செய்கை நீர்விநியோகத்திட்டம் தொடர்பாக சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (வயது 76)கருத்துத் தெரிவிக்கையில்;-

நிலாவரை நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறையில் இருந்த காலம் வாழைத் தோட்டக்காரர்களுக்கு வாய்ப்பாக இருந்தது. நிலாவரைக் கிணற்றில் இருந்து மேற்கு நோக்கி அச்செழு, ஈவிளை பகுதிக்கும், தெற்கு நோக்கி சிறுப்பிட்டி மேற்கு பகுதிக்கும் நீர் விநியோகம் செய்யப்பட்டது. நீர்விநியோகத்துக்கு ஆரம்பத்தில் கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை. பிற்காலத்தில் 10 ரூபா வீதம் கட்டணம் அறவிடப்பட்டது. வாழைக்கு பயன்படுத்திய நீரின் மிகுதி குளங்களில் தேக்கப்பட்டு நெல்லுக்குப் பயன்படுத்தப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் வாழையும் சிறுப்பிட்டி பகுதியில் நெற்பயிர்ச்செய்கையும் வளம் பெற்றிருந்தது.

அந்த நிலை மீண்டும் வரவேண்டும். அந்த நிலை வருமானால் புத்தூர் - நீர்வேலி - அச்செழு உள்ளிட்ட வாழைச்செய்கை முக்கோண வலயத்தில் வாழைப் பயிர்ச்செய்கை மூலம் விவசாயிகள் நல்ல வருமானத்தைப் பெறக்கூடிய வளமான நிலை ஏற்படும் - என்றார்.

குடாநாட்டில் உள்ள பயிர்ச்செய்கை நீர்ப்பாசனத் திட்டமாக இருந்து வந்த நிலாவரை நீர்ப்பாசனத் திட்டம் எதிர்காலத்தில் நவீனமயப்படுத்தப்பட்டு குடாநாட்டின் அபிவிருத்திக்கான திட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கான முன்னெடுப்புக்களை திட்டமிட்ட முறையில் முன்னெடுப்பதற்கு ஆய்வாளர்கள், அறிஞர்கள், அரசியல் சக்திகள் ஒன்றிணைத்த நிலையில் செயற்பட வேண்டும். நிலாவரையுடன் இணைந்த நிலையில் உள்ள நவசைலேஸ்வரமும் அதன் பெருமையும் பேணப்பட வேண்டும். ஆலயத்தை புனரமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர்.

*(முற்றும்)*



# வாதரவத்தைக் கிராமம்



வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள தனித்துவமான கிராமம் வாதரவத்தை பெரிய பொக்கணை, வீரவாணி ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கி வாதரவத்தை என அழைக்கப்படும் இந்தக் கிராமம் ஜே/280 ஆம் இலக்க கிராம சேவையாளர் பிரிவையும்; வாதரவத்தை சமூர்த்தி அலுவலர் பிரிவையும் கொண்டது.

கிழக்கு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு வடக்கு கப்பூதூ, ஆட்டுப்பட்டி - பன்னாரை வெளிமேற்கு தகரம்பிள்ளையார் கோயில் வெளி தெற்கு மட்டுவில் - புத்தூர் பிரதான வீதி ஆகியவற்றை எல்லையாகக் கொண்ட பரந்தவெளி. மாரிகாலத்தில் சுற்றிவர நீரால் சூழப்பட்டு சிறு தீவு போல காணப்படும். இந்தப் பிரதேச மக்களின் வாழ்வும் வளமும் ஏனைய கிராமங்களிலும் வேறுபட்டது. தன்னம்பிக்கையோடும் உறுதியான உடல் உழைப்போடும் விரவியது.

உவர்க்கழிமண்ணும், மணலும் கொண்ட இந்தப் பிரதேசம் நீர்வளமோ, நிலவளமோ பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கு ஏற்றதாக இல்லாத போதிலும் மாரிமழையை நம்பி நெல், மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும்; மனித முயற்சியின் உயர்ச்சியை அந்தப் பயிர்களில் கண்டு மகிழ்வர். கோடைகாலத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கை எதனையும் காணமுடியாது. உவர் நிலத்தில் வளரும் புல், பூண்டுகளின் பசுமையை மட்டும் காணமுடியும்.

இந்தப் பகுதியில் இயற்கையாக கிடைக்கக் கூடியது யாழ்.குடாக்கடல் நீரேரி மீன் வகையும் குடாக் கடலில் கோடையில் விளையும் உப்பும் தான். இத்தகைய வளங்குறைந்த பிரதேசத்தில் ஏன் தங்களது மூதாதையர் குடியேறினர் என்பதற்கு ஐதீகமாகக் கூறப்படும் காரணம் ''அமைதியான சூழலை விரும்பிய அவர்கள் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலம் போட்டியில்லாத சமூக சூழலில் விரும்பிக் குடியேறி இருக்கலாம்.



யாழ் குடாநாட்டு சமூக சாதிக் கட்டமைப்பில் 'வெள்ளாளர்' என்ற அமைப்பினர் மட்டுமே இங்கு தனித்துவத்துடன் வாழ்வதாகவும் தங்களிடம் உயர்வுதாழ்வு, பொருளாதார ரீதியிலான ஏற்றத்தாழ்வு எதுவும் இல்லை. எல்லோரும் ஒரே குடும்பம். எல்லோரும் உறவினர் என்ற உணர்வுடன் போட்டி, பொறாமை இன்றி வாழ்வதாகவும்; வாழ்க்கையில் நிகழக்கூடிய நன்மை-தீமைகள் எல்லா நிகழ்வுகளிலும் எல்லோரும் ஒன்றுகூடி மனித நேயத்துடன் வாழ்ந்து வருவதாக 90 வயது முதியவர் ஒருவர் கூறினார். அவரது கூற்று உண்மையானது என்பதை ஒப்புநோக்கும்போது உணரக்கூடியதாக உள்ளது. சமய ரீதியிலும் மறு சமயங்களுக்கு இடம் இல்லாமல் வைதிகமான சைவசமயம் சார்ந்தவர்களாகவே உள்ளனர்.

இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்னர் சமயத்தைப் பரப்பும் நோக்கில் மிசனரிமாரினால் உருவாக்கப்பட்ட பாடசாலையை உரிய நோக்கம் நிறைவேறாதமையினால் அவர்கள் கைவிட்டு திரும்பியதாகவும்; ஊர்பிரமுகர்களால் திண்ணைப்பள்ளியாக நடத்தி வந்த பாடசாலை இன்று விக்னேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரோடு இந்த வருடம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாதாரவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையும் வெளியிடங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லாமல் அங்கேயே கல்வி கற்று வருகின்றனர். பாலர் முன்பள்ளிகள் என்றவகையில் பெரிய பொத்தனையில் 'கணேஸ்வரன்' வீரவாணியில் 'இந்திரன்' வாதரவத்தை மத்தியில் '' விக்னேஸ்வரா' என மூன்றும் செயற்பட்டு வருகின்றன. பாலர் முன்பள்ளிகளில் 62 மாணவர்களும் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் 280இற்கு மேற்பட்ட மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர்.

*(தொடரும்)*

தொகுப்பு : ஞானஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் அரசமைப்பு யோசனைகளை தமிழர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்

## சீர்திருத்தத்தால் எமக்கு பயன் எதுவும் இல்லை என்கிறார் சுரேஷ் எம்.பி.

கொழும்பு, மே 13

உத்தேச அரசமைப்பு மாற்றத்துக்கான அரசின் யோசனைகள் சிறுபான்மை சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தியாவின் 'எக்ஸ்பிரஸ்' இணையத்தளத்துக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்த யோசனைகள் சிறுபான்மை சமூகத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை.

மாறாக இவை சிறுபான்மை சமூகத்தினரை மேலும் பலவீனப்படுத்துபவையாகக் காணப்படுகின்றன.

தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறை சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்துக்கு ஆபத்தானதாக விளங்கும்.

பெரும்பான்மை இனத்தவரே அநேகமாக வெற்றி பெறுவர்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை சிறுபான்மை இனத்தவர்களுக்கு வாய்ப்பை வழங்குவதாக உள்ளது.

மாகாண சபைப் பிரதிநிதித்துவத்துக்கு இடமளிப்பதற்காக செனட்சபையை உருவாக்கப்போவதாக அரசு தெரிவிக்கின்றது. இது போதுமானதல்ல.

தமிழர்கள் மாகாண அளவில் சுயாட்சியை விரும்புகின்றனர். மத்தியில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள அவர்கள் தயாராக உள்ளனர்.

தேர்தல் தெகுதிகளை அரசு மட்டுப்படுத்தத் திட்டமிட்டுள்ளதால் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைவடையும். பெரும்பான்மை இனத்தவர்களது பிரதிநிதித்துவம் அதிகரிக்கும்.

யாழ். மாவட்டத்தில் எமது ஆசனங்கள் குறைவடையலாம். - எனத் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# ஆஸி. சென்ற இலங்கையர் குறித்து எதுவும் தெரியாது

## அமைச்சுப் பணிப்பாளர் தெரிவிப்பு

ஆஸ்ரேலியாவுக்கு சட்ட விரோதமாகச் சென்றவர்கள் தொடர்பிலோ அல்லது 5 இலங்கையர்கள் இறந்தமை தொடர்பிலோ தமக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நீதா சேனாரட்ன தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் ஆஸி. சென்ற 64 இலங்கையருள் 5 பேர் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இந்தியாவின் கேரளாவில் 38 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும், தமக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித அறிக்கைகளும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (சி)

# வட பகுதி மக்களின் இதயங்களை வென்றெடுக்க விசேட நடவடிக்கை

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

வடக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்கும் நோக்கில் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மூன்று துறைகளின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என வட பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெவ்கே தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பொலிஸார் தொடர்பான நன்மதிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் வடக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியும் என்றும்-

அச்சமின்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸாருடன் மக்கள் தொடர்புகளை பேணக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் இயங்கி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தலா 100 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது எனவும், எதிர்வரும் 17 ஆம் திகதி இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# திஸ்ஸநாயகத்துக்கு மன்னிப்பு; ஆவணங்கள் விரைவில் சமர்ப்பிப்பு

சிரேஸ்ட ஊடகவிலயாளர் ஜே.எஸ். திஸ்ஸநாயகத்திற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புத் தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளனஎன்றுசட்டமாஅதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு குறித்த இறுதி ஆவணங்கள் இந்த வாரத்தில் வழங்கப்படும்.

திஸ்ஸநாயகத்தால் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டால் பொது மன்னிப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

மேன்முறையீடு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் திஸ்ஸநாயகம் சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும். ஆனால், பொது மன்னிப்பையும், வாபஸ் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றினால் இந்த நிலை ஏற்படாது என்றார். (சி)

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் தங்கராஜா கமலலோஜன்**

திதி: சதுர்த்தசி 13.05.2010

தோற்றம் 13★09★1969 மறைவு 26★04★2006

நெஞ்சினில் நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசைமுகம்
அன்பான உங்களுக்காய் என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்
உங்கள் பிரியமுள்ள உறவுகள்.

கண்ணன் ஆலய வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

அன்பு மனைவி
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்லி



தோற்றம் 29★10★1992 மறைவு 03★05★2009

**சிவலிங்கம் ஜனோசன்**

தவமிருந்து பெற்றெடுத்த எம் அன்புச் செல்வமே
பிறர்க்கு உதவி செய்து பிரியமுடன் வாழ்ந்தவரே-இன்று
பெற்றோரும், சகோதரர்களும், உறவினர்களும்
-தரணியில் தனித்திருக்க
விரைவாக விண்ணுலகம் சென்ற மர்மமென்ன - விளம்பீர்

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 ★ 06 ★ 1952



உதிர்வு 24 ★ 04 ★ 2009

**அமரர் கார்த்திகேசு நவரெத்தினம்**

திதி: அமாவாசை

அன்பான எங்கள் அப்பாவே
ஆண்டு ஒன்று கடந்துவிட்டதப்பா
சுண்ணம் இடிக்கவில்லை
சுமந்து எரிக்கவில்லை
பேரப்பிள்ளைகள் பந்தம் பிடிக்கவில்லை
அந்தத் துயர் எங்களால் தாங்க முடியவில்லை.
வரவேண்டும் மீண்டும் எங்கள் அப்பாவாக.

நி.முகவரி:
முதலாம் வட்டாரம், மண்டைதீவு
த.முகவரி: செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

நீங்காத நினைவில்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சிவானந்தன் ரவிச்சந்திரன் (தம்பாஸ்)**



பிறப்பு 21.07.1965

அழிப்பு 13.05.2009

சங்கத்தார்வயல், இயக்கச்சியைச் சொந்த இடமாகவும், சுதந்திரபுரம், கொலனியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சிவானந்தன் ரவிச்சந்திரன் [தம்பாஸ்]

தாய்க்குத் தலைமகனாய் பிறந்தாய்
தம்பாசு என்ற செல்லப்பெயருடன் வாழ்ந்தாய்
தாய் மாமன் மகளை மணம் முடித்தாய்
தங்கம் போல் மூன்று பிள்ளைகளைப் பெற்றாய்
மனைவி மக்களுக்காய் மாடாக உழைத்தாய்
முள்ளிவாய்க்கால் எறிகணையில் மூச்சிழந்து போனாய்
உந்தனது பிரிவால் உருக்குலைந்து போனோம்
எம் உயிர் பிரியும் காலம் வரைக்கும் உனை மறக்க மாட்டோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி - இராசநாயகி
பிள்ளைகள் - நிஷா, ஜனா, டிந்துஜன்

சங்கத்தார்வயல்,
இயக்கச்சி.

தகவல்:
க. பொன்னுத்துரை (மாமன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக சக்தியை மதித்து காலத்தை வீணடிக்காது தீர்வை முன்வைக்க வேண்டும்

## மட்டு.மாவட்ட எம்.பி. அரியநேத்திரன் வலியுறுத்தல்

மட்டக்களப்பு, மே 13

''தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே என்பதை கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் மீண்டும் நிரூபித்து காட்டியுள்ளார்கள். எனவே, தமிழ் மக்களின் ஜனநாயகச் சக்தியை மதித்து காலத்தை வீணடிக்காமல் இனியேனும் ஆக்க பூர்வமான செயற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.''

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

அம்பிளாந்துறையில் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வின்போது கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தமிழ் மக்கள் இதுவரை அனுபவித்த வரலாற்றில் மறக்கமுடியாத துன்பங்களுக்கும் இழப்புகளுக்கும் ஏற்றவகையில் தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

எமது மக்களின் எதிர்காலத்தை சுபிட்சமடைய செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு முயற்சியுடன் தொடர்ந்து உழைக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதன் அடிப்படையில் அரசியல் தீர்வைப் பெறுவதில் தொடர்ந்தும் செயற்படும் தமிழ்க் கட்சிகள் இனியாவது ஆளுக்கொரு கருத்தை கூறிக்கொண்டு இருக்காமல் தமிழ் மக்களின் கோரிக்கையை ஜனநாயக ரீதியாகப் பெற்றுக்கொள்ள ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமான விடயமாகும்.

தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கும் விடயத்தில் அதை எதிர்ப்பதில் சிங்களக் கட்சிகள் ஒற்றுமையாக செயற்படுகின்றமையை போல தமிழ் மக்களின் தீர்வைப் பெறுவதில் தமிழ்க் கட்சிகளும் பிரிந்து நின்ற காலங்கள் இனியும் ஏற்படக் கூடாது. தீர்வைப் பெற்றுக்கொள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அதிகளவான வாக்குகளை அளித்தீர்கள். அதற்கு எனது நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அத்தோடு, உங்களிடம் நான் ஒரு கோரிக்கையையும் முன்வைக்கின்றேன். நீங்கள் வாக்களித்ததுடன் உங்களின் கடமை முடிந்துவிட்டது என கருதாமல் கிராம மட்டத்தில் அமைக்கப்படும் எமது கட்சிக் குழுக்களுடன் எல்லோரும் இணைந்து எதிர்காலச் செயற்பாடுகளுக்கு ஆலோசனைகள், கருத்துக்கள், விமர்சனங்களை வழங்கவேண்டும்.

உங்களால் தெரிவுசெய்யப்பட்ட நான் இந்த மாவட்டத்தின் அனைத்து மக்களுக்குமே சேவகன். அந்த அடிப்படையில் உங்களின் கருத்துக்களை என்னுடன் எந்த நேரத்திலும் பகிர்ந்துகொள்ள வேண்டும். உங்களின் விமர்சனங்களை, ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றேன் எல்லோரும் ஒன்றிணைந்து சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுவோம் -என்றார். (ளி)

# ஆற்றில் குளிக்கச்சென்ற மாணவி நீரில் அடித்துச் செல்லப்பட்டு மரணம்

## இறக்காமம் பிரதேசத்தில் பரிதாபம்

அம்பாறை, மே 13

இறக்காமம் பிரதேசத்திற்குட்பட்ட வாங்காமம் வலது கை ஆற்றுக்கு குளிக்கச் சென்ற பாடசாலை மாணவி ஒருவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டு பரிதாபமாக உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருபவை வருமாறு:-

இறக்காமம் 8 ஆம் பிரிவில் வசிக்கும் எப். றுஸ்கானா என்ற 9 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமை தனது குடும்பத்தினருடன் வாங்காமத்திலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

மதிய உணவுக்குப் பின்னர் றுஸ்கானா தாயார், சகோதரிகளுடன் வலதுகை ஆற்றுக்குக் குளிக்கச் சென்றுள்ளார். தாய் துணிமணிகளைக் கழுவிக் கொண்டிருந்த வேளையில் இருவரும் இன்னொரு சகோதரியும் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கியுள்ளனர். இச்சமயமே அவர்கள் நீரில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இப்பரிதாபகரமான சம்பவத்தை தரையில் நின்று கொண்டிருந்த சகோதரி தாயாரிடம் கூறியதையடுத்து தாயாரால் ஒரு பிள்ளையை மாத்திரமே காப்பாற்ற முடிந்துள்ளது. தாயாரின் அழுகைச் சத்தத்தைக் கேட்ட அயலவர்கள் விரைந்து வந்து றுஸ்கானாவைத் தேடியபோது சடலமாகவே அவர் கண்டெடுக்கப்பட்டார். (ளி)

# திருமலை பொது மயானத்தில் சடலம் எரியூட்டும் நிலையம்

திருமலை, மே 13

திருகோணமலை பொது மயானத்தில் தேச நிர்மாண அமைச்சின் நிதியின் கீழ் அமைக்கப்பட்டு வந்த சடலம் எரியூட்டும் நிலையம் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

வடகரை வீதியில் அமைந்துள்ள இந்து மற்றும் பௌத்தர்களின் மயானத்தில் இணைந்த நிலையில் இந்நிலையம் நிர்மாணிக்கப்பட்டு பணி நிறைவடைந்த நிலையில் நகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் மிக விலைவில் இந்நிலையம் பாவனைக்கு வரவுள்ளதாக திருகோணமலை நகர சபைத் தலைவர் தெரிவித்தார். இதனை இயக்கும் ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர் இது பாவனைக்கு வரவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்களை நிரந்தர சேவையில் இணைக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, மே. 13

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்களை நிரந்தர சேவையில் இணைத்துக் கொள்வதற்கு மாகாணக் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளில் தற்காலிகமாக, அமைய, பதிலீட்டு, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஆரம்ப தரத்தைச் சேர்ந்த பணியாளர்களே நிரந்தரமாக்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைவாக 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக 180 நாள்கள் தொடர்ச்சியாக கடமையாற்றியுள்ள பணியாளர்களுக்கு நிரந்தர நியமன்ங்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளில் தற்போது நிரந்தரமற்ற அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் வகையில் உரிய விண்ணப்பப் படிவம் மற்றும் தேவையான ஏனைய ஆவணங்களையும் உடனடியாக மாகாணக் கல்வியமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு மாகாணத்தின் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளது. (ளி)

# தனியார் போக்குவரத்துத் துறை ஊழியர்கள் திருமலையில் நேற்று முன்தினம் பகிஷ்கரிப்பு

திருமலை, மே. 13

திருகோணமலை தனியார் போக்குவரத்து சேவையில் பணியாற்றும் நான்கு பேரை பொலிஸார் கைது செய்தமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் திருமலையில் தனியார் போக்குவரத்துத் துறையினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

திருகோணமலை - புல்மோட்டை இடையே போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் தனியார் போக்குவரத்துச் சபைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் நேரம் தொடர்பில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தனியார் போக்குவரத்து சேவைப் பணியாளர் சிலர் கடந்த சனிக்கிழமை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் மீது கல்வீச்சு நடத்தினர் என்று கூறப்பட்டது. இதனால் குறித்த பஸ்ஸில் கண்ணாடி சேதமடைந்தது. இச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நால்வரை குச்சவெளிப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நேற்று முன்தினம் பொலிஸார் திருமலை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன்போது நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இச்சம்பவத்தை அடுத்தே திருமலை தனியார் போக்குவரத்துச் சபையினர் நேற்று முன்தினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பஸ் பகிஷ்கரிப்பை அடுத்து திருகோணமலை, கந்தளாய், கிண்ணியா டிப்போக்களிலிருந்து அதிகமான அளவில் பஸ் சேவைகள் நடத்தப்பட்டன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த பகிஷ்க்கரிப்பு நடவடிக்கையால் மக்கள் சிரமத்தை எதிர்கொண்டிருந்தனர் என அறியமுடிகிறது. (ளி)




# ஏறாவூர்ப்பற்று வலயப் பாடசாலைகளில் மீள்குடியமர்ந்த மாணவர்களுக்கு உதவி

மட்டக்களப்பு, மே 13

வன்னிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று-02 கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதிகளைச் சேர்ந்த 62 மாணவர்கள் ஏறாவூர்ப்பற்று-02 கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயின்று வருவதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ. சுகுமாரன் தெரிவித்தார்.

இவர்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன எனக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கூறினார்.

மட்டக்களப்பு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான உதவிகளை வழங்கியுள்ளது.

இது தொடர்பான வைபவம் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுபா சக்கரவர்த்தி, மட்டக்களப்பு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தயாபரன் உட்பட பாடசாலை அதிபர்களும், பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ளி)

# அம்பாறையில் ஊனமுற்றவர்களின் விவரம் திரட்டும் நடவடிக்கை

மட்டக்களப்பு, மே 13

அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்களில் கடந்த கால அனர்த்தங்களால் ஊனமுற்றவர்கள் மற்றும் மீளமுடியாமல் நலிவுற்றவர்கள் விவரம் திரட்டப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்ட தமிழரசுக் கட்சி எம்.பி. சமூகநேயன், பொ. பியசேனவின் வேண்டுகோளின் பேரில் பிரதேச செயலக ரீதியாக இவ்விவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இவர்களுக்கு உதவுவதற்காக திட்டமொன்று தயாராகி வருவதாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, உரிய பராமரிப்பின்றி வீடுகளில் அந்தரிக்கும் வயோதிபர்களின் விவரமும் திரட்டப்பட்டு வருகிறது. இயற்கை அனர்த்தம் மற்றும் யுத்த அனர்த்தங்களால் அவயங்களை இழந்தவர்களுக்கு உதவுவதற்காக விரிவான செயற்றிட்டமொன்றை பியசேன எம்.பி தயாரித்து வருகிறார்.

இதேவேளை, விதவைகள், தபுதாரர்கள் ஆகியோரின் பூரண விபரமும் திரட்டப்பட்டு விஷேட திட்டத்தின் கீழ் உதவ திட்டமிடப்பட்டுள்ளது. (ளி)

# கிழக்கு பல்கலைக் கழகத்தில் எட்டுப் புதிய கற்கை நெறிகள்

திருமலை, மே 13

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் உட்பட எட்டு புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மூன்று மாதங்கள் கொண்ட இக்கற்கை நெறிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதழியல், அலுவலக முகாமைத்துவம், தொடர்பாடலுக்கான ஆங்கிலம், உளவளத்துணை, பால்நிலை அபிவிருத்தி, வாழ்வின் விழுமியக் கல்வியும் ஆன்மீகமும், உளவியலும், ஆளுமைவிருத்தியும் ஆகிய கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத் தலைவர் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இதழியல் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அருந்தும் உணவும் அவை மூலம் ஏற்படும் தாக்கங்களும்

இன்று இந்த உலகிலே மனிதனின் உயிருக்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. சுகதேகியாக உலாவரும் ஒருவன் திடீரென இறந்து விடுகின்றான். ஏதாவதொரு நோயினால் இவன் பாதிக்கப்பட்டிருக்கலாமென்ற தகவல் மட்டுமே எமக்குக் கிடைக்கின்றது. காலப்போக்கில் நாம் இதை மறந்து விடுகின்றோம். ஆனால் இவை போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக நீண்டு கொண்டே செல்கின்றன. இந்த விபரீதமான நிலைக்கு எம்மை நாமே ஆளாக்கிக் கொண்டிருக்கின்றோமென்ற உண்மையை எப்போதாவது நாம் சிந்தித்துப் பார்த்திருக்கின்றோமா?


கே.விவேகானந்தன்

## யாழ்.முகாமையாளர் கழகம் நடத்திய கருத்தரங்கிலிருந்து சில துளிகள்


சியாமா விஜயதுங்க

உண்ணும் உணவின் சுகாதாரம்

வாய்க்கு ருசி தேடி வகை வகையான உணவு வகைகளை விதவிதமாகச் சமைத்து உண்கின்றோம். வித்தியாசமான சுவை தேடி உணவுக் கடைகடையாக ஏறி இறங்குகின்றோம். ஆனால் நாம் உண்ணும் உணவுகள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் உள்ளனவா எனச் சீர்தூக்கிப் பார்க்க மறந்து விடுகின்றோம். இதன் விளைவு! பல்வேறு நோய்களின் தங்குமிடமாக எமது உடல் மாறிவிடுகின்றது. இன்று பலவித நோய்கள் பரவுவதற்கு நாம் உண்ணும் உணவில் சுத்தமும், சுகாதாரமும் இல்லாமையே முக்கிய காரணமெனக் கூறப்பட்டுள்ளது.

இதைக் களையும் பொருட்டு பல்வேறு ஆராய்ச்சிகளின் பின்னர் HACCP எனச் சுருக்கமாக அழைக்கப்படும் 'HAZARD ANALYSIS CRITICAL CONTROL POINT' என்னும் 'உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை' (Food Management System) ஏற்படுத்தப்பட்டது. இந்த முறைமை 1960களில் மனிதன் விண்வெளிக்குப் பயணத்தை மேற்கொண்டபோது அறிமுகப்படுத்தப்பட்டது. விண்வெளிப் பயணத்தின்போது தமக்குத் தேவையான உணவுகளையும் விண்வெளி வீரர்கள் தம்முடன் கொண்டு செல்ல வேண்டும். அவை பல நாள்களுக்கு கெடாமல் இருப்பது அவசியம். ஏனென்றால் இவற்றை உண்ணும் வீரர்கள் பாதிப்புறாமல் இருப்பது முக்கியமானது. இந்த முறையானது பின்னர் சகலருக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

**உணவுப் பாதுகாப்பு கருத்தரங்கு**

இந்த உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு இம் மாதம் 7, 8 ஆம் திகதிகளில் நல்லூர் கமநல சேவைகள் திணைக்கள ஒழுங்கையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் யாழ்.முகாமையாளர் கழகம், யாழ்.மாநகரசபை என்பவற்றால் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் உலகத் தரநிர்ணய நிறுவனத்தின் நிபுணர்களான சங்கர நாராயணன் ராமகிருஷ்ணன், திருமதி சியாமா விஜயதுங்க ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். கருத்தரங்கு நிகழ்ச்சிகளை இன்னொரு நிபுணரான கே.விவேகானந்தன் நெறிப்படுத்தினார்.

இங்கு கருத்துரை வழங்கிய ராமகிருஷ்ணன்; தற்போது தரமற்ற உணவு, நீர் என்பனவே மனிதனுக்குக் கிடைக்கின்றன. இவை பலவித பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. உணவுக்கடைகளில் தயாரிக்கப்படும் உணவு வகைகள் பழுதுபடாத தரமான பொருள்களில் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ஏனென்றால் பழுதடைந்த பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகள் எவ்வளவு தான் சுவைமிகுந்தவையாக இருப்பினும் அவை மனிதனின் ஆரோக்கியத்திற்குத் தீமை விளைவிப்பனவாகவே இருக்கும். அடுத்ததாக இவற்றைக் கையாள்வதில் சுத்தமும் சுகாதாரமும் பேணப்படல் வேண்டும். உதாரணமாக ஒரு உணவகத்தில் உணவு வகைகளைத் தயாரிக்கும் ஒருவர் நோயுற்றவராகவும், சுத்தமில்லாதவராகவும் இருப்பின் அவரது தயாரிப்புக்களை உண்ணும் வாடிக்கையாளர்கள் நிச்சயம் பாதிக்கப்படுவர்.

அநேகமாக நோய்க்கிருமிகள் கைகள் வாயிலாகவே பரவுவதால் நாம் எப்போதும் எமது கைகளைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம். முக்கியமான ஒரு விடயத்தையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். அதுதான் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் சேமிப்புக் கிடங்குகளின் தரம். சேமிப்புக் கிடங்குகள் சுத்தமாக வைத்திருக்கப்படுவதுடன், எலிகள் போன்ற தீமை விளைவிக்கும் பிராணிகளால் அங்கே சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உணவுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருள்கள் பாதிக்கப்படாதவாறு பாதுகாக்கப்படல் வேண்டும்.


கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்

**போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள்**

நாம் தற்போது நவீன உலகில் வாழ்வதாக எம்மைக் காட்டிக் கொண்டு பலதீமையான செயல்களில் ஈடுபடுகின்றோம். உதாரணமாக இருந்த இடத்தில் வேலை செய்யும் எம்மில் பலர் ஒரு நாளில் அதிகளவு குளிர்பானங்களை அருந்துகின்றனர். இதனால் மேலதிகமான இனிப்பும், போத்தலில் அடைக்கப்பட்டிருக்கும் வாயுவும் அவர்களது உடலைச் சென்றடைகின்றன. நாளடைவில் அவர்களது உடல் பாதிப்படையும். தற்போது போத்தலில் அடைக்கப்பட்ட நீர் சுத்தமானதெனக் கருதி எம்மில் பலர் அதை நாடுகின்றனர். ஆனால் அதிலும் தீமை உள்ளது. தண்ணீரை அடைக்கும் போத்தல் பலவித இரசாயன மாற்றங்களுக்கும் [illegible] அதிலிருந்து நீரைப்பெற்று நாம் அருந்தும்போது போத்தலில் காணப்படும் சிலஇரசாயனங்கள் நீருடன் கலந்து எமது உடலுனுள்ளே செல்கின்றன. அத்துடன் எம்மில் பலர் நீரை அருந்தியதோடு அந்தப் போத்தலை வீசிவிடாது மீண்டும் மீண்டும் உபயோகிக்கின்றனர். இது மிகவும் ஆபத்தான செயலாகும். ஒருமுறை நீரை அருந்தியபின் அந்தப் போத்தலை வீசியெறிந்து விடுவதே நல்லது. சில உணவகங்களில் உணவுகளைப் பொதி செய்யும்போது பழைய பத்திரிகைத் தாள்களைப் பயன்படுத்துகின்றனர். கவனக்குறைவு காரணமாக பத்திரிகைத் தாள்களில் உள்ள அச்சு மை உணவுகளுடன் கலப்பதற்கும் வாய்ப்புகள் உண்டு. அந்த மையிலுள்ள இரசாயனப் பொருள்கள் தீமை விளைவிக்க வல்லன.


ச.ராமகிருஷ்ணன்

இங்கு கருத்திரை வழங்கிய திருமதி சியாமா விஜயதுங்க, உணவுப் பொருள்கள் தயாரிக்கப்படும் இடங்களின் அமைவு, கழிவுநீர் வெளியேற்றப்படுவதற்கான வசதிகள், சேமிப்புக் கிடங்குகளின் பராமரிப்பு ஆகியன தொடர்பாக விரிவாக உரையாற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.நகரை அண்டியுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த உணவக உரிமையாளர்கள், ஐஸ்கிறீம் தொழில் செய்வோர், வெதுப்பக உரிமையாளர்கள், சிறு தேநீர்க்கடை உரிமையாளர்கள், ஜூஸ் தயாரிப்போர் எனப்பலர் கலந்து கொண்டனர். இர்ண்டாம் நாள் நிகழ்வில் கல்விமான்கள், வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மொத்தத்தில் இந்தக் கருத்தரங்கானது அங்கு கலந்து கொண்டவர்களின் மனங்களில் உணவு முகாமைத்துவம் தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தூண்டுகோலாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

பல தசாப்தங்களுக்குப் பிறவு இப்போதுதான் மெல்லக் கண்திறந்து வெளி உலகைப் பார்க்கத் துடிக்கும், யாழ்ப்பாண மக்களுக்கு இதுபோன்று பல்வேறு துறைசார்ந்த கருத்தரங்குகளை ஏற்படுத்திக் கொடுப்பது தகுதியுடையோரின் தலையாய கடமையாகும்.


தொகுப்பு: ராஜராஜன்


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
25.05.1925

மறைவு:
25.04.2009





அமரர்
சின்னத்தம்பி துரை

அப்பா...!
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும் மாண்டார்
திரும்பி வருவதில்லை

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குமரகோட்டம், கோண்டாவில்.
தொ.பே: 0212227372


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.04.1991

★கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் கொல்லப்படும் சம்பவங்கள் அரசினால் பெரிது படுத்தப்படுவதாக பி.பி.ஸி விமர்சிப்பு.

★இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்தியஸ்த முயற்சியில் இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ ஈடுபடுவதை விடுதலைப் புலிகள் நிராகரிப்பதாகத் தெரிவிப்பு.

17.04.1991

★ தமக்கோ அல்லது தமது தலைமையிலான அரசுக்கோ யுத்தத்தில் நம்பிக்கையில்லை. பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை அரசு கைவிடவில்லை என ஜனாதிபதி பிரேமதாஸ பகிரங்கமாக அறிவிப்பு.

★வடக்கு - கிழக்கில் இலங்கை அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயிருக்கும் பொதுமக்களில் பலர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆகப்பிந்திய அறிக்கையில் தெரிவிப்பு.

18.04.1991

★ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியில் தலையிடுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை என விடுதலைப் புலிகளின் பிரமுகர் கிட்டு தெரிவிப்பு.

★ஐக்கியதேசியக் கட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்துள்ள இலங்கை மக்கள் கட்சிக்கு அமைச்சரவையில் இடமளிக்கப்படலாம் என கொழும்பு வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

19.04.1991

★வடக்கு - கிழக்கு மக்கள் தமிழீழத்தை விரும்புகிறார்களா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்து மாறு விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்தை இலங்கை அரசு நிராகரித்து விட்டதாகத் தெரிவிப்பு.

★இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க புதிய இந்திய - இலங்கை ஒப்பந்தமொன்று செய்யப்படுவது அவசியமாகும் என தி.மு.க தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு.

20.04.1991

★வன்முறைகளைக் கைவிடும் பிரகடனத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என ஜனாதிபதி பிரேமதாஸ நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் தெரிவிப்பு.

★ மடு அகதி முகாமுக்கு கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற பத்து லொறிகள் வவுனியாவில் படையினரால் தடுத்து வைப்பு.

21.04.1991

★மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் இடம்பெற்று வரும் உக்கிர சண்டையில் நேற்று முன்தினம் மட்டும் 9 படையினர் பலியானதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவிப்பு.

★யாழ்.மாவட்டத்தின் புதிய அரச அதிபராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் பொன்னம்பலம் நியமிப்பு.

22.04.1991

★திருகோணமலையில் புதிதாகக் குடி யேற்றப்பட்ட சிங்களவர்களை வாக்காளர் களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் அரசினால் துரிதமாக முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிப்பு.

★அம்பாறை மாவட்டம், ஒக்கம்பிட்டிய சிங்களக் கிராமத்தில் புகுந்த இனந் தெரியாத ஆயுததாரிகள் 22 சிங்களப் பொதுமக்களை சுட்டும் வெட்டியும் கொலை செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

23.04.1991

★முன்னாள் அமைச்சரும், தற்போதைய ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி திஸநாயக்கா மூன்று நாள்களுக்கு முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக அறிவிப்பு.

★ விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்களில் - கடந்த ஒரு மாத காலத் தில் மட்டும் 130 படையினர் உயிரிழந்த தாக தெரிவிப்பு.

24.04.1991

★ எதிர்வரும் மேதினக் கொண்டாட்டங்கள் இடம் பெறும்வேளை கொழும்பு நகரில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழலாம் என்ற அச்சத்தில் அரசு பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்வதில் தீவிரம்.

★ கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக ஊழியர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை அரசு இந்தியாவிடம் வருத்தம் தெரிவிப்பு.

25.04.1991

★ அரசுக்குத் தான் தயாரித்துக் கொடுத்த திட்டத்தின்படி படையினரால் முன்னேற முடியவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க தெரிவித்ததாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிப்பு.

★இலங்கை முன்னேறாமல் இருப்பதற்கு தமது தந்தை உட்பட அரசியல்வாதிகளே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தனா தெரிவிப்பு.

26.04.1991

★நேற்றுப் பிற்பகல் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் நாரந் தனையில் உள்ள ஒரு வீட்டின் மீது விழுந்து வெடித்ததில் 8 பொது மக்கள் உயிரிழப்பு.

★ வடக்கு - கிழக்கில் தினமும் குண்டு வீசி தமிழர்களை அழித்துக் கொண்டு, மறு புறத்தில் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி பிரேமதாஸ அடிக்கடி அழைப்பு விடுப்பது வேடிக்கையான விடயமாகும் என விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு தெரிவிப்பு.

27.04.1991

★இராணுவ நடவடிக்கைகளில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் பின்னடைவு, சர்வதேச மற்றும் உள்நாட்டு அழுத்தங்கள், பொருளாதார நெருக்கடிகள் என்பவை காரணமாக அரசு இராணுவத் தீர்வு காணும் முயற்சிகளை கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பு.

★ குடாநாட்டுடன் காரைநகரை இணைக்கு பொன்னாலைப் பாலம் நேற்று குண்டு வைத்துத் தகர்ப்பு.

28.04.1991

★ 1956 இல் சுதந்திரக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றிய தனிச் சிங்களச் சட்டம் தான் தமிழர்களை ஆயுதம் தூக்க வைத்தது என ஜனாதிபதி பிரேம தாஸ தெரிவிப்பு.

★திருகோணமலை மாவட்டம், சம்பூர் பகுதியில் நான்கு நாட்களுக்கு முன்னர் 12 தமிழ்ப் பொதுமக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்று ரயர் போட்டு எரித்ததாகத் தெரிவிப்பு.

29.04.1991

★ நேற்றும், நேற்று முன்தினமும் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் இடம்பெற்ற உக்கிர சண்டையில் இராணுவ உயரதிகாரி ஒருவர் உட்பட 25க்கும் அதிகமான படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வேதனைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும் என நவசமசமாயக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார நாடாளு மன்றத்தில் பேசுகையில் தெரிவிப்பு.

30.04.1991

★ நேற்றுக்காலை மன்னார், நானாட்டான் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் அறுபதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியானதாகத் தெரிவிப்பு.

★ இலங்கையில் காணாமல் போனதாகக் கூறப்படும் 2 ஆயிரத்து 182 பேருக்கு நேர்ந்த கதி குறித்து விளக்கமளிக்குமாறு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு அரசிடம் விளக்கம் கோரியுள்ளதாகத் தெரிவிப்பு.

# நாடு கடந்த தமிழீழ அரசை முறியடிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## வெளிநாட்டுத் தூதர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை



கொழும்பு, மே 13

புலம்பெயர்ந்துவாழும் தமிழ்மக்களின் ஜனநாயக கட்டமைப்பாக உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல் தொடர்பாக வெளிநாடுகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் முதல் தடவையாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்த ஜனாதிபதி மஹிந்த, நாடு கடந்த தமிழீழ அரசு குறித்து தனது அரசின் கடும் அதிருப்தியை தெரிவித்தார்.

அங்கு அவர் பேசுகையில், நாடு கடந்த தமிழீழ அரசு என்ற பெயரில் வெளிநாடுகளில் பயங்கரவாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கையானது அவர்கள் இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளின் மீளுருவாக்கமாகவே கருதவேண்டியுள்ளது - என்றார்.

இதன் காரணமாக அவசரகாலச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மிகக் கவனமாகவே தளர்த்தப்பட்டுள்ளன என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இப்படியான கடந்த கால நடவடிக்கைகளால் இலங்கை முகம்கொடுத்த அழிவுகளை வெளிநாடுகளுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே, தற்போதைய இந்த முயற்சிகள் எப்படியானவை என்பதையும் வெளிநாடுகள் புரிந்துகொள்ளவேண்டும். பொறுப்பான நாடு என்ற வகையில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் நாங்கள் இது குறித்து அறிவித்திருக்கிறோம் என்றும் அவர் அங்கு கூறினார்.

நாட்டின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் அடித்தளமான தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஜனநாயக விழுமியங்களை கட்டிக்காப்பதற்கும் வடக்கில் மாகாணசபை தேர்தலை நடத்தவதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன். அதற்கான சரியான தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். அவ்வாறு ஒரு தேர்தல் நடத்தப்படும்போது, வடக்கு மக்கள் தங்களது உண்மையான தலைமையை ஜனநாயக வழியில் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (சி)

# இனப் படுகொலையைத் தாம் ஒருபோதும் ஆதரித்ததில்லை என்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மே 13

இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை வரவேற்றபோதிலும், இனங்களுக்கு எதிரான படுகொலையை தாம் ஒருபோதும் ஆதரித்ததில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் அனைத்து இனங்களுக்கும் அவரவர்களுக்குரிய பங்கு சமமாக வழங்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படக்கூடிய பஞ்சாயத்து முறையான தீர்வை தாம் விரும்புகிறார் எனவும் எனினும், வேறு எந்தப் பெயர்களைக் கொண்டும் தாம் அழைக்க விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை அவசியமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மயுடனும், ஜனநாயக ரீதியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். மாறாக தனிப்பட்ட ஒருவரின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அமையக் கூடாது.

பிரதித் தலைவர், தேசிய அமைப்பாளர், துணைச் செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய பதவிகளுக்காக நியமனங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் -

கட்சியின் வெற்றிக்காகவும் நாட்டு மக்களின் சுபீட்சத்திற்காகவும் தாம் அர்ப்பணிப்புடன் கடமையாற்ற உள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

# இலங்கைக்கு ஏற்றதான வகையில் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம்

## பீரிஸ் தகவல்

கொழும்பு, மே 13

இலங்கைக்கு ஏற்ற வகையில் வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாம் பின்பற்றிய சில வெளியுறவுக் கொள்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு சில செயற்பாடுகளுக்கு சாதகமானதாக அமைந்திருந்ததெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய வளங்களைத் திரட்டி வேறும் வழிகளில் அரசொன்றை அமைக்கும் முனைப்பில் விடுதலைப்புலி ஆதரவாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒரு சில ஐரோப்பிய நாடுகளும் இந்த முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றன. நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு புறம்பான வகையில் சில வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. சில தூதரகங்களின் நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை - அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)



எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் 2009 ஆம் ஆண்டில் இலவச பொதுப்பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த மாணவர்களுக்கு அண்மையில் நடைபெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் மாணவி ஒருவருக்கு தீவக வலய ஆரம்பக் கல்விப் பணிப்பாளர் வி.தனிநாயகம் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் து.கிருபாகரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# செல்லையா இராசையா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், கட்டுவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசையா (கிளாக்கர்) 11.05.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா - மீனாட்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சுந்தரம் தம்பதியரின் மருமகனும் நாகவேல்நாயகி (கனடா) நாகவேல்ராசா (வலி. வடக்கு-பிரதேச சபை), நாகவேல்சந்திரன் (நோர்வே), அருள்வேல் சந்திரன் (கனடா), பத்மவேல் (கனடா), ரதிவேல் நாயகி (நோர்வே), ஜெயலக்சுமி (ஆசிரியை- மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை), சிறிவேல் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரன் (கனடா), விஜயவர்த்தனி, மாதவி (நோர்வே), மனோன்மணி (கனடா), சுஜாதா, உதயகுமார் (நோர்வே), ஸ்ரீதரன் (ஆசிரியர்,யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை), சிவகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் செந்தூரன், கிருஷ்ணகிரி, மயூரி (கனடா), நவநீபன் (கணிதப்பிரிவு 2012, யாழ்.இந்துக்கல்லூரி) காலஞ்சென்ற டயானி மற்றும் நவலக்ஷைன் (யா/இணுவில் மத்திய கல்லூரி), மேகலை, சகானா, காயத்திரி, துஷ்யந்தன், மயூரிக்கா, நிலானி, கார்த்திகா, வேலினி (கனடா), சஜின், லதுசன், தனுசன் (நோர்வே), மதுமிதா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி), கிருஸ்ணாத், கிரிஷாந் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், ஆசைப்பிள்ளை, ஐயாத்துரை, இரத்தினம், துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பவளரத்தினம், அரியரத்தினம் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் வசந்தராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (13.05.2010) வியாழக்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கட்டுவன் வீதி, மல்லாகம். (83026) மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் முதலிடத்தையும் 17வயதுப் பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்ற மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலய அணியினர், அதிபர், பொறுப்பாசிரியர்களுடன்....

# மாவட்டப் போட்டிகள் நடைபெறும் நேரத்தில் கிரிக்கெட் அணி கொழும்பு செல்வதால் நெருக்கடி

## எந்தப் போட்டியில் பங்கேற்பது என மாணவர்கள் திண்டாட்டம்

வலி.வடக்க,மே13

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் நடைபெற்று வரும் சந்தர்ப்பத்தில் மாவட்ட கிரிக்கெட் அணியை கொழும்பு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் பெரும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

மாவட்டமட்டத்தில் நடைபெறும் தடகள, குழுநிலை, போட்டிகளில் கிரிக்கெட் அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் சில போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

இவர்களை உள்ளடக்கிய கிரிக்கெட் அணி இந்த வாரம் தென்னிலங்கையில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளும் அணியிலும் இடம்பெற்றுள்ளனர். இதனால் அவர்கள் கிரிக்கெட் அணியுடன் செல்வதா? அல்லது மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதா? எனத் திண்டாடுகின்றனர்?

இது தொடர்பாகக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கூறுகையில்;

பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்லும் சங்கங்கள் குறிப்பிட்ட திணைக்கள அலுவலர்களுடன் இணைந்து நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்தால் இத்தகைய நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் மாணவர்கள் தமது கல்லூரிகளின் போட்டிகளில் கலந்து கொண்டு கல்லூரிகளின் பெயரை நிலைநாட்ட வேண்டும் - என்றும் குறிப்பிட்டனர். (6-86)

# வடமாகாண வேகநடை அணிக்கு வீராங்கனைகள் மூவர் தெரிவு!

யாழ்ப்பாணம்,மே13

வடமாகாண மாவட்ட அணிகளுக்கு இடையே அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற பெண்களுக்கான வேகநடைப் போட்டியில் வெற்றிபெற்று மூவர் மாகாண அணிக்குத் தெரிவாகினர்.




வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்போட்டியில் முதலிடத்தை கருப்பையா திலகராணி (மன்னார்), இரண்டாம் இடத்தை நாகநாதன் ஜனனி (யாழ்ப்பாணம்), மூன்றாமிடத்தை நாகேந்திரன் யது (வவுனியா) ஆகியோர் பெற்றனர்.

இப்போட்டியில் 14 பேர் கலந்து கொண்ட போதும் 8 பேரே போட்டி விதிகளுக்கு அமைய முடிவு இடத்தை எட்டினர்.

முதல் மூவர் தவிர போட்டி தூரத்தை கடந்த ஏனைய வீராங்கனைனளாக ரி.நாகமயில் (வவுனியா), வி.சுஜனி (வவுனியா), பி.சுவீரா (மன்னார்), என்.டிலானி (வவுனியா), எம்.சுபாசினி (யாழ்ப்பாணம்).

இப் போட்டியில் இருவர் போட்டியிலிருந்து தாமாக விலகியதுடன் நால்வர் போட்டி விதிகளுக்கு அமைய நடந்து கொள்ளாததால் போட்டியில் இருந்து விலக்கப்பட்டனர். வெற்றிபெற்ற மூவரும் தேசிய மட்டத்தில் நடைபெறும் மாகாண அணிக்கு தெரிவாகியுள்ளனர். (6-23 - 86)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம்,மே13

கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மரதன் ஓட்ட வீரர்கள் தங்களது பதிவினை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தில் பதிவு செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (6 - 23)

## யாழ். பிரதேச செயலக தடகளப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கான தடகளப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக விளையாட்டு உத்தியோகத்தர் மோகன் அறிவித்துள்ளார். (6 - 23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## வலிகாமம் கல்வி வலய சதுரங்கப் போட்டி இன்று

வலி.வடக்கு,மே13

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான சதுரங்கப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

15,17 வயதுப் பிரிவினர்களுக்கிடையே இப்போட்டி நடைபெறவுள்ளது. (6-86)

# கற்கோவளம் உதயதாரகையின் உதைபந்தாட்டம் சிவானந்தா, டயமன்ஸ் வி.கழகங்கள் வெற்றி!

யாழ்ப்பாணம்,மே13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகியவற்றின் அனுசரணையுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டங்களில் சிவானந்தா விளையாட்டுக் கழகமும், டயமன்ஸ் (பி) விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இதைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் (பி) விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் டயமன்ஸ் (பி) விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (6-23)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கான கூடைப்பந்தாட்டம்; சென்றல், சென்.ஜோன்ஸ் கல்லூரிகள் இறுதியாட்டத்தில்!

யாழ்ப்பாணம்,மே13

யாழ்:மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி அணிகள் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் முதலில் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 70:38 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் சென்ஜோன்ஸ் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை 56 : 25 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது. (6-23)



புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் த.பஞ்சலிங்கம் [illegible] விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாவதி பிரகதீஸ்வரன் மற்றும் [illegible] சத்தியப் பிரமாணம் மேற்கொள்வதையும் பாடசாலை மாணவிகளின் அணி நடை மரியாதையை விருந்தினர்கள் ஏற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜூலை 15இல் பாகிஸ்தானில் பேச்சு அமைச்சர் கிருஷ்ணா பங்கேற்கிறார்

புதுடில்லி, மே 13

இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா, வரும் ஜூலை 15 ஆம் திகதி பாகிஸ்தான் சென்று, அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஷா முகமது குரேஷியுடன், இரு தரப்பு உறவு குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள நம்பிக்கையின்மை குறையும் என்று கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இந்தியா.- பாகிஸ்தான் இடையே ஏற்கனவே நடந்து வந்த அமைதி பேச்சு மும்பை தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்காதவரை, அந்நாட்டுடன் பேச்சு நடத்தப்படமாட்டாது என இந்தியத் தரப்பில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே, கடந்த மாதம் திம்புவில் நடந்த சார்க் உச்சி மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் பிரதமர் கிலானியும் சந்தித்தனர். இதன்முடிவில், இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சு தொடங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா முகமது குரேஷி, இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணாவுடன், டெலிகான்பரன்சிங் முறையில் நேற்றுமுன்தினம் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது பேச்சைத் தொடர்வது குறித்து பேசினர். 25 நிமிடங்கள் இருவருக்கும் இடையே பேச்சு நடந்தது. அப்போது, பாகிஸ்தானுக்கு வந்து பேச்சு நடத்தும்படி கிருஷ்ணாவுக்கு, குரேஷி அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பை கிருஷ்ணா ஏற்றுக் கொண்டார்.

செய்தியாளர்களிடம் கிருஷ்ணா கூறியவை வருமாறு -

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷியின் அழைப்பை ஏற்று, வரும் ஜூலை 15 இல் பாகிஸ்தான் செல்கிறேன். இஸ்லாமாபாத்தில் குரேஷி மற்றும் பாகிஸ்தானின் முக்கிய அதிகாரிகளுடன் இரு தரப்பு உறவு தொடர்பாக பேச்சு நடத்துவேன். இந்தப் பேச்சின் மூலம், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு, மீண்டும் சீரடைவதற்கு வாய்ப்பு ஏற்படும். இது மிகவும் பயனளிக்கும் வகையிலும் இருக்கும்.

பேச்சில் இடம் பெறக் கூடிய விடயங்கள், தொடர்ந்து பேச்சு நடத்துவது ஆகியவற்றுக்கான திட்டங்கள் இனி வகுக்கப்படும். இரு நாடுகளுக்கும் இடையே உள்ள நம்பிக்கையின்மை இதன்மூலம் குறையும். இரு தரப்புக் கும் இடையே நடக்கும் பேச்சு வெளிப்படையாகவும், சாதகமான அணுகுமுறையுடனும் இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒரே நாள் இரவில் இப்பிரச்சினையில் அதிசயம் எதுவும் நிகழ்ந்து விடாது - என்றார்.

# தமிழருக்கு சாதகமான முடிவை அறிவிக்கும்வரை அமிதாப் - ஐஸ்ஸுக்கு எதிரான போர் தொடரும்!

## நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் ஆவேசம்

சென்னை, மே 13

தமிழர்களுக்கு சாதகமாக இறுதி முடிவை அறிவிக்கும் வரை அமிதாப் மற்றும் ஐஸ்வர்யா ஆகியோருக்கு எதிராக 'நாம் தமிழர்' இயக்கத்தின் போராட்டம் தொடரும் என்று அந்த இயக்கத்தின் தலைவர் சீமான் கூறியுள்ளார்.

இதுகுறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையின் கொடூர முகத்தை மறைப்பதற்காக இந்திய அரசின் உதவியுடன் இலங்கை அரசு கொழும்பில் நடத்தும் சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாவில் ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் முக்கிய பங்காற்றுகிறார் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழர்களின் இனப்படுகொலையை மறைப்பதற்காக நடத்தப்படும் இந்த விருது வழங்கும் நிகழ்ச்சியில் அமிதாப் கலந்து கொள்வதற்கு கண்டனம் தெரிவித்து எமது நாம் தமிழர் தொண்டர்கள் மும்பையில் உள்ள அமிதாப்பின் வீட்டு முன் சில வாரங்களுக்கு முன் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

அமிதாப் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், தமிழர்களின் உணர்வுகளைத்தான் புரிந்துள்ளார் எனவும்,அவர்களது உணர்வுக்கு மதிப்பளிக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

முற்றுகைப் போராட்டத்தின் விளைவாக நமக்குச் சாதகமான சில செய்திகள் வந்த போதும், அண்மையில் சிங்கள அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இலங்கையில் நடைபெறவிருக்கும் சர்வதேச இந்திய திரைப்பட விருது விழாவில் திட்டமிட்டபடி பொலிவுட் நட்சத்திரங்கள் அமிதாப் உள்ளிட்டோர் பங்கேற்பார்கள், அதை யாராலும் தடுக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

இது எம்மைக் காயப்படுத்துவதாகவும் எமது போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதாகவும் உள்ளது. ஆகவே எமது கோரிக்கையை வலியுறுத்தியும் தமிழர்களுக்கு சாதகமாக கொழும்பில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் கலந்துகொள்ள மாட்டேன் என்று இறுதி முடிவு எடுக்கும் படி வற்புறுத்தியும் நடிகர் அமிதாப் மற்றும் ஐஸ்வர்யா ராய் ஆகியோர் மும்பையில் வசிக்கும் வீட்டின் முன் 12 ஆம் திகதி காலை முதல் நாம் தமிழர் இயக்கத்தால் காலவரையற்ற உண்ணா நிலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாம் விரும்புவதும் வேண்டுவதெல்லாம் சர்வதேச திரைப்பட விருது வழங்கும் விழாவை கொழும்பில் நடத்தக் கூடாது, இந்தியாவில் இருந்து யாரும் கலந்து கொள்ளக்கூடாது என்பது தான். அதை மீறி நடத்த முற்பட்டாலோ, நட்சத்திரங்கள் கலந்து கொள்ள எண்ணினாலோ அவர்களுக்கு எதிராக பல்வேறு வகைகளில் போராட்டம் தொடரும் - என்றுள்ளது.

# மாவோக்கள் பேச்சுக்கு முன்வருவர்; மத்திய அரசு நம்பிக்கை தெரிவிப்பு

புதுடில்லி, மே 13

மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக் கீழே போட்டு அமைதிப் பேச்சுக்கு முன் வருவார்கள் - என்று மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் நிறைந்த பகுதியில் அவர்களுக்கு எதிரான தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளது. மற்றொரு விதத்தில் அமைதிப் பேச்சுக்கு வருமாறு அரசு விடுத்த வேண்டுகோளுக்கு மாவோயிஸ்ட் தரப்பில் இருந்து எதிர்மறையான பதில் இல்லை. இதனால் அவர்கள் அமைதிப் பேச்சுக்கு முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம் - என்று மத்திய உள்துறை செயலர் ஜி.கே.பிள்ளை கூறினார்.

மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கை குறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு செவ்வாய்க்கிழமை பேட்டியளித்த போதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

காங்கிரஸ் ஆட்சி நடக்காத சத்தீஸ்கர், பீஹார், ஜார்க்கண்ட், ஒரிஸா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள்தான் மாவோயிஸ்டுகள் தாக்குதலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாநிலங்களில் மாவோயிஸ்டுகளின் வன்முறை செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு இந்த 5 மாநிலங்களும் முழு ஒத்துழைப்பு அளிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

சமீபகாலமாக பாதுகாப்பு படையினருக்கு எதிரான மாவோயிஸ்டுகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. கடந்த ஏப்ரலில் சத்தீஸ்கரின் தந்தேவாடாவில் மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் 76 பாதுகாப்புப் படை வீரர்கள் பலியாகினர்.

இந்தச் சம்பவம் இந்தியா முழுவதும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து ஆயுதத்தைக் கீழே போட்டு அமைதிப் பேச்சுக்கு முன்வருமாறு மாவோயிஸ்டுகளை மத்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் மாவோயிஸ்டுகள் எவ்வித பதிலும் தெரிவிக்காமல் அமைதியாகவுள்ளனர் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# கொழும்புத் திரைப்பட விழாவுக்கு ஐஸ் - அபிஷேக் வரமாட்டார்கள்?

சென்னை, மே 13

கொழும்பில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவில் நடிகை ஐஸ்வர்யா ராய் பங்கேற்க மாட்டார் என்று கூறப்பட்டுள்ளது.

கேன்ஸ் திரைப்பட விழாவில் ஐஸ்வர்யா ராய் பங்கேற்கவிருப்பதாலும், வேறு சில காரணங்களாலும் அவர் 'ஐபா' விருது விழாவில் பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமிதாப் பச்சன், ஐஸ்வர்யா ராய், அபிஷேக் பச்சன், ஷாரூக்கான் ஆகியோர் கொழும்பு விழாவில் பங்கேற்பதை யாராலும் தடுக்க முடியாது என்று இலங்கை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து அமிதாப் குடும்பம் ஐபா விழாவில் பங்கேற்கக் கூடாது என்று கோரி தமிழ் அமைப்புகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன.

நாம் தமிழர் அமைப்பு நேற்றுமுன்தினம் மும்பையிதுள்ள அமிதாப் வீட்டின் முன்பு காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில், ஐஸ்வர்யா ராய், அபிஷேக் பச்சன் ஆகியோர் இலங்கை செல்லும் திட்டத்திலில்லை என்றும், ஐஸ்வர்யா ராய் கேன்ஸ் திரைப்பட விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக, கேன்ஸ் திரைப்பட விழாவின் தொடக்க நாள் நிகழ்வுகளில் ஐஸ்வர்யா ராய் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐஸ்வர்யா ராய் கொழும்பு செல்லாததன் மூலம், அவர் நடித்துள்ள தமிழ்ப் படங்களான ரஜினியின் 'எந்திரன்' மற்றும் மணிரத்தினத்தின் 'ராவணன்' ஆகிய படங்களுக்கு வரவிருந்த பல நெருக்கடிகள் தவிர்த்துள்ளன.

# பார்வதியம்மாவிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை

## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, மே 13

சிகிச்சைக்காக தமிழகம் வருவதற்கு மத்திய அரசு அளித்துள்ள அனுமதி குறித்து பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளிடம் இருந்து எவ்வித தகவலும் வரவில்லை - என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை கேள்வி நேரம் முடிந்ததும் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு -

பீட்டர் அல்போன்ஸ் (காங்.) -

தமிழகத்தில் தங்கி சிகிச்சை பெற பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இதனை திங்கட்கிழமை (மே 10) முதல்வர் கருணாநிதி தெரிவித்தார். மத்திய அரசின் நிபந்தனைகளை ஏற்க மறுத்துள்ளார் என பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இது குறித்து அரசுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா - என்றார்.

முதல்வர் கருணாநிதி -

பத்திரிகைகளில் வந்துள்ள செய்தியை பீட்டர் அல்போன்ஸ் இங்கே எழுப்பியுள்ளார். அதிகார பூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ பார்வதியம்மாளிடம் இருந்து எந்தவிதமான பதிலும் இந்த அரசுக்கு வரவில்லை.

உங்களுடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற கருத்து அமைந்த கடிதம் அவர்களால் அனுப்பப்படவில்லை.

எந்தக் கடுமையான நிபந்தனைகளும் அவருக்கு விதிக்கப்படவில்லை. அரசின் பாதுகாப்பு என்றால் சிறைக் கோட்டம் போன்ற பாதுகாப்பு அல்ல. உடல்நிலை சரியில்லாமல் வரும் அவருக்கு பரிந்து பணிவிடை செய்ய, வைத்தியசாலையில் தங்க வைத்து அடிக்கடி கவனித்துக் கொள்ளவே அரசின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. தடை செய்யப்பட்ட இயக்கங்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பு உள்ளவர்களுடன் நட்பு கொள்ளக்கூடாது என்றுதான் நிபந்தனை விதிக்கப்பட்டது.

பிரபலமான ஒரு முக்கிய பிரமுகரின் தாயார் இங்கு தங்கியிருக்கும்போது, அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் நடத்துவத[illegible] நிபந்தனை[illegible] நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்; இல்லாவிட்டால் உங்களை இங்கே அனுமதிக்க முடியாது என்று கூடச் சொல்லவில்லை.

நீங்கள் இங்கு வந்து தங்குங்கள். சிகிச்சை பெறுங்கள். வைத்தியசாலையில் உங் களை அனுமதித்து திறமையான டாக்டர்கள் மூலம் சிகிச்சை அளிக்கிறோம். ஆனால், உங்களை வைத்து யாராவது அரசியல் நடத்த விரும்பினால் அதற்கு நீங்கள் இடம் தரக்கூடாது என்று கனிவோடு பார்வதியம்மாளுக்கு வேண்டுகோள் விடுத்தோம். அதனை ஏற்று மத்திய அரசும் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கிடையில் பீட்டர் அல்போன்ஸ் சொல்கின்ற செய்தி பத்திரிகைகளில் வந்துள்ளது. ஒரு காலத்தில் பத்திரிகையிலேயே செய்தி வந்து விட்டதா என்று அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கிடைக்கும். இந்தக் காலத்தில் பத்திரிகைகளில் தானே வந்திருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. எனவே, [illegible]ளிடம் இருந்து திட்டவட்டமான பதில் வரும் வரை பீட்டர் அல்போன்ஸ் இதனை நம்ப வேண்டாம் - என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் விமான விபத்து; 104 பேர் பரிதாப உயிரிழப்பு!



ஜொஹன்ஸ்பேர்க்,மே13

பயணிகள் விமானமொன்று நேற்று புதன்கிழமை லிபியாவின் தலைநகரான திரிப்போலிக்கருகில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் விமானத்திலிருந்த 104 பேர் உயிரிழந்தனர் என விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

எவ்ரிகுயா விமான நிறுவனத்தைச் சேர்ந்த இந்த விமானம் தென்னாபிரிக்க ஜொஹனஸ்பேர்க் விமானநிலையத்திலிருந்து லிபியாவை நோக்கிப் புறப்பட்டது.

இவ்விமானம் லிபிய தலைநகரான திரிப்போலி விமான நிலையத்தை அண்மித்துக் கொண்டிருந்தபோது, விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் சிப்பந்திகளைத் தவிர, 93 பயணிகள் இருந்தார்கள். இவர்கள் பிரிட்டன், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் விபத்தில் மரணித்துள்ளார்கள் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

இவர்களோடு விமானத்திலிருந்த 11 சிப்பந்திகளும் உயிரிழந்துள்ளனர். இவர்கள் லிபிய பிரஜைகளாக இருப்பர் என கருதப்படுகிறது என ஓரதிகாரி தெரிவித்தார்.

இந்த விமானம் திரிப்போலி விமானநிலையத்தை அடைந்த பின்னர் அங்கிருந்து லண்டனுக்கருகிலுள்ள கெட்விக் விமான நிலையத்தை நோக்கிப் புறப்படவிருந்தது என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.விப்த்துச் சம்பவம் நிகழ்ந்த இடத்தை நோக்கி அம்புலன்ஸ் வாகனங்கள் விரைந்தன என திரிப்பொலியில் உள்ள பி.பி.ஸி. நிருபர் ரணா ஜவாத் என்னும் பெண்மணி தெரிவித்தார்.

ஆவ்ரிகுயா விமானசேவை நிறுவனம் லிபியாவுக்குரியது. இது 2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

லிபியாவில் கடந்த சில நாட்களாக காலநிலை சீராகவுள்ளது. இது வெயிற்காலமாகும். விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை என்றும் ரணா ஜவாத் மேலும் குறிப்பிட்டார்.

# பொறுப்புள்ளதோர் புதிய சமூகத்தை கட்டியெழுப்ப பெரிதும் உதவுவேன்

## பிரிட்டனின் புதிய பிரதமர் டேவிட் கெமரூன் உரை

லண்டன், மே 13

''பிரிட்டனில் அதிக பொறுப்புள்ள ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நான் பெரிதும் உதவுவேன். இயன்றவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் நாங்கள் எச்சமயத்திலும் உதவுவோம். எமது நாட்டிலுள்ள முதியவர்கள், பலவீனமானவர்கள், பரம ஏழைகள் ஆகியோரை எனது அரசு எச்சமயத்திலும் பேணி ஆதரிக்கும். இதை நான் உறுதிப் படுத்துகிறேன்.''

- இவ்வாறு புதிய பிரிட்டிஷ் பிரதமராகப் பதவியேற்கும் கன்சர்வேடிவ் (பழைமைவாத) கட்சியின் தலைவர் டேவிட் கெமரூன் தெரிவித்துள்ளார். பிரிட்டனின் ஏறத்தாழ 200 வருடகால வரலாறற்றில் வயது குறைந்த பிரதமர் கெமரூனே ஆவார். இவருக்கு வயது 43.

''கட்சி வேறுபாடுகளைப் புறந்தள்ளி விட்டு, நாட்டின் நலன்களிலேயே எமது அரசு அதீத அக்கறை செலுத்தும். சில கடினமான முடிவுகளுக்கு நாங்கள் முகங்கொடுக்கவேண்டிய நிலையில் உள்ளோம். அதனால், ஒவ்வொருவரையும் அணைத்தவாறு எமது பயணத்தைத் தொடருவோம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''நான் இந்த நாட்டை இதயபூர்வமாக நேசிக்கின்றேன். அதன் பொருட்டே அரசியலுக்குள் நான் பிரவேசித்துள்ளேன். பயன்தரவல்ல, பிரகாசமான நாட்கள் இன்னும்



எம்முன்னிலையில் உள்ளன. அதனால் பொதுச் சேவையை நான் மிக ஆழமாக நம்புகின்றேன்'' என்றும் கெமரூன் தெரிவித்துள்ளார்.

''எமது நாட்டுக்கு இப்போதே அப்பழுக்கில்லா சேவை தேவைப்படுகிறது. எம்மை எதிர்நோக்கியுள்ள பாரிய சவால்களுக்கு நாம் முகங்கொடுக்கவேண்டும். பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் சாதுரியமாக எதிர்கொள்ளவேண்டும். கடினமான முடிவுகளை நாம் எடுக்கவேண்டும். அந்த முடிவுகளுக்கூடாக மக்களை வழி நடத்தவேண்டும். அப்படியானால், சுபீட்சமான காலகட்டத்தை எம்மால் ஒருங்கிணைந்து அடைந்துவிட முடியும்'' என்றும் கெமரூன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் கடந்தவாரம் (மே 6 ஆம் திகதி) நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் கெமரூனின் கன்சர்வேடிவ் கட்சி அதிகப்படியான ஆசனங்களை ஈட்டியது. எனினும், பெரும்பான்மை பலத்துடன் கூடிய ஓர் அரசை அமைப்பதற்குப் போதுமான ஆசனங்கள் கிட்டவில்லை. அதனால் தொங்கு நாடாளுமன்றமே சாத்தியப்பட்டுள்ளது.

கூட்டு அரசு அமைப்புத் தொடர்பாக கன்சர்வேடிவ் கட்சிக்கும், லிபரல் ஜனநாயகக் கட்சிக்குமிடையே செவ்வாய்க்கிழமை பல மணித்தியாலங்கள் வரை பேச்சுகள் நடைபெற்றன. இரவு நள்ளிரவுக்குப் பின்னர், கூட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கைக்கு லிபரல் ஜனநாயகக் கட்சி, அதன் சமஷ்டி நிருவாகக் குழு ஆகியவற்றுக்கிடையே இணக்கப்பாடு ஏற்பட்டது.

கன்சர்வேடிவ், லிபரல் ஜனநாயகக் கட்சி கூட்டமைப்பு அரசில், லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் நிக்கினைக் பிரதிப் பிரதமராக பதவியேற்கவுள்ளார். பிரிட்டனில் 70 வருடகால கட்டத்தில் முதன் முறையாக அமையவிருக்கும் கூட்டரசு இதுவாகும்.

கன்சர்வேடிவ் லிபரல் ஜனநாயகக் கட்சியின் கூட்டரசு பதவியேற்பதன் மூலம் பிரிட்டனில் 13 வருடகால தொழிற் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வருகிறது. லிபரல் ஜனநாயகக் கட்சியும், கன்சர்வேடிவ் கட்சியும் அதிகாரப் பகிர்வில் ஈடுபடுவது பிரிட்டிஷ் வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

1977ஆம் ஆண்டு டொனிபிளேர் பிரதமராக டவுனிங் வீதிக்குள் பிரவேசமானார். அவரோடு ஒப்பிட்டு நோக்குகையில், பிளேருக்கு கெமரூன் ஆறுமாதகால இளையவராவார். 1812ஆம் வருடம் தொட்டு, இதுவரை பிரதமராகப் பதவியேற்பவர்களில் வயது குறைந்தவர் கெமரூன் ஆவார்.

கெமரூன் தமது புதிய டவுனிங் வீதி வாசஸ்தலத்துக்கு வெளியே தமது ஆதரவாளர்கள் மத்தியில் பேசினார். அதற்கு முன்னர் பக்கிஹாம் மாளிகைக்குச் சென்று, அடுத்த அரசு அமைப்பதற்கான சம்பிரதாய அனுமதியை எலிசபெத் இராணியிடமிருந்து பெற்றார்.


# 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
28
★
10
★
1927



மறைவு
13
★
04
★
2010

## அமரர் தவமணி முத்துரத்தினம்

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் குலவிளக்காய் வழிகாட்டியாய் வாழ்ந்து காற்றில் இட்ட கற்பூரமென விரைவாய் மறைந்த எம் தலைவி மீளாத மறுமைவழிச் சென்றதை எண்ணி எம் இதய மனங்களின் மூலம் கற்பகவிநாயகர் கமலப் பாதங்களில் சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (13.05.2010) வியாழக்கிழமை மதியம் அவரது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

(அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத்தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (98166) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி பாலசண்முகம் நாகரத்தினம்

அரசடி விநாயகர் வீதி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசண்முகம் நாகரத்தினம் நேற்று (12.05.2010) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் வே.பாலசண்முகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பா.ஜெயபாலன் மற்றும் நா.ஜெயசோதி (சுவிஸ்), ம.கௌரி, ஸ்ரீ.கலாவதி, மௌ.சந்தானலக்ஷ்மி(சுவிஸ்), அ.ஜீவரதி, பா.சிவபாலன் (சுவிஸ்), பா.விநோதினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாவேந்தன் (சுவிஸ்), மணிவாசகன்,ஸ்ரீதாஸ், முஸ்தபா மௌலானா (சுவிஸ்), அற்புதராஜா (லண்டன்), சுபாஜினி (சுவிஸ்), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தபித்தா, கௌதமி, கௌதினி,கௌதசி, மதுசூதனன், மயூரி, மதுரா, மதுசிகன், பிருந்தா, பிரியங்கா, கிருஷாயணி, மதுசிகா, றிஸ்வான், றிஸ்வி, விருண்சன், சுருதிசன், மகதிசன், அக்சயா, விஷால் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தருண், விகாஷ், பிருதுவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.05.2010) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி விநாயகர் வீதி,
அல்வாய் வடக்கு. (சி/567591)

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே. - 0213737802


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



அரசன்கேணி, பளையைப் பிறப்பிடமாகவும், கட்டைக்காடு, முள்ளியானை வசிப்பிடமாகவும் கொண்ட

**வல்லிபுரம் தம்பிராசா**
(குகன்)

பிறப்பு 05.10.1967 இறப்பு 13.05.2009

அன்னாரின் ஓராண்டு நினைவுத் திருப்பலி மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் இன்று (13.05.2010) வியாழக்கிழமை ஒப்புக்கொடுக்கப் படும். அத்துடன் மாரீசன்கூடல், இளவாலையில் உள்ள அன்னாரின் மைத்துனரின் இல்லத்தில் மதியபோசன நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

அருள்சந்திரபுஸ்பம் - மனைவி,
(புஸ்பா-ஆசிரியர்)

மாரீசன்கூடல்,
இளவாலை. (98754)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் விடுதி

எமது கல்லூரியின் மாணவர் விடுதி மீண்டும் இயங்க உள்ளதால் விடுதியில் தங்கி கல்வி கற்க விரும்பும் மாணவர்களின் பெற்றோர் கல்லூரி அலுவலகத்துடன், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே. : 021 222 2184, 021 222 3658, 071 808 4818

அதிபர்.

## வேலைவாய்ப்பு

வவுனியா நகரில் பெண்களால் நிர்வாகம் செய்யப்படும் பிரபல விருந்தினர் விடுதிக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு பெண்கள் தேவை.

★ காசாளர் ★ கணக்காளர்
★ வரவேற்பாளர் ★ பிரதான சமையல் செய்பவர்
★ உதவி சமையல் செய்பவர் ★ உணவு பரிமாறுபவர்
★ கவுண்டர் பொறுப்பாளர் ★ முகாமையாளர்

வயதெல்லை 20 இற்கு மேற்பட்டோர். இலவச தங்குமிட வசதிகள், உணவும் மற்றும் கவர்ச்சிகரமான சம்பளமும், லீவும் வழங்கப்படும்.

நேர்காணல்: தேவி இன் அன் உணவகம்
(ஹோட்டல்)

37, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (எக்காளத்தொனி தேவாலயம் அருகில்).

★ வியாழன் (13.05.2010) மதியம் 2 மணி தொடக்கம் 5 மணி வரை.

★ வெள்ளி (14.05.2010) காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை, மதியம் 2 மணி தொடக்கம் 5 மணிவரையும் நேர் காணல் நடைபெறும்.

(98091) தொடர்புகளுக்கு: 077 3405396

## STUDY IN INDIA

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து
பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

Garden City College Affiliated to Bangalore University
SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Maths + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Biology + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : :A/L Passes in any TWO Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்வியயில்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

Tel: (தமிழில்): 0777 767818/ 0779004124

Scholars Information Center (Sic)

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## அருள் முருகன் திருமண சேவை

Doctors, Engineers, வெளிநாடு மணமக்கள், எத்தகைய மணமக்கள் தேவைக்கும் இது ஒரு இலகுவான திருமண சேவை.

03.யாழ்.வீதி, சிறாம்பியடிலேன், பருத்தித்துறை வீதி - பலாலி வீதிச்சந்தி, யாழ்ப்பாணம்.T.P. 0212229334 (98088)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 சித்திரை திருவோணம், 1ஆம் பாதம், 7இல் செவ்வாய், பாவம் 77¼ தனியார் துறையில் பணிபுரியும் மணமகனிற்கு மணமகள் தேவை. 7இல் செவ்வாய் சாதகம் விரும்பத்தக்கது.

விளம்பர இலக்கம் 4019
c/o உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டன

பாடசாலை வீதி,இருபாலை கிழக்கு, கோப்பாய் என்னும் முகவரியுடைய ஈஸ்வரநாதன் நிமலன் என்பவரது தே.அ.அட்டை (781202 444 V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P 0777686220

## வேலையாள்கள் தேவை

யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் தொலைத்தொடர்பு, போட்டோக்கொப்பி, கணனி நிறுவனத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

விளம்பர இலக்கம் 4018
c/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சாரதி தேவை

யாழ்.நகரில் பிரபலமான ஸ்தாபன மொன்றின் விநியோக வாகனமொன்றுக்கு AD Class உள்ள அனுபவமுள்ள சாரதி தேவை. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம், 077 4436678

## விற்பனைக்கு

சிங்கப்பூரிலிருந்து கொண்டுவரப்பட்ட 'நொக்கியா' Touch மொடல் போன் 1) 5530 2) 5800 விற்பனைக்குண்டு.

தொடர்பு: 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7904

## கணனி தட்டச்சு வேலையும், மொழிபெயர்ப்பும்

கணனி தட்டச்சு வேலைகளை தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறப்பாக செய்து கொள்வதற்கும், பிறப்புச்சான்றிதழ் போன்ற முக்கிய ஆவணங்களை மொழி பெயர்த்துக் கொள்வதற்கும் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 0772718558

## யாழ் - கொழும்பு வான் சேவை

யாழ் -கொழும்பு - Air port மற்றும் விசேட வைபவங்களுக்கு தொடர்பு கொள்ளவும். ஒருவருக்கான கட்டணம் 1000/= மட்டும்.

தொ.பே:0777199319, 0777199352, 0779770027.

## வலி.மேற்கு பிரதேச சபையின் அபிவிருத்திக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 13

வலி.மேற்குப் பிரதேசசபைக் குட்பட்ட 25 கிராம சேவகர் பிரிவுகளில் 'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத் திக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு பிர தேச சபை தலைமை அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் ஆலோசனை சபைப்பிரதிநிதிகள் ஆகியோருக்குஅவசரஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே அனைவரையும் தவறாது கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்குமாறு வலி.மேற்கு பிரதேசசபைச் செயலர் கேட்டுள்ளார். (ஒ-10)

## CHUNDIKULI GIRLS'COLLEGE, JAFFNA, WANTED

Teachers to teach the following subjects.

1. Biology in A/L classes
2. Science in Grs. 6 —11
3. Western Music in Primary classes

Applications close on the 17 th May 2010.
Only shortlisted candidates will be considered for an interview.

**Principal.**

## ஓராண்டு நீங்கா நினைவஞ்சலி



| | கனகராசா யோகராசா | யோகராசா தமிழ்வேந்தன் | யோகராசா ரோகிதா | யோகராசா தமிழ்நிலா |
|---|---|---|---|---|
| மண்ணில் | 16.10.1969 | 19.06.2006 | 18.09.2004 | 16.09.2002 |
| விண்ணில் | 13.05.2009 | 13.05.2009 | 13.05.2009 | 13.05.2009 |

ஈராறு மாதங்கள் உங்கள் முகம்
காணாது ஏங்கி வாழும்

உங்கள் அன்பு மனைவி, அம்மா
யோ. டயசாந்தி

தற்காலிக முகவரி:
பாரதிபுரம் கிழக்கு, கிளிநொச்சி.

பிரதான முகவரி:
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

தகவல்: : மைத்துனன், மாமன் (மோகன் - பிரான்ஸ்)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் போசகர் அருட்பணி
எம்.எம்.எச். ஞானேந்திரன் அடிகளாரின் அன்புத் தாயார்

**அமரர் றோசம்மா மரியாராஜரட்ணம்**

அவர்கள் கனடாவில் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து கவலையடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் எமது பாடசாலைப் போசகருக்கும்,குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

யா/மாரீசன்கூடல்
றோ.க.த.க.பாடசாலை, இளவாலை. (98097)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1189 நிலம்

11-05-2010

மகரம் 14 19 24 52

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 208,395 | 20/- | 4,167,900/- |
| 2 இலக்கங்கள் | 19,163 | 40/- | 766,520/- |
| 1 இல. + லக்கினம் | 18,937 | 60/- | 1,136,220/- |
| 2 இல. + லக்கினம் | 1,755 | 200/- | 351,000/- |
| 3 இலக்கங்கள் | 509 | 1000/- | 509,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 7,990,640/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 248,813 | | 8,490,640/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,931,250/-

ஆலிந்தயே வாசனாவ - லக்கி செவன் வெற்றியாளர்
டபிள்யூ.அசோகா பத்மினி : எல்பிட்டி
ரனேஷ் டேமியன் : கோனவல

வளமான வாழ்வித்து
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 401230362-3-48 |
| மாத்தளை | 401225010-0-23 |
| கண்டி | 401224184-3-07 |
| மொனராகலை | 401222425-3-29 |
| குருநாகல் | 401224014-5-07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி வரை யாரோ?



உலகக் கிண்ண 'ருவென்ரி -20' தொடரின் முதலாவது அரையிறுதி யாட்டதில் இன்று இரவு 9 மணிக்கு இலங்கை - இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத் தொடரின், லீக் போட்டிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்த 8 அணிகள் 'சூப்பர் - 8' சுற்றுக்கு முன்னேறின. இந்தச் சுற்றில் மிகவும் பலம் வாய்ந்த அணிகள் மோதிக்கொண்டன. இறுதியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

'சூப்பர்-8' சுற்றில் எந்தவொரு தேர்ல்வியையும் சந்தித்திராத பலமிக்க அணியான இங்கிலாந்து அணியை, இலங்கை எதிர்கொள்கிறது.

இலங்கை அணி 'சூப்பர் - 8'இல் ஆஸ்திரேலியாவிடம் மட்டுமே தோல்வியடைந்தது. மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணிகளை வீழ்த்தியிருக்கின்றது. எனவே, இலங்கை அணியும் பலம் மிக்க அணியாகவே காணப்படுகிறது.

இன்றைய போட்டி பலம் மிக்க இரண்டு அணிகளுக்கிடையிலான போட்டி என்பதால் பரபரப்புக்குப் பஞ்சம் இருக்காது.

இன்றைய போட்டியில் வென்று கடைசி வரை செல்வது யார் என்பது இன்று இரவு தெரிந்துவிடும்

# கடைசிப் பந்தில் சிக்ஸர்; அரையிறுதிக்குள் இலங்கை!

இந்திய அணிக்கு எதிரான முக்கிய ஆட்டத்தில் இலங்கை அணி, கடைசிப் பந்தில் வைத்து சிக்ஸர் அடித்து - திரில் வெற்றிபெற்றது. இதன் மூலம் இலங்கை அணி அரையிறுதிக்குள் நுழைய, இந்திய அணி தொடர் தோல்விகளுடன் வெளியேறியது.

நேற்றுமுன்தினம் நடந்த 'சூப்பர்-8' சுற்றில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி இந்தியாவின் இன்னிங்ஸை தினேஷ் கார்த்திக்- கௌதம் கம்பீர் ஜோடி ஆரம்பித்தது.

ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் தினேஷ் கார்த்திக் 13 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா அதிரடி காட்டினார். முதல் 10 ஓவர்களில் இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 90 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஆனால், பிற்பாதியில் இந்திய வீரர்கள் தடுமாறினர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கம்பீர் (41) மலிங்கவின் பந்து வீச்சில், விக்கெட் காப்பாளர் சங்கக்காரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து அணித்தலைவர் டோனி களம் புகுந்தார்.

மறுமுனையில் தொடர்ந்து அபாரமாக ஆடிக்கொண்டிருந்த சுரேஷ் ரெய்னா அரைச் சதம் (63) கடந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைச் சேர்த்தது. டோனி 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பின்னர், வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, ஆரம்ப வீரர்களான ஜெயவர்த்தன (4), ஜெயசூர்யா (0) ஆகியோரை 2 ஓவர்களுக்குள் இழந்தது, எனினும், நடுவரிசை வீரர்கள் நிலைத்து நின்று ஆடினார்கள். டில்ஷான் 33 ஓட்டங்களையும், அணித்தலைவர் சங்கக்கரா 46 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழந்தனர். பின்னர் இணைந்த மத்யூஸ்- கப்புக்கேதர ஜோடி அணியை வெற்றியிலக்கு நோக்கி நகர்த்தியது.

கடைசி ஓவரில் இலங்கையின் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த ஓவரை நெஹ்ரா வீசினார். முதல் பந்தில் மத்யூஸ் சிக்ஸர் அடித்தார். அடுத்த மூன்று பந்துகளில் 4 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன. 5ஆவது பந்தில் மத்யூஸ் (46) 'ரன்-அவுட்' ஆனார். இதனால், கடைசிப் பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கடைசிப் பந்தை எதிர்கொண்ட கப்புக்கெதர சிக்ஸர் விளாசி அட்டகாசப்படுத்தினார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் இலங்கை அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 167 ஓட்டங்களைக் குவித்து, 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. கப்புகெதர 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார். ஆட்டநாயகனாக இலங்கை வீரர் மத்யூஸ் தெரிவுசெய்யப்பட்டார்.


வீட்டு மின் சுற்றுக்கான மின்சாரப் பொருள்கள்,
மின் அலங்கார விளக்குகள், நீர்மின் மோட்டர்கள், ரீவி வகைகள்,
குளிர்சாதனப்பெட்டிகள், சலவை இயந்திரங்கள், ரேடியோ
வகைகள், எஸ்லோன் நீர்க்குழாய்கள், நீர்த்தாங்கிகள்
யாவற்றையும் மலிவான விலையில் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்



செல்வா எலக்ரிக்கல்ஸ்
இல.21, பலாலி வீதி, திருநெல்வேலி.


# பிரதி மேயர் விடுவிக்கப்பட்ட பின்னரே மாதாந்தக் கூட்டம் நடைபெறும்

## யாழ்.மாநகர சபை நேற்று தீர்மானம்

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாநகர சபையின் பிரதிமேயர் துரைராசா இளங்கோ(றீகன்) நீதிமன்றால் விடுவிக்கப்பட்டு, சபைக்கு வரும் வரையில் சபையின் மாதாந்தத் கூட்டத்தை ஒத்திவைப்பதென நேற்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய கூட்ட அமர்வின்விவரம் வருமாறு -

யாழ்.மாநகர சபையின் கூட்டம் நேற்று புதன்கிழமை மாநகர முதல்வர் தலைமையில் ஆரம்பமானது. முதலில் இறைவணக்கத்துக்காக எல்லோரும் எழுந்து நின்ற போது உறுப்பினர் அ.ம.மங்களநேசன் பிரதிமேயரைக் கைதுசெய்தது தவறெனக் கூறிக் கண்டித்து சபையை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் மாநகர சபைக் கீதம் இசைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து உறுப்பினர் கனகரட்ணம் பிரதி மேயரின் கைது தவறானதெனவும் இதைக் கண்டித்து சபையை ஒத்திவைக்க வேண்டுமெனவும் கோரினார்.

இதற்குப் பதிலளித்த சபை உறுப்பினர் பரஞ்சோதி, நீதித்துறையின் செயற்பாடுகளை கண்டிக்கும் உரிமை சபைக்குக் கிடையாது எனவும் இது தனிப்பட்ட துரைரசா இளங்கோ என்பவரது பிரச்சினை எனவும் சபைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை எனவும் ஆகையினால் நீதித்துறைக்கு எதிராக தீர்மானம் எதுவும் எடுக்கமுடியாது எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இத்தீர்மானத்தை எதிர்ப்பதாகவும் கூறினார்.

### சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வெளிநடப்பு

இதைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த சபை உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். அவர்களைத் தொடர்ந்து முதல்வரும் இதேகாரணத்தைக் கூறி வெளிநடப்புச் செய்தார்.

இந்த வேளையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எட்டு உறுப்பினர்களும் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக போதிய கூட்ட நடப்பெண்ணான மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களைக் கொண்டிருந்த படியினால் தம்மிடையே இருந்து தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்து கூட்டத்தை நடத்த முடிவு செய்தனர்.

இந்த நேரத்தில் செயலாளரது சமரச முயற்சியினால் நீதித்துறையின் செயற்பாடுகள் பாதிக்கப்படாத வகையில் மாநகர சபையானது தனது கூட்டத்தை ஒத்திவைக்கலாம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

### தீர்மானம் நிறைவேற்றம்

இதற்கமைய வெளியேறிச் சென்ற சபை உறுப்பினர்கள் முதல்வர் ஆகியோர் திரும்பவும் சமுகமளித்து பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றினர்:

பிரதி முதல்வர் கைதுசெய்யப்பட்டது நீதிக்கும் சட்டத்துக்கும் உட்பட விடயம். இதில் தலையிட இந்தசபைக்கு உரிமை இல்லை. ஆனால் இந்தக் கைதின் பொருட்டு அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் ஏற்பட்ட மன உளைச்சலில் சபையும் பங்கேற்று அவர் மீண்டும் சபை நடவடிக்கைகளில் பங்கேற்கும்வரை சபைக் கூட்டத்தை ஒத்திவைப்பதென சபை ஒருமனதாகத் தீர்மானித்தது.

இப்பிரேரணை சபை உறுப்பினர் அ.ம.மங்களநேசன் முன்மொழிய உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் வழிமொழிய ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ஒ-111)

# கொம்பனித்தெரு பகுதி மக்களை ஏமாற்றிய முஸ்லீம் அமைச்சர்கள்

கொழும்பு,மே 13

கொம்பனித்தெரு வீடுகள் இடித்து அகற்றப்படுகின்றமையைத் தடுப்பதற்காக நீதிமன்ற உதவியைப்பெற முற்பட்ட கொம்பனித்தெரு மக்களைத் தடுத்து நிறுத்தியவர்கள் சில முஸ்லிம் அமைச்சர்கள்தான் என்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி சுஜீவ சேரசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியை நம்பி கொம்பனித்தெரு மக்களை ஏமாற்றிவிட்டனர் என்றும் அவர் சொன்னார்.

கொழும்பு குடியிருப்பு பாதுகாப்பு மன்றம் நேற்று தாருஸ்ஸலாமில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வீடுகள் உடைக்கப்படவிருப்பது தொடர்பாக நான்கு நாட்களுக்கு முன் சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அறிவிக்கப்பட்டது. இதைத் தடுத்து நிறுத்த நீதிமன்றத்தை நாடுவோம் என்று நான் அந்த மக்களிடம் கூறினேன். அந்த மக்களோ முஸ்லிம் அமைச்சர்கள் சிலருடன் தொடர்பு கொண்டனர்.

ஆனால், அந்த அமைச்சர்களோ நீதிமன்றத்தை நாடவேண்டாம். ஜனாதிபதியிடம் பேசி நாம் இதைத் தடுத்து நிறுத்துவோம் என்று அந்த மக்களிடம் வாக்குறுதி அளித்தனர். அதை நம்பி அந்த மக்கள் நீதிமன்றம் செல்லவில்லை.

கடைசியில் அந்த மக்களைக் காப்பாற்ற அந்த அமைச்சர்கள் முன்வரவில்லை. வீடுகளை இழந்து நடுவீதியில் நிற்கும் அந்த மக்களைப் பார்ப்பதற்குக் கூட அந்த அமைச்சர்கள் வரவில்லை. - என்றார்.

# யாழ்.மாவட்ட மத்தியஸ்தசபை தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,மே13

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் சேவைகளை மக்களுக்கு பயனுள்ள விதத்தில் அமையும் வகையில் விளக்கமளிக்கும் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வரவேற்பு உரையை மாவட்டச் செயலாளர் கே.கணேசும் அறிமுக உரையை நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலர் திருமதி கமலினி டீ சில்வாவும் வழங்கவுள்ளனர்.

மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் பதில் செயலாளர் டி.டி.அரந்தரா, மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் சட்டங்கள் தொடர்பான விளக்கவுரையை நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசகர் எம்.திருநாவுக்கரசும் வழங்குவர்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியும் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் ஆணையாளருமான நிமால் திஸாநாயக்கா, மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் ஆணையாளர் எம்.சோமசுந்தரம், பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜி.பி.அமரக்கோன், மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட நீதிபதி, நீதிவான் நீதிமன்ற நீதிபதி, பிரதேச செயலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மத்தியஸ்த சபைகளின் தவிசாளர்களும் கலந்துகொள்வுள்ளனர்.

உரைகள் நிறைவுற்றதும் மாலை 4.30மணிக்கு குழுநிலை விவாதமும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் அரசியல் தீர்வு

# ஒரு சமூகத்துக்குத் தோல்வியாகவும் மற்றையதன் வெற்றியாகவும் ஒருபோதும் அமையக்கூடாது

### புதுடில்லி மாநாட்டில் நிருபமா

கொழும்பு, மே 13

இலங்கையில் அதிகாரங்கள் வலுவான விதத்தில் பகிரப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள இந்தியா, அரசியல் தீர்வு என்பது ஒரு சமூகத்துக்கான தோல்வியாகவும், மற்றைய சமூகத்துக்கான வெற்றியாகவும் ஒருபோதும் அமையக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது.

'இலங்கையின் சமாதான செயற்பாடுகளை முன்னோக்கி நகர்த்துதல்' என்ற தலைப்பில் புதுடில்லியில் நடைபெற்ற ஒப்சேவர் றிசேர்ச் பவுண்ரேசனின் புலமையாளர்கள் கலந்துகொண்ட மாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையிலேயே இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாண சபைகளுக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்கும் நோக்குடனேயே அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கையில் கொண்டுவரப்பட்டது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு இலங்கையில் பரவலான வரவேற்புக் கிடைத்துள்ளது. மாகாண சபைகள் செயற்படுவதற்கான அடித்தளமாக அதுவே அமைந்துள்ளது. இதனை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

இதில் சில விவகாரங்கள் உள்ளன. பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் போன்றவை குறித்த பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது, இந்த அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு எவ்வாறு வழங்குவது என்பன குறித்து நாங்கள் இன்னமும் ஆராய்ந்து வருகிறோம்.

அதிகாரங்களை வலுவான விதத்தில் பகிர்வது, அரசமைப்பின் முன்னால் அனைவருக்கும் சமவாய்ப்பு, சிறுபான்மை சமூகத்தின் கரிசனைகளுக்குத் தீர்வு காணுதல் போன்றவற்றின் மூலம் பிரிவினை வாதச் சக்திகளைக் கட்டுப்படுத்தலாம். கருத்து வேறுபாடுகளுக்கு வெளிப்படை ரீதியான ஜனநாயகத் தீர்வைக் காணலாம் என்பதை இந்தியாவின் ஜனநாயகத்துடனான பரிசோதனைகள் புலப்படுத்தியுள்ளன.

(அ-சி)

✱ (இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் உரையில் ஒரு பகுதி நேற்றைய உதயனின் முதலாம் பக்கத்தில் வெளியாகி இருந்தது.)

# பொன்சேகா மீதான விசாரணைகளை இழுத்தடிக்காமல் விரைவில் முடியுங்கள்!

### கொழும்பு நீதிமன்றம் சி.ஐ.டியினருக்கு உத்தரவு

கொழும்பு, மே 13

முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய நேற்று கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

''வன்னியில் நடந்த போரின் இறுதிக் கட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் வந்த விடுதலைப் புலித் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்'' என்று 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு பொன்சேகா வழங்கியிருந்தார் எனக் கூறப்படும் செவ்வியின் அடிப்படையிலேயே அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

நீதிமன்ற அமர்வு ஆரம்பமானதும் ''இன்று என்ன தினம்? பயங்கரவாதத்தை அழிப்பதற்காகப் போராடிய இராணுவ வீரர்களுக்கு மதிப்பளிக்கும் தினமல்லவா...?'' என்று அரச தரப்புச் சட்டத்தரணியைப் பார்த்துக் கேட்டார் நீதிவன் சாம்பா ஜானகி ராஜரட்ண. அவரது அந்தக் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சட்டத்தரணிகள் அமைதியாக இருந்தனர். அப்போது நீதிவான் ''இன்று பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிய இராணுவ வீரர்களுக்காக தினம் அனுஷ்டிக்கிறோம். ஆனால் அந்தப் போரிலே முக்கியமானவராகச் செயற்பட்ட ஒருவர் நீதிமன்றத்திலே நிற்கிறார்'' என்று விசனத்துடன் கூறினார். இந்த வழக்கில் பொன்சேகா மீதான விசாரணைகளை இழுத்தடிக்காமல் துரிதமாக முடிக்குமாறு நீதிவான் சி.ஐ.டியினரிடம் காட்டமாகக் கூறினார்.

சரத் பொன்சேகாவை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைப்பது அவரது உயிருக்கு அச்சுறுத்தலானது என்பதால் இராணுவக் காவலின் கீழ் அவர் வைக்கப்பட வேண்டுமென சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.எனவே மீண்டும் அவரை இராணுவப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-சி)

# கனடாவில் புலிகளுக்கு நிதி சேகரித்த இலங்கையருக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, மே 13

கனடாவில் விடுதலைப் புலிகள் அமைப்பிற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த இலங்கையர் ஒருவருக்கு எதிராக கனேடிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்தவரான பிரபாகரன் தம்பித்துரை என்பவர் மீதே, விடுதலைப் புலிகள் அமைப்பிற்காகக் கனடாவில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு எதிராக கனடாவின் பயங்கரவாத நிதிச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டுள்ளனவா என்பது குறித்துத் தமது குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என செயலாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள், சுட்டிக் காட்டப்பட்டவர்கள், திணைக்களத்தின் அறிக்கையின் தன்மை மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தமது குழு விசாரணைகளை நடத்திவருகிறது எனவும் -

அத்துடன், யுத்தத்தில் சிறார்கள் மற்றும் பொதுமக்கள் மீதான பாதிப்பு, சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை, காணாமற்போனவர்கள், மனிதாபிமானத் தன்மைகள் போன்ற ஐந்து விடயங்களின் அடிப்படையில் தமது குழு விசாரணைகளை நடத்திவருகிறது எனவும் சமரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த 5 விடயங்களின் கீழ் சுமார் 300 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும், அதற்கான உரிய காரணங்கள் அல்லது தடயங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

அத்துடன், அந்த அறிக்கையில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமைக்கான நீதி முறையிலான முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை சமரக்கோனின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரை தமது குழு உயர் பாதுகாப்பு அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளிவாய்க்கால் வைத்தியசாலைகளின் அதிகாரிகள், அரச அதிகாரிகள் ஆகியோரிடம் பதிவுகளைப் பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், யுத்த சூனியப் பிரதேசத்தில் இருந்த மக்களுக்கும், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மக்களுக்கும் உரிய உணவுகள் மற்றும் மருந்துகள் கிடைக்கவில்லை போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக எமது குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

எமது குழுவுக்கு விசாரணைச் சட்டத்தின் கீழான ஆணைக்குழுவின் அதிகாரங்கள் வழங்கப்படாமையால் தகவல்களைத் திரட்டுவதில் தாமதங்கள் ஏற்பட்டன. எனவே, அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எமது குழு சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்குத் தீர்மானம் மேற்கொள்ளவில்லை.

எனினும், எமது குழுவின் அறிக்கையும் அதன் காரணங்களும் பரிந்துரைகளும் எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் - இப்படி சமரக்கோன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களுடன் தங்கியுள்ளனர். இவர்களும் துரிதமாக மீள்குடியேற்றப்பட உள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 4ஆம் திகதி கூடிய சங்கம் சாவகச்சேரி நீதிவானுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலைக் கவனத்தில்கொண்டு கண்டனத்தை தெரிவித்ததுடன், நிலைமை சீரடைய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளும் அறிவுறுத்தல்களும் செயற்படுத்தும் வரை நீதிமன்றைப் பகிஷ்கரிப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் சட்டத்தரணிகள் கலந்துகொண்டு சட்டமும் நீதி, நிர்வாகம் சீர்குலைந்து இருப்பதை அங்கு கூடியிருந்த பொலிஸ், இராணுவ,சிவில் அதிகாரிகளுக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் நிலைமையை விளக்கினர்.

அதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் அக்கூட்டத்தில் விளக்கப்பட்டது.

இதனையடுத்து நீதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் சந்தேக நபர்கள் கைது செய் யப்படுவது சரியான நடவடிக்கைகள் என்று சங்கம் ஏகமனதாக முடிவெடுக் கின்றது.

சங்கத்தின் தலைவர் முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தலைமையில் நேற்றுக்கூடிய கூட்டத்தில் நீதிமன்றக் கடமைகளுக்குத் திரும்புவது என ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது-என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-சி)

## பார்வதியம்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜேந்திரன் என்னும் மருத்துவரிடமே சிகிச்சை பெற்று வந்தார். அவரிடம் சிகிச்சை பெறும் உரிமை இந்த நிபந்தனை மூலம் தடுக்கப்பட்டது.)

✱ அரசியல் கட்சிகளோடோ அல்லது வேறு குழுக்களுடனோ எவ்விதத் தொடர்புகளையும் ஏற்படுத்தக் கூடாது.

✱ ஊடகங்களுக்கு எவ்வித செய்திகளையோ அறிக்கைகளையோ வழங்கக் கூடாது.

✱ வைத்தியசாலை தவிர்ந்த வேறு எந்த இடங்களிலும் தங்க முடியாது.

✱ பெயர் குறிப்பிடப்பட்ட ஒருசில உறவினர்களோடு மாத்திரமே தொடர்பைப் பேண வேண்டும்.

என்பன போன்ற கடும் நிபந்தனைகளை பார்வதியம்மாவும் அவரது உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதேவேளை கொழும்பில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு பாதுகாப்புப் பிரச்சினைகளும், பொருளாதாரக் காரணங்களும் இடையூறாக இருந்தன. இந்நிலையிலேயே யாழ்ப்பாணத்துக்கு வந்து சிகிச்சை பெற பார்வதியம்மா முடிவெடுத்தார்.

### மலேசியாவிலிருந்து திரும்பிவந்த காரணம்

ஏப்ரல் 17 ஆம் திகதி இந்திய விமான நிலையத்தில் வைத்து பார்வதியம்மா மலேசியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட போது கோலாலம்பூருக்குள் உள் நுழைவதற்கான அனுமதி அவருக்கு இருக்கவில்லை. எனினும், மனிதாபிமான அடிப்படையில் மே 10ஆம் திகதி வரை தங்கியிருக்க மலேசிய அரசு அனுமதித்தது. எக்காரணம் கொண்டும் இந்த அனுமதி நீடிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. கடைசி நாள் கூட அதிகாரிகளிடம் அவரின் நிலையை எடுத்துச் சொல்லியும் அவர்கள் தொடர்ந்து தங்கியிருக்க அனுமதிக்கவில்லை. இந்நிலையில் 10ஆம் திகதி பார்வதியம்மாவை அழைத்துக் கொண்டு கொழும்பு வந்தேன்.

### மே 18 நெருங்குகையில் பார்வதியம்மா ஏன் வந்தார்?

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் இராணுவப் புலனாய்வாளர்கள் எம்மை அவதானித்துவிட்டு 'பார்வதியம்மா திடீரெனத் திரும்பி வந்தமைக்கான காரணம் என்ன? மே 18 நெருங்குகையில் அவர் வந்தது ஏன்?' என்று என்னைத் தொலைபேசி மூலம் விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது எல்லாச் சோதனைச் சாவடிகளிலும் நாம் வருவது உறுதிப்படுத்தப்பட்டு உடனுக்குடன் மேலிடத்துக்குத் தகவல் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது.

இப்போது என்னுடைய பராமரிப்பில் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள பார்வதியம்மாவின் நிலை விசேடமாகச் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை.

இதேவேளை இந்திய அரசு விதித்துள்ள நிபந்தனைகளை அது விலக்கிக் கொள்ளுமாயின் இந்தியாவுக்குச் சென்று சிகிச்சை பெறுவது தொடர்பாக பார்வதியம்மாவும் உறவினர்களும் பரிசீலிக்கத் தயாராகவே உள்ளனர் என்று கூறினார். (ஒ-எ)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையில் உத்தியோகபூர்வமான அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

## நாடுகடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் அந்த அமைப்பின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு எதிராக அரசினால் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பு, தற்போது சர்வதேச ரீதியில் வியாபித்துவரும் புலிகளின் இரண்டாம் கட்டப் பயங்கரவாத நடவடிக்கையைத் தடுக்கவும் அனைத்துத் தரப்பினராலும் வழங்கப்பட வேண்டும் என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையாமையினால் மீண்டும் அதனைத் திருத்தி, சரியான முறையில் - பொருத்தமான முறையில் - பிரசுரம் செய்யுமாறு யாழ்.நீதிமன்றம் மாநகரசபைக்கு உத்தரவிட்டுள்ளது.

நீதித்துறையை அவமதிக்கும் வகையில் வெளியாகியிருந்த குறிப்பிட்ட விளம்பரம் தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். மாநகரசபை அதிகாரிகளை மன்றுக்கு அழைத்த யாழ்.நீதிமன்ற நீதிவான் இந்த விளம்பரம் தொடர்பான மறுப்பு விளம்பரம் ஒன்றை நேற்றைய (12.05.2010) பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

நீதிவானின் உத்தரவுக்கமைய நேற்றைய பத்திரிகைகளில் யாழ்.மாநகரசபையினால் பிரசுரிக்கப்பட்டிருந்த விளம்பரம் நீதிமன்றுக்குத் திருப்திகரமாக அமையவில்லையென யாழ்.மாநகரசபை அதிகாரிகளுக்கு நீதிவான் சுட்டிக்காட்டினார்.

எனவே சரியான - பொருத்தமான - விளம்பரத்தை மீண்டும் பத்திரிகைகளில் வெளியிடுமாறும், அதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்.நீதிமன்றம் மாநகரசபை உயர்மட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (ஒ-50)

## யுத்தக் குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் எனத் தெரிவித்துள்ள லூயிஸ் ஆர்பர் அம்மையார், சர்வதேச சுயாதீன விசாரணைகள் இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சுயாதீன சர்வதேச விசாரணைகள் இடம்பெறுவது இலங்கையில் சமாதானம் நீடித்து நிலைப்பதற்கு அவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினரும் விடுதலைப் புலிகளும் மோதலின் இறுதி ஐந்து, ஆறு மாதங்களில் தொடர்ச்சியாக சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறினர் என்று தெரிவித்துள்ள ஆர்பர், ஜனவரி 2009ஆம் ஆண்டு முதல் அரசு வெற்றியை அறிவிக்கும் நாள் வரையில் உரிமை மீறல்கள் மிக மோசமானவையாகவும், அதிகளவில் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். (அ-சி)


## நூலகர் தேவை

இணுவில் சனசமூக நிலையப் பொதுநூலகத்திற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (நூலக சார் அறிவு விரும்பத்தக்கது) விண்ணப்பதாரிகள் சுயவிவரக்கோவையுடன், சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் பிரதிகளுடனும் 16.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் பொதுநூலகம், மானிப்பாய் வீதி, இணுவில் என்னும் முகவரிக்கு நேரடியாகச் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

(சி/567593) நிர்வாகம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org